Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



மழைக்கான சாத்தியம் உண்டு.
27.°C 26.°C

 சுடர்: 28 ■ கதிர்: 339 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 15, வெள்ளி 01.11.2013

# வாருங்கள் வடக்குக்கு மன்மோகனுக்கு அழைப்பு

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் விடுத்தார்



யாழ்ப்பாணம், நவம்பர் 1
வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்து இங்குள்ள நிலைமைகளைப் பார்வையிடுமாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.
மன்மோகனுக்கு அனுப்பிய கடிதம் கிடைக்கப்பெற்றுள்ளதாக இந்தியப் பிரதமர் அலுவலகத்தின் ஊடகப் பேச்சாளர் நேற்று 'த ஹிந்து' நாளிதழுக்கு தெரிவித்துள்ளார்.
கடிதம் அனுப்பப்பட்ட தகவலை நேற்று 'உதயனி'டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் உறுதிப்படுத்தினார்.
வடக்கு மாகாணசபையின் கன்னி அமர்வு கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற தினத்தன்றே வடக்குக்கு வருமாறு இந்தியப் பிரதமருக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் கடிதம் எழு தியுள்ளார் என்று சம்பந்தன் குறிப்பிட்டார்.
அந்தக் கடிதத்தில், "நீண்ட காலத்துக்குப் பின்னர் நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டி மாகாணசபையைத் தன்வசப்படுத்தியுள்ளது. இந்த நிலையில், மாகாண சபையின் கன்னி அமர்வு இன்று முதலமைச்சர், அமைச்

21

## வடக்கு ஆளுநரை மாற்ற கூட்டமைப்பால் முடியாது

### உறுதியாகத் தெரிவித்தது அரசு

கொழும்பு, நவ. 1
வடக்கு மாகாண ஆளுநராக பதவி வகிக்கும் முன்னாள் இராணுவ அதிகாரியை நீக்கிவிட்டு அப்பதவிக்கு சிவில் அதிகாரியொருவரை நியமிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசிடம் விடுத்துள்ள கோரிக்கைக்கு அரசு சாதக பதிலை வெளியிடவில்லை.
"வடக்கு ஆளுநரை நீக்குமாறு கூட்டமைப்பால் கோரிக்கையை மாத் திரமே விடுக்க முடியும். இது தொடர்பில் தீர்மானிக்கும் சக்தி அரசிடமே இருக்கின்றது. குறித்த கோரிக்கை முக்கிய விடயமல்ல" என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று பிற்பகல் அரச தகவல் திணைக்களத்

21

## பஸ் கட்டணம் இன்று முதல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.1
யாழ். மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களின் பயணக் கட்டணம் இன்று வெள்ளிக்கிழமை முதல் அதிகரிக்கப்படுவதாக யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம் அறிவித்துள்

21

## எமது நிலங்களை மீட்க உதவுங்கள்

### தென் கொரியத் தூதுவரிடம் வலி.வடக்கு மக்கள் முறையீடு

யாழ்ப்பாணம், நவ.01
"எமது நிலங்களை மீட்டுச் சொந்த மண்ணில் வாழ்வதற்கு ஏற்பாடுகள் செய்து தர வேண்டும்" என்று நலன்புரி நிலையங்களிலுள்ள வலி. வடக்கு மக்கள் கொரியத் தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள இலங்கைக்கான தென்கொரியத் தூதுவர், வலி. வடக்கு மக்கள் தங்கியுள்ள சபாபதிப்பிள்ளை முகாம் மற்றும் கண்ணகி முகாம் என்பவற்றுக்குச் சென்றார். அங்குள்ள மக்களை அவர் நீண்ட

21

## மாநாட்டில் 37 நாடுகள் பங்கேற்கும்

கொழும்பு, நவ.1
இலங்கையில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டில் பங்கேற்பதை 37 நாடுகளின் அரச தலைவர்கள் இது வரையில் உறுதிப்படுத்தியுள்ளனர் என்றும், ஏனைய அங்கத்துவ நாட்டு தலைவர்கள் தமது நிலைப்பாட்டை இன்னும் சில நாள்களில் அறிவிப்பார்கள் என்றும் அரசு நேற்று தெரிவித்தது.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று பிற்பகல் அரச தகவல் திணைக்களத்

21

## இயன் பொத்தம், கங்குலி இன்று கிளிநொச்சிக்கு



யாழ்ப்பாணம், நவ.01
இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் இயன் பொத்தம் மற்றும் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி ஆகியோர் இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளனர்.
வடக்கு மாகாணத்தில் இன்று ஆரம்பமாகும் முரளி கிண்ணத்துக்கான 20/20 கிரிக்கெட் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் இருவரும் இன்று கிளிநொச்சிக்கு வருகின்றனர்.
கிளிநொச்சிக்கு

21

## வெள்ளை மாளிகை உயர் அதிகாரிகளை சந்திக்கிறார் அனந்தி

நியூயோர்க், நவ.1
அமெரிக்க வெள்ளை மாளிகையின் உயர் அதிகாரிகளையும், வெளியுறவு அமைச்சின் அதிகாரிகளையும் சந்திப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், காணமற் போனோர் தொடர்பிலான ஆட்கொணர்வு மனுவில் மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான மனித உரிமைகள் சிரேஷ்ட சட்டத்தரணி கே.ரட்ணவேல் இருவரும் அமெரிக்காவுக்கு நேற்றுப் பயணமாகியுள்ளனர்.
ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு திருமதி அனந்தி சசிதரன், அமெரிக்கா செல்வதற்கான ஒழுங்குகளை செய்துள்ளது.
இவருடன், இறுதிக் கட்டப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற் போனவர்கள் மனுக்களின் விசாரணைகளில் மனுதாரர்

21

## வட பகுதிக்கு வருகிறார் நியூஸிலாந்து அமைச்சர்



யாழ்ப்பாணம், நவ.01
போருக்குப் பின்னரான வடக்கு மாகாணத்தின் நிலைமைகள் தொடர்பில் நேரில் ஆராய்ந்து பிரதமருக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக அங்கு பயணம் செய்யவுள்ளதாக நியூஸிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் முரே

21

## வடக்கில் வீடுகளை இராணுவம் இடித்தழிப்பதில் தவறேயில்லை

### இப்படிக் கூறுகிறார் குணதாஸ

கொழும்பு, நவ. 1
"வடக்கில் தமிழர்களின் வீடுகளை இராணுவத்தினர் உடைப்பதில் எந்தவித தப்பும் இல்லை" என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர நேற்று தெரிவித்தார்.
"அத்தோடு, தேசிய பாதுகாப்புக்காக இராணுவத்தினர் செய்யும் இது போன்ற செயல்களுக்கு தமிழர்களும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்" எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.
வடக்கில் தமிழர்களின் வீடுகள் இராணுவத்தினரால் பலவந்தமாக உடைக்கப்படும் செயற்பாடு குறித்துக் கேட்ட போதே குணதாஸ அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:

21

# 2 மாதச் சம்பளத்தை வழங்குமாறு இ.போ.ச ஊழியர் பணிப் புறக்கணிப்பு

## பொதுமக்கள், மாணவர்கள் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், நவ.1

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் உள்ளூர் சேவையில் ஈடுபடும் பஸ்கள் நேற்று வியாழக்கிழமை சுமார் 3 மணிநேரம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டதால், பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டனர்.

உள்ளூர் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பஸ் சாரதிகள், நடத்துநர்களுக்கு இரண்டு மாதச் சம்பளக் கொடுப்பனவுகள் இலங்கைப் போக்குவரத்துச் சபையால் இது வரை வழங்கப்படவில்லை. இதையடுத்து பஸ் சாரதிகள், நடத்துநர்கள் நேற்றுத் திடீரென நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை சேவையை இடைநிறுத்திப் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.



“இரண்டு மாதச் சம்பளக் கொடுப்பனவுகள் இலங்கைப் போக்கு வரத்துச் சபையால் இது வரை வழங்கப் படவில்லை.

பாடசாலைகள் முடிவடையும் நேரத்தில் இந்தப் பணிப் புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டதால் பருவகாலச் சீட்டுடன் நகர்ப் பாடசாலைகளுக்கு வந்த மாணவர்கள் தனியார் பஸ்களில் செல்வதற்குப் பணம் கூட இல்லாமல் தரிப்பிடங்களில் காத்திருந்தனர்.

எனினும் சுமார் 3 மணி நேரத்தின் பின்னர் சம்பள நிலுவைக் கொடுப்பனவு வழங்கப்படும் என உறுதிமொழி அளிக்கப்பட்டதை அடுத்து சாரதிகள், நடத்துநர்கள் சேவையைத் தொடர்வதற்குச் சம்மதித்தனர்.

நாளை தீபாவளிப் பண்டிகை என்பதால் யாழ்.நகருக்குள் அதிகளவான சனக் கூட்டம் காணப்பட்டது. இ.போ.ச. பஸ்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டதால் தனியார் பஸ்களில் அளவுக்கதிகமான பயணிகள் பயணித்ததை அவதானிக்க முடிந்தது.

முன்னறிவித்தல் இல்லாத அந்தப் பணிப் புறக்கணிப்பால் மாணவர்களும் சிரமங்களை எதிர்கொண்டனர். (த-14)

# பெருமளவு கஞ்சா பாரதிபுரத்தில் மீட்பு

## சந்தேகத்தில் ஒருவர் கைது

கிளிநொச்சி, நவ. 1

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் கஞ்சா வைத்திருந்த சந்தேகத்தில் பொலிஸார் ஒருவரை நேற்று கைதுசெய்துள்ளனர். அவரிடமிருந்து பெரு 19 1/2 கிலோ கஞ்சாவும் கைப்பற்றியுள்ளனர்.

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் தேடுதலை மேற்கொண்டபோது மலையாளபுரம் பகுதியில் ஒருவர் மாட்டியுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 2 கிலோ மற்றும் ஒரு கிலோ எனப் பொதி செய்யப்பட்ட ஒன்பது பொதிகளைப் பொலிஸார் கைப்பற்றினர்.

“2 கிலோ மற் றும் ஒரு கிலோ எனப் பொதி செய்யப்பட்ட ஒன்பது பொதி கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகளையும் சந்தேக நபரையும் இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்திரகுமார வீரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை இப்பகுதியில் கஞ்சா விற்பனை செய்த பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-6-400)

# மன்னார் தேவன் பிட்டியில் பாலம் திறந்து வைப்பு

மன்னார், நவ.1

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்ட 'சோஆ' நிறுவனத்தினால் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தேவன்பிட்டி கிராமத்தில் அமைக்கப்பட்ட பாலம் நேற்று வியாழக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.


ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய சுமார் 2.7 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் அக்கிராம மக்களின் பங்களிப்புடன் குறித்த பாலம் மன்னார் மாவட்ட 'சோஆ' நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டது.

நேற்று வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் இந்தப் பாலம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலை தீவுக்கான தூதுவர் டேவிட் டாலி, ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாட்டுப் பிரிவுக்கான தலைவர் வில்லி வடன்



பேக், நிகழ்ச்சித் திட்ட அபிவிருத்திப் பிரிவு முகாமையாளர் லெஸ்லி ஜேசுராஜன் 'சோஆ' நிறுவனத்தின் இலங்கைக்கான நன்கொடைப் பிரிவின் தலைவி றெபேக்கா ஓவன், மன்னார் மாவட்ட 'சோஆ' நிறுவனத்தின் முகாமையாளர் ஜோர்ச் அந்தோனிப்பிள்ளை, மன்னார் மாவட்டக் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் வி.எஸ். மெராண்டா, மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக அலுவலர் முஹமட் ஹஜிக், கரையோரப் பாதுகாப்பு திணைக்கள திட்டமில் அலுவலர் முஹமட் ஹலிம், தேவன் பிட்டி பங்குத்தந்தை அருட்தந்தை நேரு ஆகியோர் கலந்துகொண்டு குறித்த பாலத்தை திறந்து வைத்தனர். (த-12)



கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் படை முகாம் அமைக்கும் நடவடிக்கையில் படையினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். துயிலும் இல்லத்தைச் சுற்றி முள்ளுக்கம்பிகளாலான பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது. (த-426)

## பிற்போடப்பட்டது

ஊர்காவற்றுறை பிரதேசசபையால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களின் திறப்பு விழா இன்று நடைபெறாதென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் அறிவித்துள்ளார்.

## சாரணர் தீபாவளி

யாழ். மாவட்ட சாரணர் சங்கம் நடத்தும் சாரணர் தீபாவளி தின நிகழ்வுகள் இன்று பி.ப 2மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன. நிகழ்வில் சாரணர்கள், சாரணத்தலைவர்களை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஜ-400)

# பண்டார வன்னியன் நினைவு வவுனியாவில்

வவுனியா நவ. 1

மாவீரன் பண்டார வன்னியனின் 210ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் வவுனியாவில் நேற்று வியாழக்கிழமை சிறப்பாக இடம்பெற்றன.

வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள மாவீரன் பண்டார வன்னியனின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்ததுடன் நிகழ்வு ஆரம்பமாகியது.

வவுனியா மாவட்ட அரச அதிபர் பத்துல ஹரிச்சந்திர, வவுனியா பிரதேச செயலர் எஸ். உதயராசா, வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப் பினர்களான இ.இந்திரராசா, எம். தியாகராசா, ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா தெற்கு பிரதேச சபைத் தலைவர் எஸ். சிவலிங்கம் உட்பட பலரும் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்தனர்.



தொடர்ந்து வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் மாவீரன் பண்டார வன்னியனின் நினைவுரைகளும் இடம்பெற்றன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கல நாதன், வினோ நோகராதலிங்கம் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (த-400-402)

## ஆண்டு விழா

இலங்கை மின்சார சபையின் 44வது ஆண்டு விழா நாளை கொண்டாடப்படவுள்ளது. அதனை முன்னிட்டு அன்றையதினம் மின்சார சபையின் யாழ் பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் சுன்னாகம் மயிலங்காடு முருகன் பாடசாலை மற்றும் சுன்னாகம் றோ.க.த.க பாடசாலை ஆகியவற்றில் சிரமதானம் யாழ். பிராந்திய உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படவுள்ளது. சுன்னாகத்தில் இரத்ததான முகாமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் யாழ் பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. (ஒ)

மாபெரும் மலிவு விற்பனை
புதிய மெருகூட்டலுடன்
மாபெரும் மலிவு விற்பனை
தீபாவளியை முன்னிட்டு
10% – 20% வரை
சிறார்களுக்கான ஆடைகள் மலிவு விலையில்
ABI BABY MART SHOW ROOM
3000/= இற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களிற்கு பரிசுகள் காத்திருக்கின்றன.
★ Home Theatre ★ Water Filter ★ Rice Cooker ★ 5 ஆறுதல் பரிசுகள்
புதிய முறையில் சைக்கிள் (Family Brand), கார் சீற், தொட்டில், வோக்கர், Toller
உங்கள் மழலைகளை மேலைத்தேய நவநாகரிகமான உலகிற்கு ஏற்றவாறு வளர்ப்பதற்கான
267, Brown Road, Jaffna. சகல பொருள்களையும் பெற்றிட. ABI BABY MART (Face book)

எழுதுமட்டுவாழ் தெற்கில்

## அனைத்து வயல்களிலும் காலபோகச் செய்கை

தென்மராட்சி, நவ.1
எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் அனைத்து வயல்களிலும் இந்த வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதாக அந்தப் பகுதி கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்தார்.

அமைப்புக்குட்பட்ட செட்டு கேணி, பெரிய விழுபனை, குஞ்சு விழுபனை, ஒட்டு வெளி ஆகிய வயல்களிலேயே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த பிரதேசங்களில் 2011 இல் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பின்னர் கமக்கார அமைப்பினர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக கமநலத் திணைக்களத்தினர் வழங்கிய முட்கம்பியைப் பயன்படுத்தி வயல்களைச் சுற்றி முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டு, கடந்த வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த வருடம் வழங்கப்பட்ட முட்கம்பியின் உதவியுடன் வேலி அமைக்கப்பட்டதையடுத்து அனைத்துப் பகுதியிலும் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(வ-9)



முட்கம்பியை பயன்படுத்தி வயல்களைச் சுற்றி முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டு. கடந்த வருடம் காலபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

## மின்சாரம் தாக்கி இளைஞர் காயம்

வலி.வடக்கு, நவ.1
மின்சாரம் தாக்கி எரியுண்டதாகக் கூறி தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் இளைஞர் ஒருவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஏழாலையைச் சேர்ந்த மகாதேவா செந்தூரன் (வயது-25) என்பவரே இவ்வாறு மின்சாரத்தால் தாக்கப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை தோட்டத்துக்கு நீர் இறைப்பதற்காக மின்சார வயரைக் கொழுவிய வேளை அவரை மின்சாரம் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-86)

நாளை தீபாவளித் திருநாள்

# வெறிச்சோடின கடைகள் நடைபாதையில் வியாபாரம்



யாழ்ப்பாணம்,நவ.1
தீபாவளிப் பண்டிகைக்கான வியாபாரம் இந்த வருடம் குடாநாட்டு வர்த்தகர்களுக்குக் கைகொடுக்கவில்லை. வர்த்தக நிலையங்களில் வியாபாரம் இல்லாது யாழ்.நகர் சோபையிழந்த நிலையில் காணப்பட்டது. நகரங்களில் மட்டுமன்றி கிராமப் புறங்களிலும் நடைபாதை வியாபாரிகளே வர்த்தகத்தில் மும்முரமாக இருந்தனர். மக்கள் நடைபாதைக் கடைகளில் முண்டியடித்துக் கொண்டு புடைவைகள் மற்றும் நானாவித பொருள்களைக் கொள்வனவு செய்ததைக் காண முடிந்தது.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு குறிப்பாக உடு புடைவைகளை வாங்குவதற்காக கிராமப் புறங்களில் இருந்து பொதுமக்கள் யாழ். நகருக்கு வருகை தந்த போதும் யாழ்.நகர் வர்த்தக நிலையங்களுக்கு அவர்கள் செல்வதைக் காண முடியவில்லை. மாறாக முற்ற வெளிப் பகுதியில் தென்னிலங்கை வியாபாரிகளால் போடப்பட்டுள்ள நடைபாதைக் கடைகளை நோக்கி செல்வதை அவதானிக்க முடிந்தது.

நடைபாதைக் கடைகளில் மலிவான விலையில் உடுபுடைவைகளை வாங்கலாம் என்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியில் தோன்றியதால் கடைகளில் உடுபுடைவையை வாங்குவதில் மக்கள்ஆர்வம்காட்டவில்லை. கொளுத்தும் வெய்யிலுக்கு மத்தியிலும் குடைகளைப் பிடித்தவாறு தென்னிலங்கை வியாபாரிகளது நடைபாதைக் கடைகளில் சனக் கூட்டம் நிறைந்து காணப்பட்டது.

யாழ்.மாநகர சபையால் பிரத்தியேகமாக இடம் ஒதுக்கப்பட்டு இந்த நடைபாதைக் கடைகள் அமைக்கப்பட்டதால் நகர் கடைகளில் வியாபார நடவடிக்கைகள் சோபையிழந்து காணப்பட்டன.

கடந்த வருட தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் இந்திய வியாபாரிகளது வருகை அதிகமாக இருந்தமையால் நகர்க் கடை வர்த்தக நிலையங்களில் புடைவை வியாபாரம் பெரிய அளவில் இடம்பெறவில்லை. எனினும் இந்த வருடம் இந்திய வியாபாரிகளது வருகை தடை செய்யப்பட்டதால் தென்னிலங்கை வியாபாரிகள் கூடுதலாக நகருக்குள் உள்நுழைந்துள்ளனர். நகர்ப் புறங்களின் பிரதான சந்தைகளுக்கு அண்மையில் தமது நடைபாதைக் கடைகளை அமைத்து அவர்கள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் குடாநாட்டு வர்த்தகர்கள் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு தேவையான உடு புடைவைகளை கடைகளில் வாங்கிப் போட்டிருந்தும் அவற்றை விற்பனை செய்யமுடியாது திண்டாடுகின்றனர்.

யாழ்.நகருக்குள் உள்நுழையும் மக்கள் முற்ற வெளிப்பகுதியை நோக்கியே செல்வதாகவும் வர்த்தகர்கள் குறைகூறுகின்றனர். இந்த வருடமும் தமது வியாபார நடவடிக்கைகள் சோபையிழந்து போயுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (வ-14)

# வடக்கில் தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமை சமத்துவம் பேணப்பட வேண்டும்

### நினைவு தினத்தில் மாகாண சபை உறுப்பினர் அஸ்மின்

யாழ்ப்பாணம், நவ. 01
தமிழ்-முஸ்லிம் மக்களின் நல்லுறவை எதிர்காலத்தில் பேணுவதே எமது நோக்கம். இடம்பெற்ற கசப்பான எண்ணங்களில் இருந்து விடுபட்டு ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும். இவ்வாறு கூறினார் வட மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் அய்யூப்.

நேற்று முன்தினம் புதன் கிழமை யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் 'சமூக நல்லிணக்கமே அர்த்தமுள்ள மீள்குடியேற்றத்தின் அடிப்படை' என்ற கருப்பொருளில் நடைபெற்ற வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றத்தின் 23ஆம் ஆண்டு நினைவு தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

வடமாகாணத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டதன் சாதக, பாதக தன்மைகளை ஆராய்வதற்கு முன்னர் அதனை ஒரு வர லாறாக நோக்க வேண்டும். கடந்த காலங்களில் நடைபெற்ற சம்பவங்களை, வரலாறுகளை எதிர்கால சந்ததிக்கு எடுத்துச் செல்ல வேண்டிய தேவை எம்மிடத்தில் உள்ளது. வரலாறுகளை நினைவு கூருவது எதிர்கால செயற்பாட்டுக்கு துணையாக அமைய வேண்டும். வட மாகாண முஸ்லிம்கள் வெளியேற்றத்தை தொடர்ந்து உளரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்த கைய தாக்கங்களில் இருந்து வெளியேறி நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மறக்கப்பட முடியாத ஆழமான வரலாற்று வடுக்களுள் 1990களில் இடம்பெற்ற வடக்கு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றமும் அமைந்துள்ளது. முஸ்லிம்கள் மட்டுமன்றி வடக்கில் வாழ்ந்த தமிழர்களும் வெளியேற்றத்தின் பாரதூரத்தை உணர்ந்துள்ளனர்.

இன்று தமிழ்-முஸ்லிம் மக்களது நல்லுறவு அவசியமாகின்றது. வடக்கில் முஸ்லிம் சமூகத்தின் மீள்குடியேற்றங்கள் முன்னெடுக்கப்படுகின்ற இந்நிலையில் நிகழ்ந்த கசப்பான வரலாற்றுத் தவறுகளிலிருந்து விடுபட்டு சிறப்பான சமூக வாழ்வை உறுதி செய்ய வேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு பேச்சாளராக கலந்து உரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவசந்திரன், வரலாறுகளில் கறைபடிந்த சம்பவங்களும் நடந்தேறியுள்ளன. கடந்து வந்த பொழுதுகளில் இனி வரும் காலங்களுக்காக எம்மை தயார்படுத்த வேண்டிய தேவைஇப்போது எமக்கு ஏற்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தை பொறுத்தவரை தமிழ் - முஸ்லிம் மக்கள் மதங்களின் பெயரால் பிரிக்கப்பட்டுள்ளனரே அன்றி மொழியால் பிரிக்கப்படவில்லை. மொழியுடன் இணைந்த சமூகமே நல்லுறவுக்கு அவசியமாகின்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினராக அஸ்மின் தெரிவு செய்யப்பட்டதே வடக்கு மக்கள் முஸ்லிம்களை ஆதரிப்பதை தெளிவாகக் காட்டியுள்ளது.

தமக்கென ஒரு வரையறையை வைத்து தனி சமூகமாக தீவுக்குள் வாழாமல் அவர்கள் அனைத்து சமூகங்களுடனும் இணைய வேண்டும். ஒஸ்மானியாக் கல்லூரி மட்டுமே முஸ்லிம்களுக்கானது என்ற நிலை மாறியாழ்ப்பாண பாடசாலைகளில் எல்லாம் முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்கும் நிலை உருவாக வேண்டும். இவற்றை மக்கள் பிரதிநிதிகள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களின் வெளியேற்றம் தொடர்பான நினைவு தினத் தில் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாணசபைத் தவிசாளர் சி.வீ.கே.சிவஞானம், தகவல் வழிகாட்டல் மத்திய நிலையத்தின் முன்னாள் தலைவர் எம். எம்.நிபாஹிர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (வ-10)

ஆங்கில மருந்துப் பாவனையால்

## ஆயுள்வேத வைத்தியர்கள் ஐந்து பேர் மாட்டினர்

வலி.வடக்கு,நவ.1
கோப்பாய் பொது சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் சுகாதார வைத்தியதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போது ஆயுள்வேத வைத்தியர்கள் பலர் ஆங்கில மருந்துகளைப் பயன்படுத்துவது தெரிய வந்துள்ளது.

ஊர்காவற்றுறை, கோப்பாய், சண்டிலிப்பாய் மற்றும் உடுவில் பிரதேசங்களின் சுகாதார வைத்தியதிகாரிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் இணைந்து ஆயுள் வேத வைத்திய நிலையங்களில் அதிரடியாக பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது ஆங்கில மருந்து வகைகளை பயன்படுத்திய ஆயுள்வேத வைத்தியர்கள் ஐவர் இனங்காணப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து பெருமளவிலான ஆங்கில மருந்து வகைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் நீதிமன்றத்தில் அவர்களை இன்று முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-86)

"_"

ஊர்காவற்றுறை, கோப்பாய், சண்டிலிப்பாய் மற்றும் உடுவில் பிரதேசங்களின் சுகாதார வைத்தியதிகாரிகள் மற்றும் பொது சுகா தார பரிசோதகர்கள் இணைந்து ஆயுள் வேத வைத்திய நிலையங்களில் அதிரடியாக பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

## இசைக் கருவிகள் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், நவ.1
புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்துக்கு இசைக் கருவிகள் கொள்வனவுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தில் 90 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (வ-7)

## நவீன வசதிகளுடன் சங்கிலியன் பூங்கா

### மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.1

நல்லூர் யாழ்.முத்திரைச் சந்தியில் உள்ள யாழ். மாநகரசபைக்குரிய சங்கிலியன் பூங்கா (கிட்டுப் பூங்கா) திட்டமிட்டபடி யாழ்.மாநகர சபையில் நவீன வசதிகளைக் கொண்ட பூங்காவாக மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மாநகர சபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக காணி திணைக்களம் நல்லூர் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் பிரதேச செயலரால் மாநகர சபைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டபடி பூங்காவுக்கான காணி படையினரிடம் ஒப்படைக்கப்படமாட்டாது எனவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (வ-7)

### கோழி நோய் தடை மருந்தை

## சனிக்கிழமைகளில் வழங்கவும் பண்ணையாளர்கள் கோரிக்கை

அச்சுவேலி, நவ.1

கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரியின் அச்சுவேலி உப அலுவலகத்தில் சனிக்கிழமைகளில் கோழிகளுக்கான நோய்களுக்கு தடை மருந்து களை வழங் குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என பண்ணையாளர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியின் உப அலுவலகம் அச்சுவேலியில் அமைந்துள்ளது. அங்கு இதுவரை காலமும் தடை மருந்துகள் சனிக்கிழமைகளில் வழங்கப்பட்டு வந்தன. இந்த வாரத்தில் இருந்து சனிக்கிழமைகளில் தடை மருந்துகள் வழங்கப்படமாட்டாது. வாராந்தம் "செவ்வாய்க் கிழமைகளில் அவை வழங்கப்படும் " என அறிவிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமைகளில் தடை மருந்துகளை வழங்குவதன் மூலம் மாணவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் இலேசாக தடை மருந்துகளை பெற் றுக் கொள்ள முடியும் என்பதால் நாடளாவிய ரீதியில் சனிக்கிழமைகளில் கோழி களுக்கான நோய்த் தடை மருந்துகள் வழங்கப்படுகின்றன.

அதே நடைமுறையே யாழ்.மாவட்டத்திலும் பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால் நடைமுறை ஒழுங்குக்கு மாறாக அச்சுவேலி உப அலுவல கத்தில் மட்டும் செவ்வாய்க் கிழ மைகளில் மாத்திரம் தடை மருந்துகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)



### நெல்லியடியில் ஓட்டோக்களுக்கு மீற்றர்

வடமராட்சி, நவ.1

நெல்லியடியில் வாடகைச் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கு மீற்றர் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக 20 ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தப்பட்டு சேவையில் ஈடுபட்டு வருவதாகவும், ஏனைய ஓட்டோக்களுக்கும் விரைவில் மீற்றர் பொருத்தப்படும் என நெல்லியடி ஓட்டோ உரிமையாளர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

பயணிகள் இனிமேல் மீற்றர் முறையில் அறவிடப்படும் கட்டணத்தைச் செலுத்திப் பயணிக்கலாம் என அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-8)

## பெற்றோரை இழந்த மாணவருக்கு உதவிகள்

### காரைநகர் பிரதேச செயலர் பிரிவில்

காரைநகர், நவ.1

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 260 பிள்ளைகள், தாய், தந்தையர் அல்லது இருவரையும் இழந்தவர்களாகவும் தொழில் செய்யக்கூடிய ஆற்றல் அற்ற குடும்பத்தலைவர்களது பிள்ளைகளாகவும் கணக்கிடப்பட்டுள்ளனர். அவர்களின் கற்றல் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக காரைநகர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சிறுவர் தின விழாவில் தலா 500 ரூபா வீதம் ஒரு லட்சத்து முப்பத் தையாயிரம் ரூபா பெறுமதி யான அப்பியாசப் புத்தகங் களும் பால்மாப் பைக்கற் றுக்களும் 260 பிள்ளை களுக்கு வழங்கப்பட்டன.



அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் குறித்த சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், சீருடைகள், பாதணிகள், பிரத்தியேக வகுப்புக்களுக்கான கட்டணங்கள், போக்குவரத்துக்கான கட்டண செலவினங்கள் என்பவற்றை நிதி ரீதியாக அன்றிப் பொருள் ரீதியாக வழங்க சில அன்பர்கள் முன்வந்துள்ளனர். இந்த நடவடிக்கை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் எனவும் சமூக சேவையாளரும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான எஸ். கே.சதாசிவம் தெரிவித்துள்ளார். நிகழ்வில் கலந்து கொண்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், பால்மா அடங்கிய பொதிகளை வழங்கி வைத்தார். (வ-250)

### மாற்றுவலுவுடையோருக்கான சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான மருத்துவப் பரிசோதனை

கிளிநொச்சி, நவ.1

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான மருத்துவப் பரிசோதனை எதிர் வரும் 7 ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் நடை பெறும்.

சாரதிய அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பிக்கவுள்ள கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுவலுவுள்ளோரை அதற்கான மருத்துவப் பரிசோதனையில் கலந்துகொள்ளுமாறு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் மாற்றுவலுவுள்ளோருக்கான மருத்துவப் பரிசோதனை கொழும்பில் நடத்தப்பட்டு வந்தது.

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் பிரிவினால் கிளிநொச்சியில் நடத்தப்பட்ட மாற்றுவலுவுள்ளோருக்கு சாரதிய அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பான செயலமர்வில் பெருந் தொகையானோர் கலந்து கொண்டனர். இந்த விடயம் தொடர்பாக அரச அதிபர் உரிய திணைக்கள அதிகாரிகளுடன் கலந்து- ரையாடினார். அதனையடுத்து மருத்துவப் பரிசோதனைகளை நடத்த பத்து மருத்துவ அதிகாரிகள் வருகை தரவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

மாற்றுவலுவுள்ளோருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான மருத்துவப் பரிசோதனை முதன்முறையாக கிளிநொச்சியில் நடத்தப்படவுள்ளது. எனவே, மாவட்ட சமூக சேவைகள் பகுதியினர் மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினர், மாவட்ட பாதுகாப்பு தலைமை அலுவலகத்தினர் ஆகியோர் இணைந்து இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## வயல் நிலங்களில் தென்னை நடுகைக்கு தடைவிதிக்க வேண்டும்

### கிளிநொச்சி விவசாயக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை

கிளிநொச்சி.நவ.1

கிளிநொச்சி மாவட்டத்தில் வயல்நிலங்களில் தென்னை மரங்களை நட்டு மேட்டு நிலமாக மாற்றும் முயற்சிகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அரச செயலகத்தில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டன.

கிளிநொச்சி நகரை அண்டிய வயல் நிலங்களிலும், பரந்தனில் உள்ள வயல் நிலங்களிலும் தென்னை மரங்களை வயல் நிலங்களில் நட்ட பின்னர் அவற்றை மேட்டுக் காணிகளாக்கும் செயற்பாடுகள் அதிகளவில் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கமநல அபிவிருத்திச் சட்டங்களின் பிரகாரம் வயல் நிலங்களில் கட்டடங்கள் அமைத்தல், மேடாக்குதல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை-கிளிநொச்சி மாவட்டத்தில் போர்க் காலத்தில் அழிவடைந்த தென்னை மரங்களுக்குப் பதிலாக தென்னை நடுகையை மேற்கொள்வதற்கென அரச உதவிகளை வழங்குமாறு மீளக்குடியமர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலப் போரினால் 55 ஆயிரத்துக்கும் அதிகமான தென்னை மரங்கள் அழி வடைந்துள்ளன. தப்பிப் பிழைத்த தென்னை மரங் களும் உரிய பயனை வழங்காத நிலை காணப் படுகின்றது.

இதேவேளை-தென்னைகளில் செவ்வண்டுகளின் தாக்கம் காணப்படுமாயின் தெங்கு அபிவிருத்திச் சபையுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (க-18)



## சாட்டிக் கடற்கரையில் சிரமதானப் பணிகள்

யாழ்ப்பாணம், நவ.1

வேலணை சாட்டி கடற்கரையில் உல்லாசப் பயணிகளால் வீசப்படும் கழிவுப் பொருள்களை அகற்றி குறித்த கடற்கரைப் பகுதியைத் துப்புரவு செய்யும் பணிகளில் வேலணை பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர்.

உள்ளூராட்சி வாரத்தை யொட்டி வேலணை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் சிரமதானப் பணிகளாக குறித்த பகுதிகளைத் துப்புரவு செய்யும் பணியை பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசா முன்னெடுத்துள்ளார்.



சாட்டி கடற்கரை, தீவுப்பகுதியில் உள்ள பிரதான சுற்றுலா மையமாக உள்ளதால் தினமும் கணிசமான உல்லாசப் பயணிகள் அந்தப் பகுதிக்குச் சென்று திரும்புகின்றனர். இதனால் அந்தப் பகுதியில் வீசப்படும் கழிவுகளை அகற்றும் நடவடிக்கையாக உள்ளூராட்சி வாரத்தையொட்டி பிர தேச சபை உத்தியோகத் தர்கள், ஊழியர்கள் இணைந்து உழவு இயந் திரம் மூலம் கழிவ கற்றும் பணியில் ஈடுபட்டனர். (வ-7)


### மரண அறிவித்தல்



#### முருகேசு கமலநாதன்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கமலநாதன் நேற்று (31.10.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல் குடும்பத்தினர்

சங்குவேலி வடக்கு, மானிப்பாய். 39685 (14)

# பெண் மீதான வன்முறை இன்னும் ஒழியவில்லை

## மகளிர் அபிவிருத்தி நிலையத் தலைவி சரோஜா சிவசந்திரன் கருத்து

யாழ்ப்பாணம், நவ.1

"பெண் வன்முறையை இல்லாதொழிக்க பல அமைப்புக்கள் முன்வந்தாலும் அவற்றை முற்றாக ஒழிக்க முடியவில்லை" என மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவி சரோஜா சிவசந்திரன் தெரிவித்துள்ளார்.

திங்கட்கிழமை நடைபெற்ற பெண்களுக்கு வழிகாட்டியாக அமையும் குறும்பட மற்றும் அசையும் பட வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பெண்களுக்கு பாலியல் ரீதியான தொல்லைகள் அதிகம் என்பது ஆய்வுகள் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான வன்முறைகளை ஒழிப்பதற்கு பல அமைப்புக்கள் முன்வந்தாலும் முழுமையாக வன்முறைகள் நிறுத்தப்படவில்லை. பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் தொடர்பில் வீட்டு வன்முறைச் சட்டம் உட்பட நீதிமன்றங்கள், நியாய சபைகள், மத்தியஸ்தர் சபைகள் இருந்தாலும் வன்முறைகளை நிறுத்தமுடியவில்லை. பெண்களுக்கான சரிபாதி சமத்துவம் குறித்து சிந்திக்கவேண்டும்"-என்றார்.



இதேவேளை- நிகழ்வில் கலந்துகொண்ட பெண்கள் வன்முறை தொடர்பிலான நிகழ்ச்சித்திட்ட உறுப்பினரான சட்டநாதர் கருத்துத் தெரிவிக்கையில்;

"பெண்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். குறும்படங்கள் மூலமாக அவற்றை ஏற்படுத்தலாம். பாதிக்கப்பட்ட பெண்கள் முன்வந்து தமக்கு நேர்ந்த வன்முறைச் சம்பவங்களை உரிய அமைப்புக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைக்கும் ரீதியிலான அமைப்புக்கள் இருப்பது வரவேற்கத்தக்கது"- என்றார். இந்த நிகழ்வில் மகளிர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (வ-10)

"-"



**பெண்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். குறும்படங்கள் மூலமாக அவற்றை ஏற்படுத்தலாம். பாதிக்கப்பட்ட பெண்கள் முன்வந்து தமக்கு நேர்ந்த வன்முறைச் சம்பவங்களை உரிய அமைப்புக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.**

## கழிவுகளால் நிறையும் மூன்று கிராமங்கள்



யாழ்ப்பாணம், நவ.1

திண்மக் கழிவு மற்றும் மலக் கழிவுகளால் வலி. தென்மேற்கில் உள்ள மூன்று கிராமங்கள் பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளன.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் மற்றும் 10 அரச திணைக்களங்களுக்கு நவாலி முருகானந்தா சனசமூக நிலையம் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

திண்மக் கழிவு மற்றும் மலக்கழிவுகளால் சூழல் மற்றும் விவசாய நிலங்கள் மாசடைந்துஅபாயமுறும்நிலை தொடர்பான கவன வீர்ப்பு எனும் தலைப்பில் மேற்படி சனசமூக நிலையம் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வலி.தென்மேற்குப் பிரதேச சபை - சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்லுண்டாய், நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகள் அங்கு வதியும் மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் பிரதேசங்களாக மாறியுள்ளன. மேலும் இங்கு திண்மக் கழிவுகள், மலக் கழிவுகள், வைத் தியசாலைக் கழிவுகள் என்பன வகை தொகையின்றி யாழ். மாநகர சபை, நல்லூர் பிர தேச சபை, வலி.தென்மேற்குப் பிரதேச சபை மற்றும் பொது மக்களால் கொட்டப்படுவது அனைவரும் அறிந்ததே.

மேலும் திண்மக் கழிவுகள் சுகாதாரத்துக்குப் பங்கம் விளை விக்காத வகையில் புதைக்கப் பட வேண்டும் என்பது விதி முறை. மாறாக இங்கு தின மும் அவை எரியூட்டப்படு வதால் அயல் கிராமங்கள் புகையில் மூழ் கிக் காணப்படுகின்றன. (வ-41)

## விழிப்புக்குழு அமைக்க ஒத்துழைப்புத் தேவை

### வேலணை பிரதேச சபை தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ.1

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப் படுத்த விழிப்புக்குழுக்களை அமைக் கப் பொது நிறுவனங்கள், பொது மக்களின் உதவியைக்கோரியுள்ளார் பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசா.

அண்மைக்காலமாகக் குறித்த பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. வேலணை வங்களாவடி முருகன் கோயில் உட்பட இந்துக் கோயில்கள் சிலவற்றிலும் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. திருட்டுக்களைக் கட்டுப்படுத்தப் பொதுமக்கள் ஒன்று சேர்ந்து விழிப்புக் குழுக் களை அமைக்க முன்வர வேண்டும்.

இது தொடர்பாகப் பிரதேச சபையுடன் தொடர்பு கொள்ளுமாறும் பிரதேச சபைத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-7)

## மோ.சைக்கிளை போதையில் செலுத்தியவர் மறியலில்

கிளிநொச்சி, நவ.1

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் சாரதி அனுமதிப்பத்திர மின்றியும், மதுபோதையிலும் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற இளைஞர் ஒருவரை விளக்கமறியலில் வைக் குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத் தரவிட்டுள்ளது.

சாரதி அனு மதிப்பத்திரமின்றியும், மதுபோதையிலும் மோட்டார் சைக்கிளைச் செலுத் திச் சென்ற குறிப்பிட்ட இளைஞ ரைக் கைது செய்த கிளிநொச் சிப் பொலிஸார் செவ்வாய்க் கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தினர். (ஒ-6)



கைதடி கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு விழா கடந்த சனிக்கிழமை இரவு நிலையத் தலைவர் மயூரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், வடக்குமாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன் மற்றும் கே.சயந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (வ-5)

## ஊர்காவற்றுறை பொதுச் சந்தை இன்று திறப்பு

யாழ்ப்பாணம், நவ.1

ஊர்காவற்றுறை பிரதேச சபையால் புதிதாக அமைக்கப்பட்ட பொதுச் சந்தைக் கட்டடம் இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப் படவுள்ளது. அன்றைய தினம் புதிதாக அமைக்கப்பட்ட நாரந்தனை பொது நூலகக் கட்டடமும் திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-7)

## குடிதண்ணீருக்கு பற்றாக்குறை

### சிரமங்களை எதிர்கொள்ளும் கெலன் தோட்ட மக்கள்

கொழும்புத்துறை, நவ.1

கொழும்புத்துறை வசந்தபுரம், கெலன் தோட்ட குடியிருப்புப் பகுதிகளில் உள்ள மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ள னர்.



நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் இந்தக்கிராமங்களுக்கு குடிதண் ணீர்த் தாங்கிகள் வைக் கப் பட்டு பவுசர்கள் மூலம் யாழ். மாநகர சபை குடிதண்ணீரை வழங்கிவந்தது. இந்த விநியோக நடைமுறையை யாழ். மாந கர சபை கடந்த சில வாரங்களாக நிறுத்திக் கொண்டதால் அந்தப்பகுதி மக்கள் குடிதண்ணீரைப்பெறுவதில் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். இதேவேளை- நீண்டகாலமாக வசந்தபுரம், கெலன் தோட்டக் குடியிருப்பு முகாமாகப் படையினரின் பயன்படுத் தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-135)

## பிரயாணப்படி வழங்காத உள்ளூராட்சிச் சபைகள்

### விலங்கு விசர்நோய் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணியாளர்களுக்கு

யாழ்ப்பாணம், நவ.1

வளர்ப்புநாய்களுக்குவிலங்கு விசர்நோய்த்தடுப்பூசிமருந்து ஏற்றும் பணியில் ஈடுபடும் சுகாதாரத்திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு பிரயாணப்படி வழங்க உள்ளூராட்சி சபைகள் சில மறுப்புத் தெரிவிப்பது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டுள் ளது.

உள்ளூராட்சி சபை எல்லைக் குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் வராமல் தடுக்கும் பணியைசுகாதாரத்திணைக்களத்தினர் நீண்டகாலமாக மேற்கொண்டு வருகின்றனர். விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து வழங்குவது தொடர்பான அனைத்துச் செலவுகளையும் சுகாதாரத் திணைக்களத் தினரே செலுத்துகின்றனர்.

எனினும் உள்ளூராட்சி சபைப் பிரிவுகளில் பிரதேசங்களுக்குச் சென்று தடுப்பூசி ஏற்றும் பணிகளை சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் மேற் கொண்டு வருகின்றனர். அதற் கான பிரயாணப் படிகளை நீண்டகாலமாக அந்தந்த உள்ளூராட்சி சபைகளே வழங்கி வந்தன. ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக நிதி இல்லையெனக் காரணம் கூறி சில உள்ளூராட்சி சபை கள் உத்தியோகத்தர்களின் பிரயாணப் படிக் கொடுப்பனவை வழங்க மறுத்து வருகின்றன.

உள்ளூராட்சிச்சபைகள்தமது எல்லைப்பரப்பில் உள்ள குடியிருப்பாளர்களால் வளர்க்கப்படும்நாய்களுக்கு வருடா வருடம் உரிமம் வழங்கி இலக் கத் தகடுகள் வழங்க கட்டணம் அறவிட்டு வருகின்ற போது நாய்களுக்கு விசர் நோய் வராமல் தடுக்கும் பணியில் ஈடுபடும் உத்தி யோகத்தர்களுக்கு பிரயா ணப்படிக்கான கொடுப்பனவை மட்டும் வழங்க ஏன் மறுக்கின்றன எனக் கேள்வி எழுப் பப்படுகிறது. (வ-9)


# தகுந்த முடிவெடுப்பார் மன்மோகன்

## பொதுநலவாய மாநாடு குறித்து ஜி.கே.வாசன் கருத்து

புதுடில்லி. நவ.1

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில்கலந்துகொள்வதுகுறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தகுந்த முடிவு எடுப்பார் என்று நம்புகின்றேன் என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்துகொள்ளவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலே ஜி.கே.வாசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது.

"இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினேன்.

அவரிடம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளேன்.

இந்தியப் பிரதமர் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது.

இந்த விடயத்தில் அவர் தகுந்த முடிவை எடுப்பார் என்று நம்புகின்றேன்" என்று தெரிவித்தார். (ற)

### ஒபிரேஷன் அம்லா ஆரம்பம்



நாகர்கோவில். நவ.1

தமிழக கடற்கரைப் பகுதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் 'ஒபிரேஷன் அம்லா' என்ற பெயரில் பாதுகாப்பு ஒத்திகை நேற்று ஆரம்பமாகியது. இரு நாள்கள் நடைபெறும் இந்த ஒத்திகையில் கடலோர மாவட்டங்களை சேர்ந்த பொலிஸார், கடலோர காவற்படை, கடற்படையினர், மீன்வளத் துறையினர் ஆகியோர் கூட்டாக ஈடுபடுகின்றனர்.

தீபாவளி காலத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் குமரி கடலோர பகுதி வழியாக தீவிரவாதிகள் தமிழகத்தில் உள் நுழையலாம் என்று உளவுத்துறை கடந்த சில நாள்களுக்கு முன்பு எச்சரிக்கை விடுத்திருந்தது.

பீகார் மாநிலம், பாட்னாவில் குண்டு வெடிப்பு நடந்த சந்தர்ப்பத்தில் இந்த எச்சரிக்கை வெளியாகியதை அடுத்து பொலிஸார் பாதுகாப்பை பலப்படுத்தி வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாகவே 'ஒபிரேஷன் அம்லா' பாதுகாப்பு ஒத்திகை நடத்தப்படுகின்றது. அதில் 250 பேர் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

கடந்த ஜனவரி மாதமும் 'ஒபிரேஷன் அம்லா' நடத்தப்பட்டது. (ற)

### அதிகாரமிக்க பெண்; சோனியாவுக்கு மூன்றாமிடம்


நியூயோர்க், நவ.1

உலகில் அதிகாரம் மிகுந்த தலைவர்களில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி. போர்ப்ஸ் இதழ் உலகிலேயே அதிகாரம் மிகுந்த தலைவர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

மொத்தமுள்ள 72 அரசியல் தலைவர்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ள பெண்களின் வரிசையில் சோனியா மூன்றாம் இடம் வகிக்கிறார்.

அதிகாரம் மிகுந்த தலைவர்களின் பட்டியலில் சோனியாவுடன் ஒப்பிடும் போது, பிரதமர் மன்மோகன் சிங் ஏழு இடங்கள் பின்தங்கி 28 வது இடத்தில் உள்ளார். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதின் உலகில் அதிகாரம் படைத்தவர்களில் முதலிடத்தில் உள்ளார். கடந்த ஆண்டு முதல் இடத்தில் இருந்த அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா இரண்டாவது இடத்துக்கு பின்தங்கியுள்ளார்.

மூன்றாவது இடத்தில் சீன குடியரசுத் தலைவர் ஜி ஜின் பிங், ஆறாவது இடத்தில் பில்கேட்ஸ் ஆகியோர் உள்ளனர் என்று போர்ப்ஸ் இதழ் பட்டியலிட்டுள்ளது. (ற)





உத்தரப்பிரதேச மாநிலம் முசாபர் நகரில் மீண்டும் இரு சமூகங்களிடையே கலவரம் மூண்டுள்ளது. அதில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். முசாபர் நகர் மாவட்டம் முகமத்புரைசிங், ஹுசைன்பூர் கிராமங்களில் வசிக்கும் இரு சமூகத்தினருக்கு இடையே நேற்று முன்தினம் இரவு வன்முறைகள் ஏற்பட்டது. அதில் மூன்று இளைஞர்கள் உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்தார். தற்போது வன்முறைகள் கட்டுப்பாட்டுக்கள் இருப்பதாகக் கூறும் பொலிஸார், வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர், வன்முறைகள் தொடர்பில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தனர். கடந்த மாதம் முசாபர் நகரில் இரு பிரிவினர் இடையே ஏற்பட்ட வகுப்பு கலவரத்தில் 60க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். 40 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்தனர். (ற)

## எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் ஜெயலலிதாவின் நடவடிக்கைகள்

### தே.மு.தி.க. உறுப்பினர் கூறுகின்றார்

சென்னை, நவ.1

தமிழக முதலமைச்சரின் எதிர்க்கட்சிகள் மீது பழி வாங்கும் நடவடிக்கைகளானது ஒரு வகையில் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் நடவடிக்கையே என்று தெரிவித்துள்ளார் தே.மு.தி.க. நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்கட்சி கொறடாவுமான வி. சி. சந்திரகுமார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது.

"தே.மு.தி.க. ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து 2011 ஆம் ஆண்டு சட்ட சபைத் தேர்தலைத் தவிர அனைத்து தேர்தல்களிலும் தனித்து போட்டியிட்டுள்ளது. எனவே ஏற்காடு இடைத்தேர்தலில் தனித்துப் போட்டியிட நாங்கள் அஞ்சவில்லை. இருப்பினும் தேர்தல் குறித்து பல விடயங்களை கட்சித் தலைவர் விஜயகாந்த் ஆராய்ந்து கொண்டிருக்கிறார். உரிய முடிவை விரைவில் அறிவிப்பார்.

சட்ட சபைக் கூட்டத்தொடர் நடக்கும் ஒவ்வொரு முறையும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் எங்களையும் எங்கள் கட்சியையும் கட்சித் தலைவரையும் ஏதாவது ஒரு குட்டிக்கதைகளை கூறி இழிவுபடுத்தி வருகின்றனர். அவர்களுக்கு பதில் அடி கொடுக்கும் வகையில் நாங்களும் குட்டிக்கதைகளை கூறமுடியும். ஆனால் பேச வாய்ப்பு மறுக்கப்படுகிறது.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் ஒரு வகையில் அனைத்து எதிர் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் முதல்வர் ஜெயலலிதாவே ஈடுபட்டுள்ளார்.

விரைவில் அது போன்ற நிகழ்வு நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஜெயலலிதா மக்களுக்கு நல்லது செய்வதை விட்டு விட்டு எதிர்கட்சிகளை பழி வாங்கும் நடவடிக்கையில் தான் கவனம் செலுத்தி வருகிறார். இத்தகைய போக்கை முதல்வர் நிறுத்திக்கொள்ள வேண்டும்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

## நடவடிக்கை எடுக்காவிடில் தூதரகத்தை மூடிவிடுவோம்

### மாலைதீவை எச்சரிக்கிறது இந்தியா

புதுடில்லி, நவ.1

மாலைதீவுக்கான இந்தியத் தூதரின் கார் மீது தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இந்தியத் தூதரகத்தை மூடவேண்டிய சூழல் ஏற்படும் என்று மாலைதீவு அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது இந்தியா.

கடந்த திங்கள்கிழமை, மாலைதீவில் உள்ள இந்தியத் தூதரகத்தின் முன்னால் முன்பு நிறுத்தப்பட்டிருந்த தூதரின் கார் மீது மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தினர். அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே இந்தியா இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து இந்தியத் தூதரகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது,

"இது மிகவும் கண்டனத்துக்குரியது. கடந்த ஜனவரி மாதமும் இதேபோல் தாக்குதல் சம்பவமொன்று நிகழ்ந்துள்ளது. அந்த வழக்கில் இது வரை முடிவு எட்டப்படாத நிலையில், மீண்டும் அது போன்றதொரு தாக்குதல் சம்ப வம் நிகழ்ந்துள்ளது. அந்தச் சம்பவம் குறித்து மாலை தீவு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காதது வருத்தம் அளிக்கிறது.

இதுபோன்ற நிலை நீடித்தால், இரு நாடுகளின் உறவில் பாதிப்பு ஏற்படுவதுடன், தூதரகத்தை மூடவேண்டிய நிலை உருவாகும் என்று கூறப்பட்டுள்ளது. (ற)

### இந்தியா வருகின்றார் டேவிட் கமரூன்

புதுடில்லி, நவ.1

இந்தியா - பிரிட்டன் நாடுகளுக்கிடையிலான நல்லுறவை பலப்படுத்தும் விதமாக பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் ஒருநாள் பயணமாக நவம்பர் 14ஆம் திகதி இந்தியா வரவுள்ளார்.

புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கும் அவர் இரு நாடுகளுக்கிடையிலான தொடர்புகள், பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் தொடர்பாக பேச்சு நடத்த உள்ளார்.

டேவிட் கமரூனின் இந்தப் பயணம் இந்தியாவுக்கான மூன்றாவது சுற்றுப் பயணமாகும். (ற)

## பாட்னா குண்டுவெடிப்பு: முக்கிய சந்தேகநபர் கைது

பாட்னா, நவ.1

பாட்னா தொடர் குண்டு வெடிப்பு வழக்கு தொடர்பாக மேலும் ஒரு முக்கிய குற்றவாளி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பீகார் மாநிலம், பாட்னாவில் பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளரும், குஜராத் முதல்வருமான நரேந்திரமோடி பங்கேற்ற பொதுக்கூட்டம் கடந்த 27ஆம் திகதி நடந்தது. அப்போது பாட்னா ரயில் நிலையம் மற்றும் பொதுக்கூட்டம் நடந்த இடங்களில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன. அதில் 6 பேர் உயிரிழந்தனர்.

அதில் முதல் குண்டுவெடிப்பை நிகழ்த்திய தீவிரவாதி அனுல் தாரிகியூவை பொலிஸார் கைது செய்தனர். அவனிடம் இருந்து முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் பீகார் மாநிலம் கிழக்கு சாம்பரன் மாவட்டத்தில் உள்ள அலஉலி கிராமத்தில் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய அர்சத் அகமது என்பவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விசாரணையில் பாட்னா தொடர் குண்டு வெடிப்பு வழக்கின் முக்கிய தீவிரவாதியான இம்தியாஸ் அன்சாரியின் நண்பர் அர்சத் அகமது என்பதும், அவன் இந்திய முஜாகிதீன் தீவிரவாத அமைப்பில் செயற்பட்டு வருவதும் தெரியவந்ததுள்ளது. (ற)

## அணு ஆயுத ஏவுகணைகளை வெற்றிகரமாக சோதித்தது ரஷ்யா

மொஸ்கோ, நவ.1

ரஷ்யா தனது நீர்மூழ்கிக் கப்பல்களில் இருந்து அணு ஆயுத வல்லமை கொண்ட சிறிய மற்றும் பெரிய அளவிலான ஏராளமான ஏவுகணைகளை கடந்த புதன்கிழமை முன்னறிவிப்பின்றி வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளது.

பேரன்ட்ஸ் மற்றும் ஓகோட்ஸ்க் கடல் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நீர்மூழ்கிக் கப்பல்களில் இருந்தே கண்டம் விட்டுக் கண்டம் பாயக்கூடிய அணுவல்லமை ஏவுகணைகள். சோதனை செய்து பார்க்கப்பட்டுள்ளன.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ரஷ்ய இராணுவ செய்தித் தொடர்பாளர், "சிறிய மற்றும் பெரியளவிலான ஏவுகணைகள் சோதனை செய்து பார்க்கப்பட்டன. அவற்றில் கண்டம் விட்டுக் கண்டம் சென்று இலக்கைத் துல்லியமாகத் தாக்கும் ஏவுகணைகளும் அடங்கும்" என்று தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக அணு சக்தித்துறையில் அமெரிக்காவை விஞ்சும் அளவுக்கு ரஷ்யா அதிவேகமாக முன்னேறி வருகிறது. (ற)



சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் சொந்தம் கொண்டாடும் சர்ச்சைக்குரிய தீவுகளான தியாவோயூ அருகே சீனாவின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் காணப்படுகின்றன என்று தெரிவித்துள்ள ஜப்பான் இது ஓர் போர் முனைப்பு நடவடிக்கை என்று கூறியுள்ளது. அத்துடன் குறித்த பகுதிக்கு தனது போர்க்கலங்களை அனுப்பியுள்ள ஜப்பான் அந்தப் பகுதியில் ரோந்து நடவடிக்கைகளையும் அதிகரித்துள்ளது. அதனால் அந்தப் பிராந்தியத்தில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. (ற)

## மாலைதீவு நீதிமன்றத்தின் நடவடிக்கையில் அதிருப்தி

மாலே, நவ.1

மாலைதீவு உயர் நீதிமன்றத்தின் செயற்பாடுகள் குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை விமர்சனம் வெளியிட்டுள்ளது.

நாட்டின் தேர்தல் செயற்பாடுகளில் உயர் நீதிமன்றம் மிதமிஞ்சிய தலையீடுகளை மேற்கொள்வதாக மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை குற்றஞ்சுமத்தியுள்ளார்.

நீதிமன்றத்தின் இந்த நடவடிக்கைகள் மூலம் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு மக்களுக்கு உள்ள உரிமை பறிக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# அரசியலுக்கு வாருங்கள்

## தலிபான்களை அழைக்கின்றார் பாகிஸ்தான் பிரதமர்

இஸ்லாமாபாத், நவ.1

அரசியலில் ஈடுபட்டு மக்களின் செல்வாக்கைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று தலிபான் அமைப்பினருக்கு அழைப்பு விடுத்துள்ளார் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்.



பிரிட்டனுக்கு உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டுள்ள நவாஸ் ஷெரீப், அங்குள்ள தொலைக்காட்சி ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியுள்ளதாவது:

"எனது தலைமையிலான அரசு பாகிஸ்தான் மற்றும் அந்தப் பிராந்தியத்தில் அமைதி நிலவ வேண்டும் என்றே விரும்புகின்றது. தலிபான்களுடன் அமைதி பேச்சுக்களைத் தொடர தேவையான அனைத்து நடவடிக்கைளையும் எடுக்க நான் உள்துறை அமைச்சருக்கு உத்தரவிட்டுள்ளேன். இதுகுறித்து அனைத்து கட்சிகளுடனும் உள்துறை அமைச்சர் பேசுவார். இது குறித்த அனைத்து கட்சி கூட்டத்தில், போராளிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அரசின் முயற்சிக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

எனவே பாகிஸ்தான் தலிபான்கள் அமைதி பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டும். அவர்கள் அரசியலில் ஈடுபட்டு மக்கள் மத்தியில் செல்வாக்கை பெறவேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## 'டிரோன்' தாக்குதலில் 2, 200 பேர் உயிரிழப்பு

### பாக். உள்துறை அமைச்சு தெரிவிப்பு

இஸ்லாமாபாத், நவ.1

பாகிஸ்தானில் அமெரிக்க ஆளில்லா விமானங்கள் நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை 2,160 போராளிகளும், 67 பொதுமக்களும் உயிரிழந்துள்ளனர் என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் சவுத்ரி நிசார் அலி கான் தெரிவித்துள்ளார்.

கடந்த 23ஆம் திகதி வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை சந்தித்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆளில்லா விமானங்களின் தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என வற்புறுத்தியிருந்தார். அத்துடன் உலகின் முக்கிய மனித உரிமை அமைப்புகளும் இதே கருத்தை வலியுறுத்தி வருகின்றன.

எனினும் குறித்த தாக்குதல்கள் மிகவும் துல்லியமாக திட்டமிட்டு நடத்தப்படும் தீவிரவாதிகள் ஒழிப்பு வேட்டை என்று அமெரிக்கா கூறி வருகிறது.

இந்தநிலையிலேயே பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் சவுத்ரி நிசார் அலி கான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பாகிஸ்தானில் 2002ஆம் ஆண்டில் இருந்து இதுவரை தீவிரவாத தாக்குதல்களில் 12 ஆயிரத்து 204 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 6 ஆயிரத்து 149 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேவேளை தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட 13 ஆயிரத்து 223 கைதிகளில் 501 பேருக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார் சவுத்ரி நிசார் அலி கான். (ற)

## பாப்பரசரை கட்டிப்பிடித்த சுட்டிப் பையன்

ஜெருசலேம், நவ.1

பாப்பரசர் பிரான்சிஸ் உரை நிகழ்த்திய போது சிறுவன் ஒருவன் அவரை சுற்றி சுற்றி வந்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளான்.

வத்திக்கனில் உள்ள புனித பீற்றர் சதுக்கத்தில் திரண்டிருந்த மக்கள் முன்பு பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த சனிக்கிழமை இரவு உரை நிகழ்த்தினார்.

அவரது உரை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்த போதிலும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களின் கவனம் வேறு இடத்தில் இருந்தது. நிகழ்ச்சிமேடைக்கு வந்த சிறுவன் ஒருவன் அனைவரின் கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்தான்.

மேடையில் அமர்ந்திருந்த பாப்பரசரின் அருகே வந்த சிறுவன், அவரது கழுத்தில் கிடந்த சங்கிலியைப் பிடித்துப் பார்த்தான்.

அத்துடன் பாப்பரசர் உரை நிகழ்த்தி கொண்டிருந்த போது, சிறுவன் அவரது கால்களை கட்டிக் கொண்டான். பிரான்சிஸும் அவனை அன்போடு பார்த்து சிரித்து விட்டு தனது தன்னருகே வந்த சிறுவனின் தலை மீது அன்புடன் கையை வைத்துக் கொண்டு உரை நிகழ்த்தினார்.

## திட்டமிட்ட உரிமை மீறலில் ஈடுபடுகிறது வடகொரியா

### குற்றஞ்சாட்டுகின்றது ஐ.நா.சபை

நியூயோர்க், நவ.1

வட கொரியாவில் திட்டமிடப்பட்ட மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன என்று ஐ.நா. விசாரணைக்குழுவின் தலைவர் மைக்கேல் கிர்பி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"வடகொரியாவில் திட்டமிட்ட மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன. ஒரு சிலர் தாங்கள் சித்திரவதை செய்யப்பட்ட விதம் குறித்து விவரித்தமை கண்ணீரை வரவழைப்பதாக உள்ளது.

வட கொரிய சிறைகளில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உணவளிக்காமல் தொடர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டமை விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

வடகொரியா ஐக்கிய நாடுகள் சபையின் இந்த விசாரணையை அரசியல் சதி என்று கூறித் தமது நாட்டிற்குள் விசாரணைக் குழுவை அனுமதிக்கவில்லை. எனினும் தென் கொரியா, ஜப்பான் மற்றும் பிரிட்டனில் வைத்து, பாதிப்புக்குள்ளான மக்களிடம் ஐ.நா. குழுவினர் விசாரணையை நடத்தினர்.

இந்த அறிக்கை விரைவில் ஐ.நா. சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (ற)

## தலைக்குள் பாய்ந்த கத்தியுடன் மருத்துவமனை வந்த இளைஞர்

பீஜிங், நவ.1

தலையில் பாய்ந்த கத்தியுடன் நடந்தே வந்து சிகிச்சை பெற்ற இளைஞரால் பரபரப்பு ஏற்பட்டது. சீனாவின் வடகிழக்கே உள்ள ஜீன் மாகாணத்தில் உள்ள யான்ஜி என்ற இடத்தை சேர்ந்தவர் ஹோ லுங்.



இவர் கத்தியை வைத்துக் கொண்டு தனது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது நண்பர் ஒருவர் இவர் மீது விளையாட்டாக பாய்ந்த போது கத்திதவறுதலாக ஹோ லுங் தலையில் பாய்ந்தது.

இதனை பார்த்த நண்பர்கள் அலறினர். ஹோ லுங் இறந்து விட்டார் என்று நினைத்து அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர்.

ஆனால் தைரியமான ஹோ லுங், ரத்தம் வழிந்த நிலையில் அருகில் உள்ள மருத்துவமனைக்குநடந்தேசென்றுள்ளார். இதனையடுத்து எக்ஸ்ரே எடுத்து பரிசோதனை நடத்தியதில், 10 அங்குல ஆழத்தில் கத்தி புதைந்திருப்பது தெரிந்தது.

சுமார் 3 மணிநேர அறுவை சிகிச்சைக்கு பிறகு ஹோ லுங் தலையில் இருந்த கத்தியை மருத்துவர்கள் அகற்றினர். தற்போது ஹோ லுங் நலமுடன் உள்ளார் என மருத்துவமனை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.1
வேலணை மத்திய கல்லூரியின் கல்லூரி தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சேர். வை. துரைசுவாமி ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.
கல்லூரி முதல்வர் சிவசாமி கிருபாகரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினரும், கல்லூரியின் பழைய மாணவருமாகிய சி. சிறீதரன், வடக்கு மாகாண கல்வியமைச்சர் த. குருகுலராஜா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-400)

★ ★ ★

அச்சுவேலி, நவ.1
அச்சுவேலி ஆரம்பப்பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அரங்கில் நடைபெறும்.
பாடசாலை அதிபர் வே.குணசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தின்ராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி க.சற்குணராசாவும் கலந்து கொள்கின்றனர். (ந-11)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ.1
ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வித்தியாலய அரங்கில் இடம்பெறவுள்ளது.
வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜ மூர்த்தியும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜாவும் கலந்து கொள்வர். (ந-400)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ.1
அன்பொளி கல்வியகத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா யாழ்.நாச்சிமார் கோவியடியில் உள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட பீடாதிபதி தி.வேல்நம்பியும், சிறப்பு விருந்தினராக ஆரம்பக் கல்வி ஆலோசகர் திருமதி கலாவதி பிரகதீஸ்வரசர்மாவும் கலந்துகொள்வர். (ந)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ.1
ஊரெழு கணேச வித்தியாசாலையின் பரிசில் நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மண்பத்தில் நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் சி.திரிகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வை.கிரிதரனும், சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் வலய ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.பாலசுப்பிரமணியம், யாழ். வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.தியாகராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

★ ★ ★

வடமராட்சி, நவ.1
பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய நிறுவுநர் தினமும் சஞ்சிகை வெளியீடும், பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் திரவியராசா தலைமையில் நடைபெறவுள்ளன.
இந்த விழாவில் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஶ்ரீகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதிலோகேஸ்வரி ஶ்ரீகரன் பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார்.
நிறுவுநர்தின நினைவுப் பேருரையை மன்னார் மாவட்ட செயலக கணக்காளர் க.கமலேஸ்வரன் நிகழ்த்துவார். வெளியீட்டுரையை ஆசிரியை திருமதி சாந்தாதேவி அருளானந்தமும் ஆய்வுரையை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கி.கார்த்திகேயனும் நிகழ்த்துவர். (ந-8)




CSC-ASIAN COMPUTER EDUCATION
60% Discount Offer
கிராபிக்ஸ், அனிமேஷன் மற்றும் மல்டிமீடியா தொழில் பயிற்சிகள்
Diploma in Digital Pre-press
Dip. in Digital Video Production
Diploma in 2D & 3D Animation
Master Diploma in Multimedia
An ISO 9001: 2008 Certified Courses



| யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|
| 2G ஸ்ரான்லி வீதி, 021 2225677 | கட்டுக்காணி வீதி, 021 2270267 | A9 வீதி, ஆனந்தபுரம், 021 2283925 | 192, குருமன்காடு சந்தி, மன்னார் வீதி, 024 2226050 |

## தீபாவளி பண்டிகை

சைவ வித்தியா விருத்திச் சங்க தீபாவளிப் பண்டிகை நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கத்தின் பெண்கள் இல்ல ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிதிய பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவசங்கரும், சிறப்பு விருந்தினராக கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் ப.கணேசனும் கலந்து கொள்வார். (ந)

## பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.1
யாழ்.கல்வி வலயத்தால் இன்று வெள்ளிக்கிழமை நடத்தப்படவிருந்த விசேட கல்விச் செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

**வேலையாள் தேவை**
கிளிநொச்சியில் இயங்கிவரும் "போன் சொப்" ஒன்றுக்கு "போன் றிப்பெயறிங்" தெரிந்த ஒருவர் தேவை.
தொடர்பு:077 363 0454

**வீடு வாடகைக்கு**
இரத்தினபுரம், கிளிநொச்சி, டிப்போ சந்தியில் இருந்து 700 மீற்றர் தூரத்தில், 2குளியல் அறை கொண்ட, சகல வசதிகளும் உடைய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கு ஏற்றது.
தொடர்பு:077 240 5165

## பிரிக்கமுடியாத பந்தம்

பாலில் வெண்மையாகவும், பழத்தில் சுவையாகவும் கலந்துறையும் இறைவா, நானும் உன்னுடன் பின்னிப் பிணையும் நாள் வராதா?
இயமன் பாரபட்சமின்றி உயிர்களை இழுத்துச் செல்பவன். அவனது பிடியிலிருந்து தப்பவேண்டுமானால் சிவபெருமானை மார்க் கண்டேயர் இறுகப் பற்றியதுபோல நாமும் இறைவனைப் பற்ற வேண்டும். இயமன் பிடித்து இழுத்தால் என்னுடன் இறைவனையும் சேர்த்துத்தான் பிடித்து இழுக்க வேண்டும். அப்படி பிரிக்க முடியாதபடி இறைவனோடு மனதால் இணைந்திருக்க முயல வேண்டும்.




நன்றி ஞானச்சுடர்

## விபத்தில் காயம்

வலி. வடக்கு, நவ. 1
வீதியைக் கடக்க முற்பட்டபோது மோட்டார் சைக்கிள் மோதியதில் கால் முறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புதன்கிழமை இரவு குடும்பஸ்தர் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
சண்டிலிப்பாயைச் சேர்ந்த சின்னத்தம்பி முருகையா (வயது- 56) என்பவர் கடையில் பொருள்களை வாங்கிக் கொண்டு சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டருக்கு அருகில் வீதியை கடக்க முற்பட்ட வேளையில் மோட்டார் சைக்கிளொன்றினால் மோதப்பட்டு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். இந்த விபத்துச் சம்பந்தமாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ந-86)


தீபாவளி பண்டிகைக்கால மாபெரும் LapTop கணினி மலிவு விற்பனை
HP 18,750/= தொடக்கம்
D/CORE, $I_3$, $I_5$, $I_7$ HP
2 வருட உத்தரவாதம்
ST. ANTONY 'S
187 , K.K.S. ROAD,
JAFFNA TWON.
021 222-4865/ 0750698608
16 ஆவது வருட சேவையில்

**வாகனம் விற்பனைக்கு**
53- XXXX தொடரிலக்கமுடைய நல்ல நிலையில்உள்ள ISUZU DUAL Purposl (White Colour) வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 346 4929 (33343) (6.3,4)

World concern
witness the transformation

**EMPLOYMENT OPPORTUNITIES**
We are an international non-governmental organization registered in Sri Lanka implementing relief and development programmes. The below positions are need for immediate hire.

**TECHNICAL OFFICER AND CIVIL ENGINEER - MULLAITHIVU**
**Major Responsibilities**

- Prepare technical drawings electronically, BOQs and estimates.
- Ensure the construction activities comply with current construction standards, national strategiesand disaster/cyclone-resistant codes.
- Implement quality construction programmes
- Inspection of materials and works to ensure compliance to specifications

**Minimum Skills & Educational Qualifications Required:**

- University Degree in Civil Engineering or National Diploma of Technology - NDT-Civil/QS or any other equal technical (civil) related educational qualification.
- Minimum 5 years of experience in construction, Project/site management, developing BOQs and well conversant in AUTOCAD.
- Experience in contract management, with analysis of claims experience highly regarded.
- Good command of English, written and spoken. Fluency in Tamil is a must.
- Computer skills is a must

**Position will include travel on sometimes difficult terrain and at times requires long hours in demanding environment. The applicants should also be a strong team player.**

**Previous working experience with I/NGO would be desirable.**

(39661)(7,6,3)
Remuneration will be in par with the industry norms.
Interested candidates are requested to email self prepared applications enclosed with a detailed CV and scanned photograph to wcsrilankavacancies@gmail.com on or before 15th November 2013.

## முழங்காவில் கிராமத்தில் பப்பாசி செய்கை

முழங்காவில், நவ. 1

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முழங்காவில் கிராமத்தில் பப்பாசிப்பழச் செய்கையை மேற்கொள்வதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

வவுனியா வடக்குப் பிரதேசத்தில் பப்பாசிப் பழச் செய்கை மேற்கொள்ளப்படுவதைப் போன்று முழங்காவில் பகுதியில் அதனை மேற் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேவேளை- பப்பாசிப் பழமரச்செய்கைக்குக் கிளிநொச்சி மாவட்டத்தில் உகந்த மண் வளம் கொண்ட இடமாக முழங்காவில் கிராமம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)



வவுனியா பூந்தோட்ட நரசிங்கர் ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற சர்வதேச முதியோர் தின விழாவின்போது முதியவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு சிறார்களின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லப்படுகின்றனர். (க-435)

## பாதீனியம் செடியை முற்றாக அழிப்போம்

### முல்லைத்தீவு விவசாயத் திணைக்களம் வேண்டுகோள்

முல்லைத்தீவு, நவ. 1

முல்லைத்தீவு மாவட்டத்தில் வேகமாகப் பரவிவரும் பாதீனியச் செடிகளை முற்றாக அழிப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டு முயற்சி செய்ய வேண்டுமென விவசாயத் திணைக்களத்தினர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



இது தொடர்பாக அவர்கள் கிராமந்தோறும் விளம்பர வாகனம் மூலமாக அறிவித்தலும் வழங்கி வருகின் றனர்.

இந்திய இராணுவத்தினர் இங்கு தங்கியிருந்த போது இந்தப் பாதீனியம் செடி எமது பிரதேசங்களில் வளர ஆரம்பித்தது. தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இவை வேகமாகப் பரவி வருவதைக் காணமுடிகின்றது. இவை வேறு பயிர்களின் வளர்ச்சியையும் தடைசெய்து வருகின்றன. அத்துடன் இவற்றைத் தீண்டும் மக்களுக்குப் பல்வேறு உடல் உபாதைகளும் ஏற்படுகின்றன.


மேலும், இவற்றை உண்ணும் மிருகங்களுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது.

எனவே சாதாரண பொது மக்கள், அரச ஊழியர்கள், மாணவர்கள் எனப் பலரும் ஒன்றிணைந்து இவற்றை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் விவசாயத் திணைக்களத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

## குளங்களின் நீரை முழுமையாக பயன்படுத்துவதை தவிர்க்கவும்

கிளிநொச்சி, நவ.1

கிளிநொச்சி மாவட்டத்தின் குளங்களில் உள்ள நீரை முற்றாகப் பயன்படுத்த வேண்டாமென கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என். சுதாகரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி அரச செயலகத்தில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; குளங்களிலிருந்து நீண்ட வாய்க்கால்களை அமைத்து நீரைப் பெறுவது தடுக்கப்பட வேண்டும். குளங்களில் எப்போதும் நீர் இருக்க வேண்டும்.

பூநகரிப் பகுதியில் உள்ள சிறு குளங்களின் நீர் முழுமையாகப் பயன்படுத்தப்படுமானால் அப்பகுதியில் உவர் அபாயம் அதிகரிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

# பஸ்களில் தொல்லை

## மதுப் பிரியர்களால்

கிளிநொச்சி, நவ.1

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வரை பயணிக்கும் பஸ்களில் மதுப் பிரியர்களால் பயணிகளுக்குச் சிரமங்கள் ஏற்படுவதாகத் தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வரைக்கும் பயணிக்கும் பஸ்களில் மதுப் பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதால் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் சாரதிகள் மற்றும் நடத்துநர்களும் தமது கடமைகளை மேற்கொள்வதில் இடர்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

கடந்த 27 ஆம் திகதி பிற்பகல் வேளையில் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சியை நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸில் பயணித்த ஒருவர் தாம் வைத்திருந்த மதுவை பஸ்ஸினுள் வைத்து அருந்தியதைக் கண்ட நடத்துநர் அவரைத் திட்டியதுடன் சாவகச்சேரியில் இறக்கிவிட்டுள்ளார்.

வேறொரு மதுப்பிரியர் பஸ் கட்டணத்தைச் செலுத்தாமல் மது போதையில் புலம்பியவாறு காணப்பட்டதால் கொடிகாமத்தில் இறக்கிவிடப்பட்டார்.

இத்தகையவர்கள் போதையில் உள்ளதை ஆரம்பத்தில் தம்மால் இன்ம்காண முடியாத நிலை காணப்படுவதாகப் பஸ் நடத்துநர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-18)

## மின்சார விநியோகப் பணி ஆரம்பம் ஒட்டுசுட்டானில்

முல்லைத்தீவு, நவ. 1

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மின்சார இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கான மின்சார விநியோக வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் தமது வீடுகளுக்கு மின்சார இணைப்புக்களைப் பொருத்தும் வேலைகளை மக்கள் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர். இங்கு மக்கள் மீள்குடியமர்ந்து நான்கு வருடங்களைக் கடந்த நிலையிலும் தமக்கு மின்சாரம் வழங்கப்படாமை குறித்து, அமைச்சர்கள் முதல் அதிகாரிகள் வரையில் பலருக்கும் தெரிவித்திருந்தனர். அத்துடன் ஊடகங்கள் வாயிலாகவும் வெளிப்படுத்தியிருந்தனர். இந்த நிலையில் தற்போது மின்சார கம்பங்கள், கம்பிகள் என்பன கொண்டுவரப்பட்ட நிலையில் மின்சார விநியோகம் வழங்கும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளன. அத்துடன் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கிடையில் மின்சாரம் வழங்கப்பட்டு விடுமெனவும் அறிய முடிகின்றது.

மின்சாரம் பெறுவதற்குரிய இணைப்பு வேலைகளை மேற்கொள்ளாதவர்கள் தற்போது அவற்றைத் துரித மாக மேற்கொண்டு வருவ தைக் காணமுடிகின்றது. (க-500)

## வயல் நிலத்தில் துப்புரவுப் பணிகள்

கிளிநொச்சி, நவ.1

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் கடந்த 30 ஆண்டுகளாக நெற்செய்கை மேற்கொள்ளமுடியாதிருந்த 160 ஏக்கர் வயல் நிலத்தில் துப்புரவுப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

ஸ்கந்தபுரம்ஐயனார்கமக்கார அமைப்பு மேற்கொண்ட பெரும் முயற்சி காரணமாகவே இந்தப் பணிகள் இடம்பெற்ற தாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

துப்புரவு செய்யப்பட்டுள்ள வயல் நிலங்களுக் கான நீர் விநியோகத்தை மேற்கொள்ளும் பொருட்டு வாய்க்கால்களை அமைத்து வழங்குமாறும் பலரிடம் இந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. (க-18)

# வவுனியா வடக்கு வலயத்தில் குறைபாடுகள்

## சுட்டிக்காட்டுகின்றது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

வவுனியா, நவ.1

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகவும் அவை நீண்ட காலமாகத் தொடர்வதாகவும் அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோரும் சுட்டிக்காட்டிய வண்ணமுள்ளனர் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற மதிய உணவுக்கான கொடுப்பனவுகள் பாலுக்கான கொடுப்பனவு என்பன முறையாக வழங்கப்படுவதில்லை.

பாடசாலைகளின் தேவை நிமித்தம் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட சிற்றூழியர்களை வலயக்கல்விப் பணிப்பாளர் தமது அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்துள்ளார். ஏற்கெனவே ஆறு ஊழியர்கள் அலுவலகக் கடமையிலுள்ள நிலையில் இவர்களின் இட மாற்றமும் இடம்பெற்றுள்ளது.

பாடசாலைச் சொத்துக்களைப் பாதுகாப்பது, பராமரிப்பு சேவைகளைச் செய்வது போன்ற கடமைகளில் ஈடுபட்டுள்ள சிற்றூழியர்களே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர் மாணவர்களைக் கொண்டு அந்தக் கடமைகளைச் செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இதைவிட வலயக் கல்வித் திணைக்களம் உள்ளிட்ட சில இடங் களில் தேவைக்கு அதிகமாக ஊழியர்கள் கடமை யில் உள்ளதாகவும் கூறப் படுகின்றது.

இடமாற்றம் செய்யப்பட்ட ஊழியர்களின் நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டதொரு காலத்துக்குத் தொடராகச் சேவையாற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதையும் வலயக் கல்விப் பணிப்பாளர் மீறியுள்ளார்.

வவுனியா வடக்கு வலயத்தில் முதல் முதலாக நியமனம் கிடைக்கப் பெற்ற ஆசிரியர்கள் பலர் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுசரணையோடு வேறு வலயங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால் வவுனியா வடக்கு வலயத்தில் ஆசிரியர்களுக் கான பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

இதைவிடப் பல அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோவைகள் இன்னமும் பூர்த்திசெய்யப்படாமல் உள்ளதாகவும் அதிபர்களால் மேற்கொள்ளப்பட்ட சிறுதிருத்த வேலைகளுக்கான கொடுப்பனவுகள் இழுத்தடிப்புச் செய்யப்படுவதாகவும் அதிபர், ஆசிரியர்களின் சேவை உறுதிப்படுத்தல்கள் இன்னமும் பூரணப்படுத்தப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதைவிட மூன்றாம்தவணை நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் அவசியமற்ற ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெறுவதாகவும் பல ஆசிரியர்களுக் கான சம்பள நிலுவைகளை வழங்க மறுப்பதாகவும் விசனம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மாகாணக் கல்வி அமைச்சு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கின்றோம் - என்றுள்ளது. (க)



திருக்கோவில் பிரதேசத்தில் மேய்ச்சல் தரைப் பகுதிகளில் ஏற்படும் பிரச்சினைகளை ஆராய அம்பாறை மாவட்ட அரச அதிபர் நீல் டி அல்விஸ் உட்பட பல உயர்மட்ட அதிகாரிகள் குழு அங்கு சென்று வரை படங்களின் துணையுடன் நிலைமைகளை ஆராய்ந்துள்ளது. (ச)

# முதல்வர் மீரா சாஹிப் பதவி விலகக்கூடாது

## மு.காவை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றம்

கல்முனை,நவ.1

கல்முனை மாநகர சபை முதல்வராகப் பதவி வகித்து வரும் முஹமட்சிராஸ் மீரா சாகிப், தனது பதவியில் இருந்து விலகக் கூடாது. இந்தச் சபையின் இம் முறைக்கான ஆயுள்காலம் முழுவதும் அவர் தொடர்ந்தும் முதல்வர் பதவியில் இருக்க வேண்டும்.

அதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதன் ஒப்புதலையும், அங்கீகாரத்தையும் வழங்க வேண்டும்.

இவ்வாறு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக் கீமைக் கோரும் தீர்மானம் ஒன்று சாய்ந்தமருதில் நடைபெற்ற மக்கள் ஒன்று கூடல் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபை முதல்வர் முஹமட் சிராஸ் மீராசாகிப் தமது முதல்வர் பதவியை இராஜினாமா செய்யுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப் பீடத்தால் பணிக்கப்பட்டுள்ளார்.

அதனையடுத்து மக்கள் கருத்தறிவதற்கென முதல்வரால் ஒன்றுகூடல் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. இந்தக் கூட்டம் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மேலும் பல தீர்மானங்கள் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப் பீடத்துக்கு சமர்ப்பிப்பதற்கென ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

■ தற்போது சாய்ந்தமருது பிரதேசத்தின் அரசியல் அதிகார சமூகத்துக்குள் ஏற்பட்டுள்ள விரிசலையும், சவாலையும் எதிர்காலத்தில் பூரணமாக தவிர்த்துக் கொள்ளும் நல்லெண்ணத்தில், அடுத்து வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது சாய்ந்தமருது பிரதேசம் தனியான உள்ளூராட்சி மன்றமாக உருவாக்கப்பட வேண்டும். அதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

■ 35 ஆண்டுகளுக்குப் பின் எமது ஊருக்கு கிடைத்த கல்முனை மாநகர சபையின் முதல்வர் பதவியை, அரசியல் அந்தஸ்தை நாம் நிறைவாக அனுபவிக்கும் விதத்தில் எமது கட்சியின் தலைமைப் பீடத்துடன் சாய்ந்தமருது முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழு சமூகமாகப் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

■ சாய்ந்தமருது மக்களின் சமூக வாழ்வியலை நெறிப் படுத்துவதில் சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை என்றும் தனது கடமையிலிருந்து விலகிப் போனதில்லை.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை நீக்கி இது குறித்த நிலைப்பாடுகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துரைத்து சாதகமான தீர்வை மக்களுக்குப் பெற்றுத்தர வேண்டும்.

சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினர் தலைவர் வை.எம். ஹனிபா தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை அமைச்சர் ரவூப் ஹக்கீமை நேரில் சந்தித்து மேற்படி தீர்மானங்களுடன் கூடிய மனுவொன்றை சமர்ப்பித்துக் கலந்துரையாடவுள்ளனர். (ச-30)





## கலை இலக்கியப் பெருவிழா விபுலானந்தா நிறுவகத்தில்

மட்டக்களப்பு, நவ.1

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் கலை இலக்கியப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் 2012 ஆம் ஆண்டுக்கான சிறந்த தமிழ் நூல்களுக்கான விருதுகள் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், கிழக்கு மாகாண கல்வி.பண்பாட்டலுவல்கள், காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சர் விமலவீர திசாநாயக்க, கிழக்கு மாகாண பிரதம செயலர் டி.எம்.சரத் அபயகுணவரத்தன, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் உட்பட பலர் கலந்து கொள்வர். (ச)

## இயந்திரம் மூலம் நெல் விதைப்பு

### மட்டக்களப்பில் ஆரம்பம்



மட்டக்களப்பு. நவ.1

விவசாயத் திணைக்களத்தால் இயந்திரத்தின் மூலம் விதைப்பு மேற்கொள்ளும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை மட்டக்களப்பு, ஊறணி பிரதேச வயல்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இயந்திரத்தின் மூலம் ஒரு தடவைக்கு 70 கிலோ நெல்லை விதைக்க முடியும் என்று விவசாய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த இயந்திரத்தை மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் விதைப்பு நடவடிக்கைக்காக இலவசமாக பெற முடியும் என்று மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இரா.ஹரிகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண விவசாயத் திணைக்கள பணிப்பாளர் எம்.ஹுசைன், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை விவசாயத் திணைக்களப் பணிப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

## பதவியை இராஜினாமா செய்வதாக கட்சியுடன் ஒப்பந்தம் செய்யவில்லை

### கல்முனை முதல்வர் தெரிவிப்பு

கல்முனை மாநகர சபையின் முதல்வர் பதவியை இரண்டு வருடங்கள் வகித்த பின் பதவி விலகிக் கொள்வேன் என்று கட்சியுடன் எந்த ஒப்பந்தத்திலும் நான் கைச்சாத்திடவில்லை.

எனவே இந்த விடயத்தில் மக்களே தீர்மானிக்கும் சக்தி என்பது எனது நிலைப்பாடாகும்.

இவ்வாறு கல்முனை மாநகர சபை முதல்வர் முஹமட் சிராஸ் மீராசாகிப் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபை முதல்வர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள உத்தரவு தொடர்பில் எழுந்துள்ள நிலைமை தொடர்பாக மக்கள் கருத்தறியும் கலந்துரையாடல் கூட்டம் சாய்ந்த மருதில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

45 நாள்களுக்குள் அரசியலுக்கு வந்து கல்முனை மாநகர சபைத் தேர்தலைச் சந்தித்த நான், அந்தத் தேர்தலை சவாலாக எடுத்து முஸ்லிம் காங்கிரஸுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தேன்.

இதன் மூலம் முன்னர் மாநகர சபையில் 10 ஆசனங்களை கொண்டிருந்த முஸ்லிம் காங்கிரஸுக்கு அந்தத் தேர்தலில் பதினொரு ஆசனங்கள் கிடைக்கவும் வழிவகை யேற்பட்டது.

நான் கூடிய வாக்குகளைப் பெற்று கல்முனை மாநகர சபையின் முதல்வராகப் பதவியேற்ற கடந்த இரு வருடங்களிலும் அர்ப்பணிப்புமிக்க மக்கள் சேவையை ஆற்றி வருவதுடன் சர்வதேச ரீதியில் பேசப்படும் மாநகர சபையாகவும், கல்முனை மாநகர சபையை முன்னணி நிலைக்குக் கொண்டு வந்துள்ளேன்.

**தீர்மானிக்கும் சக்தி மக்களே**

நான் என்றும் கட்சிக்குக் கட்டுப்படுபவன். ஆனால் மக்களுக்காகவே கட்சியும், கட்சித் தலைமையும் என்பதை எளிதில் தூக்கியெறிந்துவிட முடியாது.

எனவே தீர்மானிக்கும் சக்தி மக்களிடமே உண்டு என்னை முதல்வராக்கிய மக்களே முதல்வர் பதவியிலிருந்து விலக வேண்டுமா? தொடர வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.- என்றார். (ச-30)

## சுற்றாடல் முன்னோடி பாசறை

மட்டக்களப்பு, நவ.1

மத்திய சுற்றாடல் அதிகார சபையால் மாவட்ட ரீதியாக சுற்றாடல் முன்னோடிப் பாசறைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கான பயிற்சிப் பாசறை வாகரை மகா வித்தியாலயத்தில் இரண்டு நாள்கள் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சியில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட முப்பத்தி மூன்று பாடசாலைகளில் இருந்து நூற்றிஐம்பது மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அவர்களுக்கு 'சுற்றாடல் எம்மைக் காக்கும்.நாம் சுற்றாடலை காப்போம்' என்னும் தொனிப் பொருளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (ச)

# தம்புள்ளை காளி கோவில் இடித்தழிப்பு; நடவடிக்கை எடுக்கவேண்டும் இ.தொ.கா.

## மனோ கணேசன் வலியுறுத்து



ஆளும் அரசில் அங்கம் வகிக்கும் பங்காளி கட்சி என்ற அடிப்படையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தம்புள்ளை, காளி கோவில் விவகாரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்நாட்டில் வாழும் தமிழ், இந்து மக்கள் சார்பாக இதனை வலியுறுத்துகிறேன் என்று ஜனநாயக மக் கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தம்புள்ளை காளி கோவில் இடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தம்புள்ளை என்பது மாத்தளை மாவட்டத்தின் ஒரு பகுதி. இந்த விவரம் மாத்தளை மாவட்டத்துக்கு வெளியே வாழும் பெரும்பாலானோருக்குத் தெரியாது. ஆனால் அதுதான் உண்மை. மாத்தளை மாவட்ட தமிழ், இந்து மக்கள் நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில், இ.தொ. கா உறுப்பினர் ஒருவருக்கு ஆதரவளித்து தெரிவு செய்துள்ளார்கள்.

எனவே, இதன் காரணமாகவும், ஆளும் அரசில் அங்கம் வகிக்கும் பங்காளி கட்சி என்ற அடிப்படையிலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தம்புள்ளையில் காளி கோவில் இடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனநாயக மக்கள் முன்னணி ஓர் எதிர்க்கட்சி. நாம் எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் இந்த மதவாத அநீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்க ஆரம்பித்து விட்டோம். நமது கடமையை நாம் செவ்வனே நிறைவேற்றி வருகிறோம். இ.தொ.கா ஆளும் அரசின் பங்காளி கட்சி என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் - இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அதிவேக வீதியில் 18 தனியார் பஸ்கள் சேவையில்

புதிதாக திறக்கப்பட்ட கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதியில் தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

அதன்படி 18 தனியார் பஸ்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

தனியார் சொகுசு பஸ்களில் 125 ரூபாவும், அதி சொகுசு பஸ்களில் 180 ரூபாவும் இதற்கான கட்டணமாக அறவிடப்படும் என அவர் குறிப்பிட்டார்.

## சான்றோர் கௌரவிப்பும் நூல் வெளியீடும்

சுகாதாரக் கல்வியாளர் கா.வைத்தீஸ்வரனின் நூல் வெளி யீடும், சமூகச் சான்றோர் கௌர விப்பு நிகழ்வும் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப. 4.15 மணிக்கு சைவப் புலவர், கலாபூஷணம் சு.செல் லத்துரை தலைமையில் வெள்ள வத்தை ருத்ரா மாவத்தையிலுள்ள கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் வைத்திய கலாநிதி வி.ஜெகநா தன் தம்பதியினர் முதன்மை விருந்தினராகவும், உணவு விவசாய நிறுவன ஓய்வுநிலை வதிவிடப் பிரதிநிதி எஸ்.திருஞானசம்பந்தர் தம்பதியினர், மேல் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜ.எல்.எம். இன்சார், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி அதிபர் ஜ.இராசரத்தினம், பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கோதை நகுலராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்கிறார்கள். சண்முகநாதன் கரிகரன் தம்பதியினர் நூலின் முதற் பிரதியைப் பெறுகிறார்கள்.

சமூக வள்ளல்கள் ஏ.எம்.சுப்பிரமணியம் - மாலதி தம்பதியினர், அண்ணா நிறுவனம் எஸ்.பி.நடராசா தம்பதியினர் முதலானோர் சமூகச் சான்றோர் கௌரவம் பெறுகிறார்கள். யோகாசனப் பேராசான் ந. ஆறுமுகம், தமிழ்ச்சங்கத் தலைவர் மு.கதிர்காமநாதன் ஆகியோரின் வாழ்த்துரைகளும், களனி வலயக் கல்விப் பணிப்பாளர் தி.கணேசராசாவின் நூல் வெளியீட்டுரையும், திருமதி சாந்தி வாமதேவனின் கருத்துரையும், பிரமுகர்கள், கௌரவிக்கப்படுவோரின் உரைகளும் இடம் பெறும்.




சமீபத்தில் புதுடில்லியில் 26ஆவது அகில இந்திய பல் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் சங்கத்தின் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் பிரபல முகச்சீரமைப்பு அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர். எஸ்.எம்.பாலாஜிக்கு அவரது சிறந்த ஆராய்ச்சிக்காக மிக உயரிய விருதான 'நிறுவனத் தலைவர்', விருதை அமெரிக்காவின் சர்வதேச பல் மருத்துவ ஆராய்ச்சியாளர் சங்கத்தின் தலைவரும், இலண்டன் லீட்ஸ் பல் மருத்துவ கல்லூரி முதல்வருமான பேராசிரியர். ஹெலன் வில்டன், வழங்கி கௌரவித்தார். அருகில் இந்தியப் பல் மருத்துவ சங்கத்தின் தலைவர் டாக்டர் மசும்தார் மற்றும் எய்ம்ஸ் துறைத்தலைவர் பேராசிரியர் நஷீம்ஷா ஆகியோர் நிற்கின்றனர்.

## குத்திக் கொலை

கேகாலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேகாலை நகரக் கிளையின் முகாமையாளர் அவரது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவேளை கூரிய ஆயுதமொன்றால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கேகாலை, ஹெட்டிமுல்ல, உடுமாகம பிரதேசவாசியான சுசில் நாணயக்கார என்ற நபரே கடந்த திங்கட்கிழமை அதிகாலை அவரது படுக்கையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டதாக கேகாலை பொலிஸார் தெரிவித்தனர்.

தனது மகளுடனும், மருமகனுடனும் வசித்துவந்த அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வழக்கம் போல் வீட்டின் முன்னறையில் உள்ள கட்டிலில் உறங்கியிருக்கிறார். திங்கட்கிழமை காலை அந்த அறைக்குச்சென்றுபார்த்த அவரது மகள் தந்தை இரத்தக்காயங்களுடன் கட்டிலில் கிடந்ததைப் பார்த்து கூக்குரல் எழுப்பியுள்ளார். அதையடுத்து அந்த அறைக்குவந்த மருமகன் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்திருக்கிறார். அந்த அறை உட்பக்கம் சாத்தப்பட்டிருந்ததாக மகள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட கேகாலை நீதிவான் சடலத்தை கேகாலை வைத்தியசாலையில் மருத்துவப் பரிசோத னைக்கு உட்படுத்துமாறு கேகாலை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கேகாலை பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஷிராணிக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

தமது சொத்துகளை வெளிப்படுத்தத் தவறினாரென முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கின் விசாரனை நவம்பர் 14 திகதியிலிருந்து 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் வேண்டுகோளை ஏற்று ஷிராணி பண்டாரநாயக்க மீதான வழக்கை ஒத்திவைக்கும் அறிவித்தலை கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய விடுத்துள்ளார்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவிருந்த காலப்பகுதியில் பொதுநலவாய மாநாடு நடக்கவிருப்பதால்இந்த விசாரணையை நடத்துவது தவிர்க்க முடியாத பிரச்சினைகளை தோற்றுவிக்கலாம் என்பதனால் குற்றஞ்சாட்டப்பட்ட ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான திகதியை நவம்பர் 14 ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கும்படி நீதவானிடம் ஆணைக்குழு ஒரு மனு மூலம் கேட்டிருந்தது.

இதனடிப்படையில் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு நவம்பர் 14 க்கு பதிலாக பெப்ரவரி 19 அன்று நீதிமன்றம் வரும்படி அழைக்கும் அறிவித்தலை நீதவான் விடுத்தார்.

## போதையுடன் சமுகம் கொடுத்த பிக்குவுக்கு விளக்கமறியல்

சிறுவர் துஷ்பிரயோக வழக்கின் எதிராளியாக நீதிமன்றத்தில் முன்னிலையான புத்த பிக்கு ஒருவர் மது போதையில் இருந்ததாக சந்தேகம் எழுந்ததால் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிவான் திருமதி பேமா ஸ்வர்ணாதிபதி உத்தரவிட்டார்.

பிக்குவை அநுராதபுரம் போதனை வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அநுராதபுரம், மாத்தளை சந்தியில் வசிப்பவரான பதுள்ளே தம்மகீர்த்தி என்ற பிக்குவே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

## கைதியின் இடுப்பிலிருந்த தாயத்துக்குள் சிறு வெடிகுண்டு

கொழும்புக் கோட்டை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட விளக்கமறியல் கைதியொருவரின் இடுப்பில் கட்டப்பட்டிருந்த தாயத்துக்குள் சிறு வெடிகுண்டொன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் அவரை நவம்பர் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் திருமதி ஜயகி டீ அல்விஸ் உத்தரவிட்டார்.

மண்டாவல பிரதேசவாசியான ஆர்.ஜீ.திமுத்து ரொஷான் ராஜபக்ஷ என்ற நபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மஹர சிறைச்சாலையிலிருந்து வெலிக்கடை சிறைக்கு இந்தக் கைதி மாற்றப்பட்டார். வெலிக்கடை சிறைக்குள் அனுமதிக்கப்படும் சமயம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே அவரது இடுப்பிலிருந்த தாயத்து பரிசோதிக்கப்பட்டது. அப்போதே சிறிய வெடிகுண்டொன்று மறைத்து வைத்திருந்தார் என்பது தெரியவந்தது.

# மேல்மாகாணத் தேர்தலில் இணைந்து போட்டியிடுமாறு சிறுபான்மைக் கட்சிகளை ஐ.தே.கட்சி அழைக்கவில்லை!

## கொழும்பு மாவட்ட அமைப்பாளர் ராம் தெரிவிப்பு



மேல்மாகாண சபைத் தேர்தலில் தம்முடன் இணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிடுமாறு ஏனைய சிறுபான்மை கட்சிகளை ஐக்கிய தேசியக் கட்சி அழைக்கவில்லை. ஐ.தே.கவில் இணைந்து போட்டியிட விரும்பும் சிறுபான்மை கட்சிகள் தமது விருப்பத்தை தெரிவித்தால் இது தொடர்பில் உரிய முறையில் ஐ.தே.க. ஆராயும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளரும் மேல் மாகாணசபை உறுப்பினருமான சி.வை.பி.ராம் தெரிவித்தார்.

மேல் மாகாண சபை டிசெம்பர் மாதம் இறுதிப் பகுதியில் அல்லது அடுத்த வருடம் ஜனவரி முன் பகுதியில் கலைக்கப்படலாமெனக் கருதப்படுகின்ற நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தேர்தலில், யானைச் சின்னத்தில் எம்முடன் இணைந்து போட்டியிடுமாறு ஐ.தே.க. ஏனைய சிறுபான்மை கட்சிகளைக் கேட்கவில்லை. அதே சமயம் இப்பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைக் கருத்தில் கொண்டு தமிழ் பேசும் வேட்பாளர்களை ஐ.தே.க. நிறுத்தத் தயாராகி வருகிறது.

ஐ.தே.க. இலங்கையின் பெரிய கட்சிகளில் ஒன்று. இதற்கு சிறுபான்மையினரின் ஆதரவு எப்போதும் இருக்கிறது. அதேபோல ஐ.தே.க. சிறுபான்மைத் தமிழர்களின் கோரிக்கைகளைத் தொடர்ந்து ஆதரித்து வந்துள்ளது. ஐ.தே.க. அவர்களின் உரிமைகளை எப்போதும் பாதுகாத்துவந்துள்ளது.

சிறுபான்மையின மக்கள் மேல் மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே.க விற்கு தமது பூரண ஆதரவை வழங்குவர் என நான் நம்புகின்றேன். மேல் மாகாணசபைத் தேர்தலில் இந்த ஆதரவு எமக்குக் கிடைக்கும்.

கொழும்பு மாவட்ட ஐ.தே.க. அமைப்பாளராகிய என்னிடம் இந்த நாட்டிலுள்ள தமிழ் பேசும் சமுதாயத்தின் தேவைகளைக் கவனிக்கும் பொறுப்பை கட்சி வழங்கியுள்ளது.

இந்த நாட்டிலுள்ள தமிழ், சிங்கள சமுதாயங்களிடையே ஒற்றுமையையும் நம்பிக்கையையும் ஏற்படுத்த நான் என்னாலான சகலதையும் செய்வேன் - என்றார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்குத் தேர்தல் குறித்த குற்றச்சாட்டு: விசாரணைக்கு ஒப்புமா அரசு...?

கடந்த செப்ரெம்பர் மூன்றாம் வாரத்தில் நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலைக் கண்காணித்த பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் அறிக்கை முக்கியமான விடயம்-விவகாரம்-ஒன்றைத் தெட்டத் தெளிவாக வலியுறுத்தி உள்ளது.

வடக்குத் தேர்தலில் இராணுவத் தலையீடு இடம்பெற்றுள்ளதாக எழுந்துள்ள முறையீடுகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே அதுவாகும்.

- தேர்தலுக்கு முந்திய பரப்புரைக் காலத்தில், இராணுவத் தலையீடும், அதன் செல்வாக்கும் ஊடுருவி இருந்தமையை நாம் கண்டறிந்தோம்; கவனத்தில் கொண்டோம்.
- இது மிகவும் பாரதூரமான செயற்பாடு. வாக்காளர்களைக் குழப்பி அடிக்கும் நடவடிக்கை.
- இத்தகைய தலையீடு குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.
- இவை போன்ற முறைகேடான செயற்பாடுகள் எதிர்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டும்.

இலங்கை சர்வாதிகாரப் போக்கில் செயற்படும் நாடல்ல. பல தடவைகள் நாம் தேர்தல்களை நடத்தியிருக்கிறோம். அவை எந்த வகைத் தலையீடும் இன்றிச் சுதந்திரமாகவே நடத்தப்பட்டிருக்கின்றன என்று அரசாங்கமும் அதன் அமைச்சர் பிரதானிகளும் தம்பட்டம் அடிக்கும் நிலையில்-

நடுவுநிலைமை நின்று செயற்பட்ட, கண்காணிப்புப் பணிகளை முன்னெடுத்த பொதுநலவாய கண்காணிப்புக் குழு விசாரணையை மிகு அக்கறையுடன் வலியுறுத்தி உள்ளது.

வடக்கு மாகாணத் தேர்தலைக் கண்காணித்த உள்நாட்டுக் கண்காணிப்பு அமைப்புகளான தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையம் (C.M.E.V) சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தலுக்கான இயக்கம் (PAFFREL), நீதிக்கும் சுதந்திரத்துக்குமான தேர்தல் அமைப்பு (CAFE) ஆகியனவும் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிலையை ஒத்ததான கருத்துக்களை வெளியிட்டிருந்தன.

பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக் குழு வெளிப்படுத்தி உள்ள பின்வரும் ஏனைய பரிந்துரைகளும் கருத்திலும் கவனத்திலும் கொள்ளப்பட வேண்டியவை; முக்கியமானவை:

- பாரபட்சமற்ற முறையில் தமது கடமையை மேற்கொண்ட உள்ளக தேர்தல் கண்காணிப்பாளர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இது குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும். பரிகாரமும் காணப்பட வேண்டும்.
- சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட வேண்டும்.
- உள்ளக கண்காணிப்பாளர்கள் சுயாதீனமாக செயற்படுவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் அவசியம்.
- தேர்தல்கால நடவடிக்கைகளை வலியுறுத்தும் விதிமுறைகளும் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.
- தேர்தல் கால அரச உடைமைகள் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான சட்டமும் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
- குளறுபடிகளுக்கும், குழப்பங்களுக்கும் தூபமிடும் நோக்கத்துடனான பேச்சுக்களைத் தடுப்பதற்கு இறுக்கமான நடவடிக்கைகள் அவசியம்.
- ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு, தேர்தல் காலத்தில் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.
- ஊடகங்கள் சுயாதீனமாக சமன்பாடான செய்திகளை, தகவல்களை, மேற்கொள்வதற்கான ஊடகக் கலாசாரமும் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதில் தமக்கு அதீத அக்கறை உள்ளதாகப் பெரும்போக்குடன் பறைசாற்றி வருகின்ற எங்கள் நாட்டு (கொழும்பு) அரசும், அதன் பிரதானிகளும்-

பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் கருத்துக்களையும், பரிந்துரைகளையும் ஏறெடுத்துத் தானும் பார்ப்பார்களா என்பது சந்தேகமே.

அந்த அமைப்புத் தெரிவித்த அவதானிப்புக்கள், தவறு காண வேண்டும் என்ற கறுப்புக் கண்ணாடி அணிந்து பார்க்கப்பட்டவை என்று அரசு தட்டிக்கழிக்குமா என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

எங்களின் மீது தவறு கண்டுபிடிக்கவும், அதனைச் செய்ய வேண்டும், இதனைச் செயலாக்க வேண்டும் என்றவாறு பாடம் கற்பிக்கவும் இவர்கள் யார்?- என்று வெகுண்டு சீற்றம் கொண்டு துள்ளிக் குதிக்கும் சாத்தியமே அதிகம். மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் முதற்கொண்டு பல விவகாரங்களில், விடயங்களில் நடைபோடும் அதே பாணியில், பாதையில் அரசு வழித்தடம் போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# சுண்டெலி மிரட்டுகிறது; யானையோ பதுங்குகிறது!

பழ. நெடுமாறன்

பொது நலவாய நாடுகளின் மாநாட்டைப் புறக்கணிக்கும் நாடுகள் அந்த அமைப்பிலிருந்து தம்மைத் தாமே தனிமைப்படுத்திக் கொள்வதாகக் கருதப்படும். இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்காவிட்டால் அதனால் யாருக்கு பாதிப்பு என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும் எனப் புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் காரியவாசம் எச்சரித்திருக்கிறார்.

அதாவது இந்தியா தனிமைப்படுத்தப்படும் எனவும், இந்தியாவுக்குத் பாதிப்பு ஏற்படும் எனவும் மிரட்டும் அளவுக்கு அவர் சென்றிருக்கிறார். ஒரு நாட் டின் தூதர் எந்த வரம்புக்கு உட்பட்டுப் பேச வேண்டுமோ அந்த வரம்பைத்தாண்டி அவர் பேசியுள்ளார்.

### யார் கொடுத்த துணிவு

இந்தியாவின் தலைநகரிலேயே இந்த மிரட்டலை விடும் அளவுக்கு அவருக்குத் துணிச்சல் ஏற்பட்டிருக்கிறது. சாதாரணமாக ஒரு பிற நாடொன்றின் தூதர் இது போன்று வரம்பு மீறிக் கருத்து வெளியிட்டால் அவரைக் குறிப்பிட்ட நாட்டின் வெளியுறவுத்துறைச் செயலாளர் அழைத்து கடும் கண்டனத்தைத் தெரிவிப்பது வழக்கம். ஆனால் இலங்கைத் தூதரின் மிரட்டலுக்கு இந்திய அரசின் சார்பில் யாருமே எத்தகைய கண்டனமும் தெரிவிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சின்னஞ்சிறு நாடான இலங்கையின் தூதர், உலகில் இரண்டாவது பெரிய நாடான இந்தியாவைப் பகிரங்கமாக மிரட்டுகிறார். யார் யாரோ நாட்டை சிறிதும் மதிக்காமல் எடுத்தெறிந்து பேசுகின்ற நிலை இந்தியாவுக்கு வந்திருப்பது குறித்து அனைவருமே வெட்கப்பட வேண்டும். அதிலும் உலக நாடுகளுக்கு முன்பாக இனப் படுகொலைக் குற்றவாளியாக குற்றம்சாட்டப்பட்டிருக்கும் ராஜபக்ஷவின் தூதுவர் துணிந்து அச்சுறுத்துகிறார் என்றால், இந்தத் துணிச்சல் அவருக்கு எப்படி வந்தது? இலங்கையில் போரின்போது நடைபெற்ற மனித உரிமை மீறல்களும் இன அழிப்பு நடவடிக்கைகளும் கடந்த நான்காண்டுகளைக் கடந்து இன்னமும் தொடர்கின்றன. டப்ளின் மக்கள் தீர்ப்பாயமும், ஐ.நா. விசாரணைக் குழுவும், ஐ.நா. மனித உரிமை ஆணையரும் மேற்கண்ட குற்றச்சாட்டுகளை உறுதி செய்து அறிவித்த பின்பும், உலக அரங்கில் தலைகுனிந்து நிற்க வேண்டிய இலங்கை அரசு தலை நிமிர்ந்து நின்று இந்தியாவுக்கு எச்சரிக்கை விடும் அளவுக்குத் துணிவு பெற்றிருப்பது எதனால்? யாரால்? இலங்கையின் தமிழ்ப் பகுதியில் சொல்லொணாக் கொடுமைகள் இன்னமும் தொடர்கின்றன. பெண்களுக்குக் கட்டாயக் கருத்தடை, போரில் கணவரை இழந்த பெண்கள் மீதான பாலியல் சித்திரவதை சிங்கள இராணுவத்தினருக்குத் தமிழ்ப் பெண்களைக் கட்டாயப்படுத்தித் திருமணம் செய்து வைப்பது போன்ற இனத்தின் அடையாளத்தையே அழிக்கும் நடவடிக்கைகள் தங்கு தடையின்றி நடைபெறுகின்றன.

### தொடரும் ஆதரவு

2009-ஆம் ஆண்டு போர் முடிவடைந்த நிலையில், வெற்றி விழா கூட்டத்தில் முழங்கிய ராஜபக்ஷ, எதிர்காலத்தில் இலங்கையில் இரு இனங்கள் தான் இருக்கும். ஒன்று சிங்கள இனம் மற்றொன்று சிங்களக் கலப்பினம் என்று மார்தட்டிக் கூறியதை நடைமுறையில் செயல்படுத்தும் வேலையில் இராணுவம் ஈடுபட்டிருக்கிறது.

படிப்படியாக நடத்தப்பட்டு வருகின்ற இத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த இந்தியா எதுவும் செய்யவில்லை. மாறாக, ஐ.நா. மனித உரிமை சபையிலும், பிற சர்வதேச அரங்குகளிலும் உலக நாடுகளின் கண்டனத்திலிருந்து இலங்கையைக் காப்பாற்றும் முயற்சியில் இந்தியா தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

தன்னை ஆதரித்துத் தீர வேண்டிய நிலையிலிருந்து இந்தியா ஒரு போதும் மாற முடியாது என்பதைப் புரிந்து கொண்ட ராஜபக்ஷ தனது தூதுவரை வைத்து இந்தியாவை வெளிப்படையாக மிரட்டுகிறார். காரியவாசம் மட்டும் இவ்வாறு பேசியிருக்க முடியாது. அவருக்குப் பின்னணியில் இருந்து ராஜபக்ஷதான் இவ்வாறு பேச வைத்திருக்க வேண்டும்.

இதற்குப்பதில் கூறத் துணிவில்லாமல், பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்துக் கொள்ளாவிட்டால் எம்முடைய பொருளாதார, வர்த்தக நலன்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகும் எனக் கற்றுக்குட்டி மத்திய அமைச்சர் ஒருவர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். இவரைப் போன்றவர்களுக்கு இந்தியாவின் கடந்த கால வரலாறு சிறிதளவு கூடத் தெரியவில்லை.

### தென்னாபிரிக்காவை இந்தியா வெளியேற்றியது

தென்னாபிரிக்கா தனது நிறவெறிக் கொள்கையைக் கைவிட வேண்டும் அல்லது பொதுநலவாயத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று பொது நலவாய மாநாட்டில் அன்றைய பிரதமர் நேரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியதோடு மட்டுமல்ல, தென்னாபிரிக்காவைப் பொதுநலவாயத்தில் இருந்து வெளியேறவும் வைத்தார்.

அவரைத் தொடர்ந்து பிரதமர் இந்திரா செயற்பட்டார். 1976-ஆம் ஆண்டில் ஐ.நா.வின் மூலம் தென்னாபிரிக்காவுக்கு எதிரான பொருளாதாரப் புறக்கணிப்பு மேற்கொள்ளவும், இராஜதந்திர உறவுகளைத் துண்டித்துக் கொள்ளவும் வேண்டுமென ஐ.நா. பேரவையில் இந்தியாவும் மேலும் பல நாடுகளும் இணைந்து கொண்டு வந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதுபோன்ற தொடர் நடவடிக்கைகளின் மூலம் தென்னாபிரிக்கக் கறுப்பின மக்களுக்கும், தமிழர்களுக்கும் விடிவு கிடைக்க இந்தியா வழி செய்தது. வெள்ளையர் ஆட்சி மறைந்து அந்நாட்டு மக்களின் உண்மையான ஆட்சி ஏற்பட்டது. வெஞ்சிறையில் 27 ஆண்டு காலம் வாடிய நெல்சன் மண்டேலா அந்நாட்டின் அதிபரானார்.

ஆனால் இன்று நிறவெறியை விட மோசமானதான இனவெறியைக் கடைப் பிடித்துத் தமிழர்களைக் கொன்று குவித்து வரும் ராஜபக்ஷக்கு துணை நின்று தோள் கொடுக்கும் கைங்கரியத்தைப் பிரதமர் மன்மோகன் சிங் செய்து வருகிறார்.

இத்தகையச் செயல்களின் மூலம் சீனாவின் பிடியில் சிக்கிக் கொண்டிருக்கின்ற ராஜபக்ஷவை இந்தியாவின் பக்கம் ஈர்த்து விட முடியுமென நம்புவது, கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிப்பது போன்றதாகும். இந்த உண்மையை இந்திய அரசு என்றைக்கு உணர்கிறதோ அன்றைக்குத்தான் காரியவாசம் போன்றவர்கள் இந்தியாவை அவமதிப்பது முடிவுக்கு வரும்.

### பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடக்கக்கூடாது


பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்ளக் கூடாது என்பது நமது கோரிக்கையல்ல. இனவெறி கொண்ட இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடத்தப்படக்கூடாது. அப்படி நடத்தப்பட்டால் அதன் மூலம் இரண்டாண்டு காலத்துக்குப் பொதுநலவாய அமைப்புக்கு ராஜபக்ஷ தலைமை தாங்கும் நிலை ஏற்படும். சர்வதேச நீதிமன்றத்துக்கு முன்னால் குற்றவாளியாக நிறுத்தப்பட வேண்டிய ஒருவருக்கு அரசியல் ரீதியாக இது போன்ற உயர்ந்த தகுதி அளிக்கப்படுவது, அவர் மீது உள்ள குற்றச்சாட்டுகளை மூடி மறைப்பதற்கு உதவுவதாகும் என்பதுதான் நமது எதிர்ப்புக்குக் காரணம்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி இந்தியா செயற்பட்டிருக்குமானால் பொதுநலவாயஅமைப்பில் உள்ள பல நாடுகளும் இந்தக் கோரிக்கையை ஆதரித்து அதன் விளைவாக மாநாடு வேறொரு நாட்டுக்கு மாற்றப்பட்டிருக்கும். ராஜபக்ஷவும் அடங்கி ஒடுங்கியிருப்பார். செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்ய இந்தியா முன்வராததால், யார் யாரோ மிரட்டுகிற நிலைக்கு இந்தியா ஆளாக நேர்ந்திருக்கிறது.

சின்னஞ்சிறிய சுண்டெலியின் மிரட்டலுக்கு அஞ்சப் பெரிய யானை பதுங்குவது போன்ற நிலை ஏற்பட்டிருப்பது உலக அரங்கில் இந்தியாவுக்கு மாறாத தலைக் குனிவைத் தேடித் தந்து விட்டது.

கொழும்பில் நடக்கவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளப் போகிறதா அல்லது புறக்கணிக்கப் போகிறதா என்பதோ, பிரதமர் கலந்து கொள்கிறாரா இல்லை வெளியுறவுத் துறை அமைச்சர் கலந்து கொள்கிறாரா என்பதோகூட அல்ல பிரச்சினை.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதராக இருக்கும் ஒருவர், 120 கோடி மக்கள் தொகை கொண்ட, உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாட்டை மிரட்டுகிறார், ஆலோசனை கூறுகிறார் என்றால், அதற்காகத் தலைகுனிய வேண்டியவர் பிரதமர் மட்டுமல்ல; அவரை அரியணையில் அமர்த்தி அழகு பார்க்கும் இந்தியக் குடிமக்கள் அனைவருமேதான்!



தன்னை ஆதரித்துத் தீர வேண்டிய நிலையிலிருந்து இந்தியா ஒரு போதும் மாற முடியாது என்பதைப் புரிந்து கொண்ட ராஜபக்ஷ தனது தூதுவரை வைத்து இந்தியாவை வெளிப்படையாக மிரட்டுகிறார்.



# மனவலிகள் அகன்று தீப ஒளி பெருகட்டும்

சோபனா

"ஒன்று இருநூறு; இரண்டு முன்னூறு; வாங்கக்கா வாங்க! இதைப்பாருங்கோ; நல்ல கலர்; அது உங்களுக்கு பொருத்தமாக இருக்கும். விலை குறைச்சுப் போட லாம். வேண்டியதை எடுங்கோ!" பொது மக்களைக் கூவி அழைக்கும் வியாபாரம் யாழ். நகரில் ஆங்காங்கே களை கட்டத் தொடங்கியுள்ளது.

தீபாவளிப் பண்டிகைக்கான வியாபாரத்துக்கெனத் தென்னிலங்கைப் பகுதியில் இருந்து புடவை வகைகளைக் கொண்டுவந்து குவித்துள்ள வியாபாரிகளின் குரல்கள் தான் இவை. தாம் கொண்டு வந்தவற்றை விற்று முடித்து விட வேண்டும் என்பது தான் அவர்களது நோக்கம். தீபாவளிப் புடவை வகைகளை வாங்கவென வந்தவர்களை வெறுங்கையுடன் திரும்பிச் செல்ல விட்டுவிடாமல் பசப்பு வார்த்தைகளால் விற்பனை செய்து முடித்து விடுவார்கள் அவர்கள். தென்னிலங்கை வியாபாரிகளது கொண்டாட்டம் ஒருபுறம் இப்படி இருக்க, யாழ்.நகர் வர்த்தகர்களின் வியாபாரம் கடந்த வருடத்தைப் போன்று இந்த வருடமும் சோபிப்பதாக இல்லை.

தீபாவளி வியாபாரத்தை எதிர்பார்த்து தென்னிலங்கைப் பகுதி மற்றும் இந்தியாவில் இருந்து தேவையான உடுபுடைவைகளை யாழ்.நகர் வர்த்தகர்கள் வாங்கிக் குவித்துள்ளனர். இதெல்லாம் பண வசதி படைத்த உயர் மட்டத்தவர்களுக்குத் தான் பயன்தந்துள்ளது. சாதாரண மக்களளின் எதிர்பார்ப்பு, விலை குறைவான பொருள்களை வாங்குவதே என்பதால், தென்னிலங்கை வியாபாரிகளின் நடைபாதைக் கடைகள் அவர்களுக்குக் கைகொடுத்து உதவுகின்றன.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஏட்டிக்குப் போட்டியான வியாபாரம் யாழ். நகரத்தை பரபரப் பாக்கிக் கொண்டிருக்கிறது. நடை பாதைக் கடைகளில் குவியும் சனக் கூட்டத்தை நகர்க் கடைகளில் காணமுடியவில்லை. எதிர்பார்த்த வியாபாரமும் அவர்களுக்குக் கைகொடுக்கவில்லை.

ஏற்கனவே நொந்து நூலாகிப் போய் கடன் சுமையால் ஊசலாடிக் கொண்டிருக்கும் யாழ்.நகர் புடவை வர்த்தகர்கள் அதில் இருந்து மீண்டெழுவதற்கு இந்த வருஷத்துத் தீபாவளி சீசன் விற்பனையாவது வெளிச்சத்தைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையுடன் கடன்பட்டாவது உடு புடைவைகளை தேவையான அளவு வாங்கி வைப்போம் எனும் எண்ணத்தில் ஒரு மாதத்துக்கு முன்பாகவே அதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தனர்.

"எங்கட கடையில இப்ப கிடக்கிறது எல்லாம் இந்தியன் புடைவை வகைகள் தான். சனம் இப்ப இந்தியன் புடைவைகளைத்தான் வாங்குகிறார்கள். ஏஜென்ஸி மூலம் தான் கொழும்பில் இருந்து இதெல்லாம் கொண்டு வந்தம். போட்ட முதல் கிடைக்குமோ என்பது சந்தேகம் தான். இந்த வருடமும் பெரிசா வியாபாரம் எழும்பேல்லை. ஏதோ வியாபாரம் போய்க் கொண்டிருக்கு" சலிப்புடன் கூறி முடித்தார் நகர் நகரின் முக்கிய பகுதியில் நிரந்தரமான புடைவை வியாபார நிலையத்தை நடத்தும் வர்த்தகரான சண்முகம்.

"இதை ஏன் நீங்கள் கேட்கிறீர்கள்? முற்றவெளிப் பக்கம் போய்ப் பாருங்கோ. திருவிழாவுக்குப் போன மாதிரிச் சனம் குவிஞ்சு நிற்குதுகள். பிறகு எப்படி இங்கு வியாபாரம் நடக்கும்?" இன்னொரு வர்த்தகர் மனவெப்பியாரத்துடன் சொல்லி முடித்தார்.

யாழ்.நகருக்குள் உள்நுழையும் சனக் கூட்டம் முற்றவெளிப் பக்கம் தான் சென்று கொண்டிருந்தன. மலிவு விலையில் புடைவை வியாபாரம் தமக்கு அங்க தான் கிடைக்கும் என்பது அவர்களது நம்பிக்கை. ஆனால் வாங்குகின்ற பொருளின் தரத்தை அவர்களால் கணித்துப் பார்க்க முடியவில்லை. அவர்களது பொருளாதார நிலைமையும் அவ்வாறான சூழலில் தான் இருக்கிறது.

தீபாவளிப் பண்டிகைக்கான உடு புடைவை வியாபார்த்தின் ஆரவாரம் இப்படி இருக்கு. சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் எல்லாம் தீபாவளியை எப்படிக் கொண்டாடப் போகிறோம் என்பது குறித்து இப்போதே திட்டம் தீட்ட ஆரம்பித்துள்ளார்கள்.

**வாழ்த்து அட்டைகளே அரிதாகி விட்டன**


சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தீபாவளி சமயத்தில் ஒரு ரூபா வாழ்த்து அட்டையை எனது நண்பியின் கொப்பிக்குள் தெரியாமல் மறைத்து வைத்து வாழ்த்துச் சொன்ன ஞாபகம் மனதில் வந்து போனது. இப்பெல்லாம் அந்த வாழ்த்து அட்டைகளைக் கண்களால் காண முடியவில்லை. அதை வாங்கி அனுப்பி சந்தோசம் கொண்டாட அவர்களுக்கு நேரமும் இல்லை. அண்ணனின் மகளுக்கு தீபாவளி உடுப்பு அனுப்புவதற்காக தபாலகத்துக்கு சென்றிருந்தபோது, அதோடு இணைத்து ஒரு வாழ்த்து மடலையும் அனுப்பி விடலாம் என்று தபால் ஊழியரிடம் தீபாவளி வாழ்த்து அட்டையொன்று இங்கு எங்காவது அருகில் வாங்க இயலுமா? என்று கேட்டேன். நீங்கள் எந்தக் காலத்தில இங்க இருக்கிறீங்கள். இப்ப எவன் வாழ்த்துமடல் அனுப்புறான். வியாபாரம் இல்லாம அதை ஏன் இங்க வாங்கிப்போட்டு தூது தட்ட வேணும் என்று கடைக்காரர்களும் அதில அக்கறை காட்டுவதில்லை என்று பதில் சொன்னார்.

மாற்றம் கண்டுவரும் வாழ்வியலுக்கு ஏற்ப வியாபார முறைமைகளும் இப்போதெல்லாம் மாறி விட்டன. பழைமைகளைப் பின்பற்றிச் செல்ல இங்கு எவரும் இல்லை.

முன்பெல்லாம் எத்தனை தீபாவளி அட்டைகள் தீபாவளி நெருங்கி விட்டால் தபாற்காரர் ஊடாக வீடு தேடிவரும். அந்தச் சந்தோசம் தேடினாலும் இனி எமக்கு கிடைக்கப் போவதில்லை என்பதுதான் உண்மை. கொண்டாட்டங்களும் நவீன உலகுக்கு ஏற்ப மாற்றமடைந்து கொண்டே போகின்றன. பொதுவாகவே இன்று தீபாவளிப் பண்டிகைக்கான முன்னாயத் தங்கள் எல்லாமே குடாநாட்டு மக்கள் மத்தியில் மந்தகதியில் தான் உள்ளது.

ஏதோ சின்னஞ் சிறுசுகளது ஆசைகளுக்காக உடுபுடைவை கள் வாங்குவதில் பெற்றோர் ஆர வாரப் பட்டுக் கொண்டிருக்கிறார் கள். விடுமுறையுடன் பண்டிகைக் காலத்தை கொண்டாட அவர்கள் மனதளவில் மகிழ்ச்சியாகவில்லை. ஒவ்வொருவர் மனதுகளிலும் ஒவ்வொரு சுமை. மக்கள் மனதில் வெளிச்சம் ஏற் பட்டால் மட்டுமே பண்டிகைக் காலங்களும் வெளிச்ச மடையும். சிறப்புறும் மகிழ்ச்சியளிக்கும்.

> தீபாவளி வியாபாரத்தை எதிர் பார்த்து தென்னிலங்கைப் பகுதி மற்றும் இந்தியாவில் இருந்து தேவையான உடுபுடைவைகளை யாழ்.நகர் வர்த்தகர்கள் வாங்கிக் குவித்துள்ளனர். இதெல்லாம் உயர் மட்டத்தவர்களுக்குத் தான் பயன்தந்துள்ளது.சாதாரண மக்களது எதிர்பார்ப்பு விலை குறைவான பொருள்களை வாங்கு வது என்பதால் தென்னிலங்கை வியாபாரிகளது நடைபாதைக் கடைகள் அவர்களுக்கு உதவுகின்றன



## மீன்பிடி அமைச்சருக்கு மன்னாரில் வரவேற்பு



யாழ்ப்பாணம், நவ.1
வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கான வரவேற்பு நிகழ்வொன்று அவரது சொந்த ஊரான மன்னார் ஆண்டாங்குளத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.
பிரதேச அமைப்புக்களும், அப்பகுதிமக்களும் இணைந்து நடத்திய இந்த வரவேற்பு நிகழ்வில் வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிப மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரும், சட்டத்தரணியுமான பா.டெனீஸ்வரன் கலந்து கொண்டார்.
ஆட்காட்டிவெளி புனிதசவேரியார் ஆலயத்தில் விசேட நன்றி திருப்பலியுடன் ஆரம்பித்து திருப்பலி நிறைவின் பின்னர் ஆலய முன்றலில் இருந்து தமிழர் பண்பாட்டுக் கமைவாக வாத்தியங்கள் முழங்க ஆண்டான்குளம் கத்தோலிக்கதமிழ்க்கலவன் பாடசாலைக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு, பாடசாலை மண்டபத்தில்நிகழ்வுகள் இடம்பெற்றன. (வ-5)

## கலாசார மண்டபம் அமைக்கும் பணி

யாழ்ப்பாணம், நவ.1
வேலணை துறையூர் கலாசார மண்டபம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
பத்து லட்சம் ரூபா செலவில் குறித்த மண்டபம் அமைக்கப்படவுள்ளது.
இதேவேளை- துறையூர் சேமக்காலை வீதியைப் புனரமைக்கும் நடவடிக்கை இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப் படவுள்ளது. 5 மில்லியன் ரூபா நிதி இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ். சிவராசா தெரிவித்தார். (வ-7)

# முல்லைத்தீவில் யானைகளை பிடிக்கும் செயற்பாடு ஆரம்பம்

## ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு



முல்லைத்தீவு.நவ.1
தென்னிலங்கையிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்குக் கொண்டு வந்து விடப்பட்ட யானைகளைப் பிடிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இனிமேல் யானைகள் கொண்டு வந்து விடப்படுவதை அனுமதிக்க முடியாதென ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி. எம்.பி.பண்டார தெரிவித்தார்.
ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஏசியன் ஒவ் பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைத் தீவு மாவட்டப் பொலிஸ் உதவி அத்தியட்சகர் டபிள்யு. ஜி. ஜே.சேனாதீரவின் ஏற்பாட்டில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.பி.பண்டார தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து உரையாற்றும்போது, இந்தப் பிரதேசம் மின்சாரமில்லாது இருளில் மூழ்கியுள்ளது. இதனால் பொது இடங்களில் கிராமத்துக்கு ஒன்று என்ற அடிப்படையில் பெரிய சோலர் விளக்குகள் ஏசியன் பவுண் டேசன் நிறுவனத்தால் பொருத்தப்படவுள்ளன. மேலும் ஆங் காங்கு முறைப்பாட்டுப் பெட்டிகளும் வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிராமங்களில் உருவாக்கப்பட்டுள்ள சிவில் குழுக்கள் மூலம் மக் களது தேவைகளை அறிந்து அவற்றை உடனுக்குடன் நிறைவேற்ற வுள்ளோம்.
அத்தோடு பாடசாலை மாணவர்களின் ஒழுக்கத்தைச் சீர்செய்து கொடுக்கவுள்ளோம்.
இதேவேளை குளங்களின் கீழ் சீர் செய்யப்படாத வாய்க்கால்கள் புனரமைக்கப் படுவதுடன், கட்டுமானப் பணிகளை நீர்ப்பாசன திணைக்களம் மேற்கொள்ளும்.
தென்னிலங்கையிலிருந்து கொண்டுவந்து விடப்பட்ட யானைகளைப் பிடிப்பதற்கு ஆவன செய்யவுள்ளோம். இவ்வாறு யானைகளைக் கொண்டு வந்து விடுவதை இனிமேல் அனுமதிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.
அத்துடன் ஆஸ்திரேலியாவுக்கான பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் எனவும் பணத்தைக் கொடுத்து ஏமாற வேண்டாமெனவும் அவர் தெரிவித்தார்.
இதில் 500 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண் டமை குறிப்பிடத்தக்கது. (க-500)

"_"

இந்தப் பிரதேசம் மின்சாரமில்லாது இருளில் மூழ்கியுள்ளது. இதனால் பொது இடங்க ளில் கிராமத்துக்கு ஒன்று என்ற அடிப்படையில் பெரிய சோலர் விளக்குகள் ஏசியன் பவுண்டேசன் நிறுவனத்தால் பொருத்தப்படவுள்ளன. மேலும் ஆங்காங்கு முறைப்பாட்டுப் பெட்டிகளும் வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். உங்களைத் தேடி வந்து சிலர் உதவி கேட் பார்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**இடபம்**: அதிகாரபூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**மிதுனம்**: எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் அதரவு கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**கடகம்** : தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**சிங்கம்**: மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர் களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைப் பளு குறையும். எதிர்பார்த்த இடத்தி லிருந்து உதவி கிடைக்கும். அரச வேலைகள் சுமுகமாக முடியும்.

**கன்னி**: சிலர் உங்களைத் தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும்.

**நாளை**

ஐப்பசி-16 சனிக்கிழமை 02.11.2013
திதி: சதுர்த்தசி மு.இ.08.11 வரை
நட்சத்திரம்: சித்திரை பி.இ.12.56 வரை
சுபநேரம்: 03.04 - 04.34 வரை
இராகுகாலம்: 09.04 - 10.34 வரை

**துலாம்**: எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். அரசு காரியங்கள் இழுபறியாகும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் விவாதத்தைத் தவிருங்கள்.

**விருச்சிகம்**: வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள்.

**தனுசு**: நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள். வியாபாரத்தில் வரவேண்டிய மிகுதிகளை விரைந்து வசூலிப்பீர்கள்.

**மகரம்**: சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள்.

**கும்பம்**: சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். சிலவிடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். உத்தியோகத்தில் கூடுதலாக வேலை பார்க்க வேண்டி வரும்.

**மீனம்**: துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் குறையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

## சுடோக்கு


### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | | 1 | 8 | 7 | 4 | |
| | | | 4 | 9 | 2 | 8 | 1 | |
| | 4 | 1 | | | | | | 2 |
| | 6 | | 9 | | 7 | | | |
| 3 | | | | 2 | | | | 1 |
| | | | 1 | | 4 | | 3 | |
| 7 | | | | | | 5 | 8 | |
| | 5 | 8 | 3 | 7 | 9 | | | |
| | 2 | 6 | 5 | 8 | | | | 4 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 2 | 6 | 1 | 8 | 7 | 4 | 3 |
| 6 | 3 | 7 | 4 | 9 | 2 | 8 | 1 | 5 |
| 8 | 4 | 1 | 7 | 5 | 3 | 6 | 9 | 2 |
| 1 | 6 | 4 | 9 | 3 | 7 | 2 | 5 | 8 |
| 3 | 7 | 9 | 8 | 2 | 5 | 4 | 6 | 1 |
| 2 | 8 | 5 | 1 | 6 | 4 | 9 | 3 | 7 |
| 7 | 1 | 3 | 2 | 4 | 6 | 5 | 8 | 9 |
| 4 | 5 | 8 | 3 | 7 | 9 | 1 | 2 | 6 |
| 9 | 2 | 6 | 5 | 8 | 1 | 3 | 7 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்புப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# உங்கள் விருப்பங்களை அறிந்து சொல்லும் கமரா

தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சியின் பயனாக இன்று உலகில் பல்வேறு மாற்றங்கள் அசுர வேகத்தில் இடம்பெற்று வருகின்றன.
அதிலும் ஸ்மார்ட் கைபேசிகிளின் கண்டுபிடிப்புக்குப் பின்னர், அவற்றின் பயன்பாடு பரந்துபட்டதாகக் காணப்படுகின்றது.
தற்போது ஸ்மார்ட் கைபேசியை அடிப்படையாகக் கொண்டதும் தலையில் அணியக்கூடியதுமான விசேட கமரா ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
இக்கமரா, மூளையிலிருந்து பிறப்பிக்கப்படும் அலைகளை துல்லியமாக அறிந்து ஒரு நபரின் விருப்பங்களைப் பதிவு செய்யும் ஆற்றல் உடையதாகக் காணப்படுகின்றது.

## பி.எம்.டபிள்யூ 2 ரக “கூப்” (BMW 2 Series Coupe) கார்கள் விற்பனைக்கு தயார்



கார் பாவனையாளர்களின் மனங்களை வென்ற பி.எம்.டபிள்யூ.நிறுவனத்தின் புதிய அறிமுகமாக BMW 2 Series Coupe கார்கள் சந்தைக்கு வரவுள்ளன. அடுத்த வருட ஆரம்பத்தில் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படும் இக்கார்கள், 228ஐ, எம்.235ஐ மொடல்களை கொண்டுள்ளன.
இதில் பி.எம்.டபிள்யூ.228ஐ கார், 240 குதிரைவலு உடையதாகவும், 5.4 செக்கன்களில் 155 எம்.பி.எச். என்ற வேகத்தைப் பெறக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதேவேளை பி.எம். டபிள்யூ. எம்.235 .ஐ கார், 322 குதிரை வலு உடையதாகவும் 4.8 செக்கன்களில் 155 எம்.பி.எச். என்ற வேகத்தை பெறக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. பி.எம்.டபிள்யூ 228.ஐ காரின் விலை 33,025 டொலர்கள் எனவும், பி.எம்.டபிள்யூ. எம்.235ஐ காரின் விலை 44,025 டொலர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘ஐ’ போன்களின் தொடுதிரையின் துல்லியம் குறைவு என்பது கண்டுபிடிப்பு


அப்பிள் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவான ஐ பேட் மினியின் தொடுதிரை, ஏனைய தொடுதிரைச் சாதனங்களை விடவும் வேகம் கூடியது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும் அப்பிள் நிறுவனத்தின் ஐபோன் 5-எஸ்., ஐபோன் 5-சீ ஆகியவற்றில் காணப்படும் தொடுதிரை, சம்சுங் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட பழைய கலக்ஸி எஸ் 3 கைபேசிகளின் தொடுதிரையை விடவும் துல்லியம் குறைவானது எனக் கண்டறியப்பட்டுள்ளது. அதிலும் Q, O, மற்றும் P. போன்ற எழுத்துக்களை தட்டச்சுச் செய்யும்போது, கூடிய கடினத்தன்மையை ஐ போன் பயனர்கள் எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## ஸ்மார்ட் கடிகார உற்பத்தியில் காலடி பதிக்கும் ‘கூகுள்’

இணையத்தள முதல்வனான கூகுள் தற்போது பல்வேறு துறைகளிலும் தனது வேரை ஆழமாக ஊன்றி வருகின்றது.
இதன் ஓர் அங்கமாக தற்போது ஸ்மார்ட் கடிகார உற்பத்தியிலும் கூகுள் நிறுவனம் முனைப்புக்காட்டி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
Google Now என்ற புதிய வசதியுடன் அன்ரோயிட் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுவரும் இந்தச் சாதனம் 2014 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பாவனைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.





## கூகுளின் இரகசியமான நிலையம்





பல்வேறு இணையச் சேவைகளை வழங்கிவரும் முதற்தர நிறுவன மான கூகுள் தொடர்ந்தும் தொழில் நுட்ப உலகில் பல புதுமைகளைப் புகுத்தி வருகின்றது.
இதன் மற்றுமொரு அங்கமாக, மிதக்கும் தரவுப்பரிமாற்ற நிலையம் ஒன்றை சன்பிரான்ஸிஸ்கோவில் கூகுள் நிறுவனம் அமைத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
மிகவும் இரகசியமாக மேற்கொள்ளப்பட்டு வந்த இந்த நடவடிக்கை, 2011 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டதாகவும், இந்த நிலையம் 250 அடிகள் நீளத்தையும், 72 அடிகள் அகலத்தையும் கொண்டுள்ளதுடன், 16 அடிகள் உயரமுடையதாகவும் காணப்படுகின்றது என தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

## புதிய வசதிகளுடன் அறிமுகமாகும் சம்சுங் கலக்சி ஏஸ் 3 (Samsung Galaxy Ace 3)




சம்சுங் நிறுவனம் தனது புதிய ஸ்மார்ட் கைபேசியான Samsung Galaxy Ace 3 - ஐ அறிமுகப்படுத்தவுள்ளது.
கூகுளின் அன்ரோயிட் 4.2 ஜெலி பீன் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட இக் கைப்பேசி, 4 அங்குல அளவு, 800 x 480 Pixel Resolution உடைய LCD தொடுதிரையைக் கொண் டுள்ளது.
மேலும் 1GHz வேகத்தில் செயற்படக்கூடிய Dual Core Processor, 1GB RAM ஆகியவற்றையும் சேமிப்பு நினைவமாக 8 ஜிபி கொள்ளளவையும் இது கொண்டுள்ளது.
இவை தவிர 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா மற்றும் காணொலி அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான VGA கமரா ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.
இதன் விலை 220 யூரோக்கள் ஆகும்.

## ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உதவும் அதிநவீன தொழில்நுட்பம்

மனிதனின் ஆரோகியமான வாழ்க்கைக்கு ஊட்டச்சத்து, உடற்பயிற்சி, ஒழுங்கான தூக்கம் போன்றவை அவசியமாகும். எனினும், இவற்றைச் சரியான அளவில் பேண வேண்டியதும் அவசியமாகும். இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு தற்போது AIRO என்ற கைப்பட்டி (Wristband) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
இது உணவிலுள்ள ஊட்டச்சத்துக்களின் அளவு, மன அழுத்தத்தின் அளவு, உடற்பயிற்சியின் அளவு மற்றும் தூக்கத்தின் அளவு ஆகியவற்றை மதிப்பிட்டுக் கூறுகின்றது.
இதன் விலை 199 டொலர்கள் ஆகும்.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை
## University of Jaffna - Sri Lanka
## இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறி
## Diploma in Journalism - 2014/2015

**புதிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சி நெறிக்கான 2014/2015 ஆண்டுக்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காக தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

**விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்**

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதியும் (Yes) பெற்றிருக்க வேண்டும்.

**பயிற்சி வழங்கப்படும் துறைகள்**

அச்சு ஊடகம் (Print Media)
இலத்திரனியல் ஊடகம் (Electronic Media)
இணைய ஊடகம் (New media)

**பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் பயிற்சிகள்**

* செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு,
* றேடியோ மற்றும் ரீ.வி நிகழ்ச்சிகள் தயாரிப்பு
* ஊடக நிறுவனங்களில் செயல்முறைப் பயிற்சி
* சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
* ஆவணப்படத் தயாரிப்பு
* சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததான மேலதிக பயிற்சிகள்

**கற்கை நெறிக்காலம் 2 ஆண்டுகள் (முழுநேரம்)**
**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 30.11.2013**

கட்டணங்கள்.

| | | |
|---|---|---|
| கற்கை நெறிக் கட்டணம் | ரூபா | 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூபா | 750.00 |
| நூலக வைப்புப் பணம் | ரூபா | 750.00 (மீளளிக்கத்தக்கது) |
| நூலக பயன்பாடு | ரூபா | 1,000.00 |
| மொத்தம் | ரூபா | 22,500.00 |

**விண்ணப்பப் படிவங்கள்**

விண்ணப்பப் படிவங்களை இல 84, ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் ரூ 100.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்களை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல. 021 222 9873

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி/13200) (7.6.3)



## இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

5 Chapel Road, West Ealing, Middlesex, W13 9AE
Charity No - 1014409

Email: info@ammanealing.org Web: www.ammanealing.org
Tel: 0044 208 8100 835 Fax: 0044 208 8400 485

எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.



**பணிநிலை : 1 ஆலய சிவாச்சாரியார்**
**Hindu religious workers with non pastoral role**

தகைமைகள் : விண்ணப்பதாரி சிவாச்சாரியார் பட்டம் (குருக்கள்) பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும்.
இறுதி 5 வருடங்கள் ஆலயக் குருக்களாகப் பணி செய்திருக்க வேண்டும்.
கடமைகள் : ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்.
வேதனம் : பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிடப்பட்டு வழங்கப்படும்.
**விண்ணப்ப முடிவு திகதி : 21.11.2013**

**பணிநிலை : 2 நாதஸ்வர, தவில் கலைஞர்கள்**
**Hindu Religious (Musicians) workers**

தகைமைகள் : நாதஸ்வர, தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்திலிருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்கவேண்டும்.
கடமைகள் : ஆலய பூசைக்காலங்களில் மங்கள இசை இசைத்தல்.
வேதனம் : பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.
**விண்ணப்ப முடிவு திகதி : 21.11.2013**

ஆலய இணையத்தளத்தில் (www.ammanealing.org) பணிநிலை வேண்டுகைக்கான விண்ணப்பப்படிவம் தரவேற்றப்பட்டுள்ளது. விருப்புடையோர் அதனைப் பதிவிறக்கி, பூர்த்தி செய்து ஆலய முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகின்றோம்.

32598 (7.6.3)



*Blue Skyy in*
## இனிய தீபாவளி வாழ்த்துக்களும் விசேட சலுகைகளும்

HONDA



ஹொன்டா ஸ்கூட்டர்களுக்கு **Full Tank** பெற்றோல் இலவசம்

ஏனைய ஹொன்டா மோட்டார் சைக்கிள்களுக்கு விசேட விலைக்கழிவுகள்




(C/13463)

01.11.2013 தொடக்கம்
07.11.2013 வரை
மட்டுமே
விசேட சலுகைகள்

Note: all are price with out VAT

# BLUE SKYY AGENCY
#173, K.K.S ROAD, CHUNNAKAM
PHONE: 021 720 1103 HOT LINE: 0773320596

Free &

Authorized Sales and Spare Parts Dealer: Stafford Motors co.(Pvt)ltd.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் செல்லப்பா கதிரேசு

தோற்றம் 17.06.1935 — மறைவு 27.10.2012

திதி : திரயோதசி

இமைகள் மூடித் திறப்பதற்குள்
ஆண்டு ஒன்று கடந்தது
நாம் வாழும் நாள்களில் உங்கள்
நினைவுகள் எம்முடன் வாழும்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில்.

மனைவி சந்திரதேவி,
சகோதரர், குடும்பத்தினர்.

(39651) (7.6.3)

## பக்கவாத நோய் ஏற்படும் அபாயம்

இலங்கையில் பக்கவாத நோய் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் அனுட்டிக் கப்பட்ட உலக பக்கவாத நோய் தொடர்பாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மூளையில் ஒரு பகுதி பாதிப்புக்குள்ளான நிலையில் இந்த நோய் ஏற்படுகிறது என்று சுகாதார அமைச்சு கூறியுள்ளது. (ச-10)



வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட் கடந்த ஞாயிறன்று யாழ். மணியந்தோட்டம் பகுதிக்கு பயணம் மேற்கொண்டு மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார். (ஓ-23)

# ஊடகவியலாளர் கருத்தரங்கில் குடிவரவு அதிகாரிகள் பாய்ச்சல்

## 2 வெளிநாட்டு பிரதிநிதிகள் விசாரணையில்

கொழும்பு,நவ.1

ஊடகவியலாளர்களின் கருத்தரங்கு அறைக்குள் நுழைந்த குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் வெளி நாட்டு ஊடக பிரதி நிதிகளை அங்கிருந்து அழைத்துச் சென்றதுடன், ஏனைய ஊடகவியலாளர்களையு ம் புகைப்படம் எடுத்துள்ளனர்.

ஊடக அமைப்புகளின் எதிர்கால வேலைத்திட்டம் சம்பந்தமான கருத்தரங்கு கொழும்பு ஞானகி ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இலங்கையிலுள்ள ஏழு ஊடக அமைப்புகளினது ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்பதற்காக சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனத்தின் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஆகியோர் வருகை தந்தி ருந்தனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் கருத்தரங்கில் கலந்துகொண்டிருந்த போது, திடீரென ஹோட்டலுக்குள் புகுந்த குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் அவர்களை விசாரணை செய்ய வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

ஏன் அவர்களை விசாரிக்க வேண்டும் என கருத்தரங்கில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இதற்குப் பதிலளித்த அதிகாரிகள், குறித்த இருவரும் சுற்றுலா விசாவில் வந்துள்ளனர். எனவே, இவ்வாறான நிகழ்வுகளில் பங்கேற்க முடியாது என்று கூறி யுள்ளனர்.

அந்த இடத்தில் இருந்த ஊடகவியலாளர்களையும் அவர்கள் புகைப்படம் எடுத்துள்ளனர். இதனால் இருதரப்பினருக்குமிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. விசாரணை செய்ய வேண்டு மானால் ஏன் எங்களைப் படம் பிடிக்க வேண்டும்? பாதுகாப்பு அமைச்சில் இருந்தா வந்துள்ளீர்கள் என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதன்பின்னர் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இருவரையும் அதிகாரிகள் தம்முடன் அழைத்துச் சென்று விட்டனர். அவர்கள் தங்கியிருந்த அறைகளிலும் நேற்று முன்தினம் சோதனை நடத்தியுள் ளனர். (ச-சி)

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் செந்தில்நாதன்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செந்தில்நாதன் 28.10.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், துவாரகன், நிருசா ஆகியோரின் அன்பு தந்தையும், காலஞ்சென்ற சற்குணநாதன் மற்றும் கிருஸ்ணதாசன், யோகேஸ்வரி (இலங்கை), சுந்தரமூர்த்தி, யோகநாதன், சிவநேசன் (CTB கோண்டாவில்), லோகேஸ்வரன், லோகேந்திரன், நாகேஸ்வரி, ஜெகதீஸ்வரன், கோபாலகிருஸ்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் விஜயராணி, ஸ்ரீபதிநாதன் (அசோகன் மில்-வவுனியா), விமலநாதன், சுவேந்திரராணி, மனோகரநாதன் (இலங்கை), ஜெயராணி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், Dr. நிசாந்தனின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக Rideau Funeral home இல் வைக்கப்பட்டு திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீபதிநாதன்
[மைத்துனர்]

Home - 4509721685 (கனடா)
Thuva - 5142410588 (கனடா)
ஸ்ரீபதிநாதன் - 024 222 0417 (இலங்கை)
மனோகரநாதன் - 021 300 6304 (இலங்கை)

(29834)(7,6,3)

## நேர்முகப் பரீட்சை

அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலு வல்கள் அமைச்சினால் இன்றும் நாளையும் கிராம அலுவலகர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சை தொடர்பான கடிதங்கள் பரீட்சார்த்தி களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளபரீட்சார்த்திகள் உரிய ஆவணங்களுடன்சமுகமளிக்குமாறு யாழ்.அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ந)

# மரண அறிவித்தல்



## லூர்து மேரி (நேசம்மா)

வவுனியா, இளமருதங்குளத்தைப் பிறப்பிடமாகவும், 30/1, பண்டாரிகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட லூர்துமேரி (நேசம்மா) 29.10.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை - ஞானம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்ற மருசலீனின் அன்பு மனைவியும், நந்தகுமார் (சேவியர் - கனடா), காலஞ்சென்ற சுரேஸ்குமார் மற்றும் தனேஸ்குமார் (சவுதி), மேரிசுதர்சினி (இத்தாலி), மேரிநிறோஜினி (கம்சா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குமுதினி (கனடா), ஆஷா, மைக்கல்சார்ஸ், றோயல் கிறிஸ்ரி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், ஆகாஷ், சியானா (கனடா), மெரினோ ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2013) வெள்ளிக்கிழமை பி.ப.4.00 மணியளவில் வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் நெளுக்குளம் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30/1, பண்டாரிகுளம், வவுனியா.
077 530 5427/024 222 2913

(29833) (12.6.3)

தகவல்:
செ.அழகக்கோன் (சகோதரன்)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 28.04.1924 — மறைவு 22.09.2013

## அமரர் ஆறுமுகம் சோமசுந்தரம் (காட்டர்)

[ஓய்வுபெற்ற தலைமைப் பாதுகாவலர்
ரெயில்வே திணைக்களம்]



கடந்த 22.09.2013 இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (01.11.2013) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஆவரங்கால் சந்தி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

குடும்பத்தினர்.
021 373 7664

(39669) (7.6.3)

## சொற்பொழிவு

வடமராட்சி, நவ.1

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்தச் சொற்பொழிவு நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக் கிழமை மு.ப. 10.30 மணிக்கு "திருக்கைவேல்போற்றி, போற்றி" என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். இந்தச் சொற்பொழிவை செந்தமிழ் அறிஞர் சிவ. உமாசுதன் நிகழ்த்துவார். (ந-8)

## கும்பாபிஷேகம்

வடமராட்சி, நவ.1

பருத்தித்துறை வராத்துப்பளை நெல்லியோடை பெரிய தம்பிரான் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணி தொடக்கம் 10.30 மணி வரையிலான சுபவேளையில் பிரம்ம ஸ்ரீ அ.பிரேமச்சந்திரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ந-8)

* * *

அல்வாய் சீமா ஆலடி வள்ளிதேவயானை சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.27 மணி தொடக்கம் 10.20 மணி வரையான சுப வேளையில் நடைபெறவுள்ளது. (ந-8)

## விளையாட்டு விழா

பண்ணாகம் அண்ணா கலைமன்ற சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மன்றப் பணிமனை முன்றலில் மன்றத் தலைவர் வே.குமரகுரு தலைமையில் நடைபெறும். இந்த வைபவத்தின் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை முன்பள்ளிக் கல்வி உதவிப் பணிப்பாளர் சி.குகநேசனும், சிறப்பு விருந்தினர்களாக வை.துரையரங்கன், செல்வி நா.நிறஞ்சனா, இ.தம்பையா ஆகியோரும் கலந்து சிறப்பிப்பார்கள். (ஒ-28)

## நாடக நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ.1

'சூடிக் கொடுத்த சுடர் கொடி' என்னும் நாட்டிய நாடக நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரி நாதனும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் க. கணபதிப்பிள்ளை, யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் திருமதி புவனேஸ்வரி வேல்நிதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-400)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





மலர்வு
27.02.1947

உதிர்வு
12.11.2012

இராஜதுரைஇரத்தினசோதிராஜா

திதி: சதுர்த்தசி (02.11.2013)

எங்கள் குடும்ப விளக்கு (சோதி)
ஒளிதர மறுத்து
சிவனடி சேர்ந்த நாள்நினைவுடன்

T.P: 075 577 3487

மனைவி, மகன், மருமகள்,
பேரன், அக்கா, தம்பிமார்.

(39551)(2,4,6)

31 ஆம் நாளின் நினைவுகளில்....

அன்னை மடியில் 09.07.1949

ஆண்டவன் அடியில் 02.10.2013



திருமதி ச.மேரி றோசலின் (மணி)

பக்குவமாய் எம்மைப் பெற்றெடுத்து
பண்புடனே தினம் வளர்த்து
நல்ல செய்தி பல சொல்லி
நல்லறிவு தான் புகட்டி
திருமண வாழ்வில் நால்வரை ஈடுபடுத்தி
துறவற வாழ்வில் ஓர் மகனை உவந்தளித்து
துன்பங்களை பொறுமையாய்த் தாங்கி நின்று
மௌனத்தில் உன் வாழ்வை முடித்தாயே!!
எம் தாயே!
எம்மைப் பெற்றெடுத்த உத்தமியே!!
உமக்காய் வேண்டுகின்றோம்
படைத்தவனோடு எந்நாளும் மகிழ்ந்திருப்பாய்

(32864)(10,6,3)

தூய ஓர்சுலா அன்னை ஆலயம்
போயிட்டி, இளவாலை.
(மாரிசன் கூடல்)

நீங்கா நினைவுகளுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
29 ★ 09 ★ 1927

உதிர்வு
11 ★ 11 ★ 2012

அமரர்
M.S.தர்மலிங்கம்
[ஓய்வுபெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர்]

திதி: திரயோதசி

அகவை ஒன்று கழிந்தது-உங்கள்
அழியா நினைவு தொடர்ந்தது
கவலை நெஞ்சில் மலிந்தது-எல்லாம்
காலன் செயலால் நிகழ்ந்தது

உறவை ஊரை தவிக்கவிட்டு-நீர்
ஓடிச் சென்றீர் அவசரத்தில்
கவலைத்தீயில் வீசப்பட்டு-நெஞ்சம்
கலங்கி வாழும் கலவரத்தில்

அகிலம் இங்கு அழிந்தாலும்-வேறு
கலகம் ஏதும் நிகழ்ந்தாலும்
விலகா உங்கள் நினைவோடுவிழி
காத்தே இருக்கும் கனவோடு

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு.

(39654) (6.4.3)

குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி பவளமணி மகேந்திரராசா
(ஓய்வு பெற்ற இலிகிதர்-
கரவெட்டி பிரதேசசெயலகம்)

தோற்றம்
16.06.1948

மறைவு
02.10.2013

கடந்த 02.10.2013 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி பவளமணி மகேந்திரராசா அவர்களின் ஆத்மசாந்திக் கிரியை இன்று (01.11.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நிகழவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்வதுடன், அன்னாரின் பிரிவுத்துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(29590)(4.6.3)

- குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு
20 * 10 * 1940

இறப்பு
02 * 10 * 2013

அமரர் செல்லத்துரை மகேந்திரன்
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்-பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்)

கடந்த 02.10.2013 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் செல்லத்துரை மகேந்திரன் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (01.11.2013) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

336/24, ராஜா தியேட்டர் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
ம.பிரதீபன்

(39574) (6.3.4)

### தேநீரில் பால் இல்லை

# குறை சொன்னவருக்கு குரல் வளையில் குத்து

பால் தேநீரில் பால் குறை வாக இருந்ததைச் சுட்டிக் காட்டிய வரை போத்தலை உடைத்து குரல் வளையில் குத்தினார் கடை யில் தேநீர் தயாரிக்கும் சிப்பந்தி. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையைச் சேர்ந்த தர்மலிங்கம் ராஜ்வதனா (வயது-37) என்பவர் நகர்ப் பகுதியில் உள்ள கடையில் 'ரீ' (பால் தேநீர்) ஒன்று தயாரித்துத் தருமாறு கூறி விட்டு சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருந்தார். வழங்கப்பட்ட பால் குறை வாக உள்ளதாக தேநீர் தயாரிப்பவரிடம் கூறியுள்ளார். இந்த வேளையில் எதிர்பாராத விதமாக தேநீர் தயாரிப்பவர் போத்தலை உடைத்து நபரின் குரல் வளையில் குத்தியுள்ளார். குரல்வளையில் இரு இடங்களில் காயங்களுக்கு இலக்கான அந்த நபர் உடனடியாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

காயமடைந்தவர் நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் பணியாற்றுபவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

### வங்கிகளின் சேமிப்புத் திட்டங்களுக்கு

# சிங்களத்தில் பெயர்கள்; தமிழர்கள் அதிருப்தி

## சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் தெரிவிப்பு

தென்மராட்சி, நவ.1

இலங்கையில் இரு மொழி பேசும் மக்கள் வாழு கின்ற போதிலும் ஒரு மொழியில் மட்டும் வங்கிகள் தமது செயற்றிட்டங்களுக்கு பெயர் வைப்பது குறித்து தமிழ் மக்கள் ஆதங்கப்படுகின்றனர் என்று சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவ பாலன் தெரிவித்தார். சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் சேமிப்புத் திட்ட சீட்டிழுப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அதிபர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாடளாவிய ரீதியில் வங்கிகள் தமது கிளைகளை ஆரம்பித்து பல்வேறு பயன் தரக்கூடிய சேமிப்புத் திட்டங்களையும், கடன் திட்டங்களையும் அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்து கின்றன. அவை அனைத்தும் ஒரு மொழியிலேயே பெயரிடப்படுகிறது. அந்த மொழி தெரியாத மக்கள் திட்டத்தின் அர்த்தம் தெரியாததால் அந்தத் திட்டத்தில் இணைய முடியாமல் தவிக்கின்றனர்.

நாடு பூராகவும் தமிழ் மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர். தமிழ் மொழியையும் தமிழ் பேசும் மக்களையும் கௌரவிக்கும் முகமாக வங்கிகளால் அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு தமிழ் மொழியிலும் பெயர் வைக்க வேண்டும்.

இதுவரை எந்த வொரு வங்கி தானும் தான் அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு தமிழ் மொழியில் பெயர் வைத்துசெயற்படுத்தவில்லை. வங்கிகளில் நிறைய தமிழ் மக்கள் வாடிக்கையாளர்களாக உள்ளனர் என்பதை வங்கிகள் உணர வேண்டும். வங்கி களின் தமிழ் பேசும் அதிகாரிகள் தமது உயர் மட்டத் துக்குதமிழ்மக்களின் இந்த ஆதங்கத்தை தெளிவுபடுத்த வேண்டும்.

இரு மொழிகளிலும் பெயர் வைத்து வங்கிகள் செயற்றிட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தினால் மக்கள் மத்தியில் வங்கிகள் மீது நன்மதிப்பு ஏற்படும்.

'இசுறு உதான', 'சிசு உதான', 'டிக்கிரி, 'புஞ்சி' போன்ற பெயர்களை வங்கிகள் தமது சேமிப்புத் திட்டங்களுக்கு சூட்டுகின்றன. இந்த நிலையை இனிமேல் மாற்றியமைத்து வங்கிகள் தமது, திட்டங்களுக்கு தமிழ்ப்பெயர்களையும் சூட்டமுன் வர வேண்டும்-என்றார். (எ-9)

ஏழாலை ஸ்ரீவசந்த
நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
தீபாவளியை முன்னிட்டு
விசேட பூஜை, தீப பூஜை வழிபாடு.
காலை 9.00 மணி பூஜை
பூஜையைத் தொடர்ந்து அடியார்கள் தீபமேற்றி தீபவழிபாடு செய்தல்.
முற்பகல் 10.30 மணி விசேட சொற்பொழிவு
முற்பகல் 11.30 அன்னதானம்
ஏழாலை தெற்கு
வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
களபாவோடை, வசந்தபுரம்.
(39677) (7.6.3)

# குற்றச் செயல்களை தடுக்க செயற்றிட்டம்

## கிளிநொச்சி பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

குற்றச் செயல்களை தடுப்பதற்குரிய பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்திரகுமார வீரசிங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி கரைச்சிப் பிர தேச செயலர் பிரிவின் ஆலோசனைச் சபை உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பொறுப்பதிகாரி உரையாற்றும் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு கிராம அலுவலர்களுக்கும் உள்ள அதிகாரங்கள்பற்றிகுறித்த அலுவலர்கள் பலரும் அறிந்து கொள்வதில்லை. எதிர் காலத்தில் இவர்களது உரிமைகள், கடமைகள் என்பனவற்றில் விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் கிராமங்கள் தோறும் சிறு சிறு குழுக்கள் அமைக்கப்பட்டு அவை பலப்படுத்தப்படவுள்ளன. ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு இரண்டு, மூன்று பேர் என பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். கிராமக் குழுக்களுடன் இணைந்து பொலிஸாரும் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்வர்.

அதாவது கிராம மட்டங்களில் ஏற்படக்கூடிய சட்ட விரோத மற்றும் சமூகச் சீர்கேடுகளை கட்டுப்படுத்துவதில் அமைக் கப்படும் குழுக்கள் பெரிதும் உதவியாக இருக்கும்.

ஒவ்வொரு கிராமத்திலும் வாரத்தில் ஒருநாள் கிராம அலுவலர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பிரதேச மருத்துவ மாதுக்கள், பொதுச் சுகாதா ரப் பரிசோதகர்கள் ஆகி யோர் ஒன்று கூடி சிரமதானப் பணிகள் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளனர்- என்றார். (எ-6)

புதிய பிரிவு ஆரம்பம்
2013இல் 86 சதவீத சித்திகளுடன்
வெற்றித்தேர்வ ஆரம்பக் கல்விப்பிரிவின்
2014 தரம் 5 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு
புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
வாராந்தம் வெற்றித்தேர்வுப் பரீட்சைகளுடன் விசேட அலகுப் பரீட்சைகளும் சுயகற்றலுக்கான விசேட கையேடுகளும்,
வாரத்தில் மூன்று தினங்கள் மட்டுமே
வெற்றித்தேர்வு வளவாளர்களுடன்
யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்களின்
சிறப்பான வழிகாட்டலில்
ஆரம்பம்: 01.11.2013 பி.ப 4.00 மணி
இடம்: நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக)
தொடர்புகளுக்கு: 0775388471, 0773126807
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

ஆங்கிலப் பயிற்சிநெறி ஆரம்பம்
அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க
2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத்
தோற்றிய மாணவர்களுக்கான
யாழ். முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில்
4 மாதகால விசேட ஆங்கிலப் பயிற்சிநெறி
ஆரம்பமாகிறது.
Spoken English with Grammar
ஆரம்பம்: 01.11.2013 வெள்ளி பி.ப 4.00 மணி
இடம்: நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக)
தரம் 6இல் ஆங்கிலமொழி மூலம் கற்கவிருக்கும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். 100 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். அனுமதிக்கு முந்துங்கள். முற்கூட்டியே பதிவுசெய்து விசேட கையேட்டினையும் நேர அட்டவணையையும் பெற்றுக்கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு: 0775388471, 0773126807

வாழ்த்துகின்றோம்

கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த
கணபதிப்பிள்ளை தில்லைநாதர்
(ஓய்வுபெற்ற உதவி மாவட்ட மதிப்பீட்டாளர்)
அவர்கள் 29.10.2013இல்
சமாதான நீதிவானாக
பதவி ஏற்றமை குறித்து,
தங்க மனம் உங்கள் குணம்
எங்களினம் அறியும்
திங்கள் ஒளி பரவியதால்
இன்று புகழ் கொண்டீர்
எங்கும் புகழ் பெறுக
உயர்நீதி நிலை தருக.
திரு.திருமதி
க.நவரத்தினம் குடும்பத்தினர்
நடராஜ நகன் வைத்திய நிலையம், யாழ்ப்பாணம்.
Congratulations
(39675) (7.6.3)

இத்தாலி மொழி
புதிய பிரிவுகள் ஆரம்பம்
வேக் பொமிற், இத்தாலியில் வசிக்க இருப்போர், மற்றும் திருமணமாகி செல்வோர் அனைவருக்கும் இத்தாலி மொழி கற்பிக்கப்படுகிறது
(விசேட இரவு வகுப்புக்களும் உண்டு)
தொடர்புக்கு - 0771327818

கப்பல் வாழைக்குட்டி
கப்பல் வாழைக்குட்டி ஒன்று விலை ரூபா 250/=

இது 50Kg நிறையுடைய குலையோடும்.
எம்பிலிப்பிட்டியில் இருந்து கொண்டு வரப்பட்ட உயர் வகை பெரிய இன வாழைக்குட்டிகள்
தொடர்புக்கு-- 021 2226943

இலங்கை வங்கிக்கான ஒப்பந்தகாரர்கள்/ வழங்குநர்களைப் பதிவு செய்தல்
வடமாகாணத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளினது கட்டட நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்காக 2014 ஆம் ஆண்டுக்கான கட்டட ஒப்பந்தகாரர்கள்/ வழங்குநர்கள் தேவைப்படுகிறார்கள்.
ஒப்பந்தகாரர்கள்/வழங்குநர்கள் பின்வரும் தகைமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.
1.இத்தொழில் தொடர்பான ஆககுறைந்தது 3 வருட அனுபவம்.
2.உறுதியளிக்கப்பட்ட ICTAD சான்றிதழ்
மேற்கூறப்பட்ட தகைமையுடையவர்கள் இலங்கை வங்கியினது கட்டட ஒப்பந்தகாரர்களாக இணைய விரும்பின் மேலும் தகவல்களைப் பெறுவதற்காக கீழ்க்காணும் விலாசத் திலுள்ள வடமாகாண காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளு மாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
(C/13507)(4.6.3)
உதவிப்பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி, வடமாகாண காரியாலயம்,
இல.476, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 3126/3945

## மிஹின்லங்காஇயங்கும்நட்டத்தில்

2011 ஆம் ஆண்டில் மிஹின்லங்கா நிறுவனம் 94 கோடி ரூபா நட்டமடைந்துள்ளது என்று அந்த நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையில் தெரியவந்துள்ளது.

2011 ஆம் ஆண்டில் மிஹின் லங்கா நிறுவனத்தின் வருமானம் 3142 மில்லியன் ரூபாவாகும். அதே ஆண்டில் செலவினம் 3597 மில்லியன் ரூபாவாகும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நட்டமடைந்து வரும் நிறுவனத்தை தொடர்ந்து செயற்பட வைப்பது சந்தே கமே என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எனவே நிறுவனத்தின் நட் டத்தைக் குறைக்க வர்த்தக திட்ட வரைபொன்றை கட்டமைக்குமாறு அமைச்சர் பிரியங்கா ஜயரத்ன நிறுவனத்தின் அதிகாரிக ளுக்கு உத்தரவிட்டுள்ளார். (ச-22)

**தேவை**

அனுபவமுள்ள Photoshop Graphics Disiner தேவை.
ஞாயிறு காலை 9.00 - 10.00 மணி நேரில் வரவும்.
**லக்சுமி டிஜிற்றல் கலர் லாப்**
பிரதான வீதி, சங்கானை(H.N.Bஅருகில்)

**விற்பனைக்கு**

கொங்கிறீட் கல் அரியும் இயந்திரம் (சிறிது காலம் பாவித்தது)
அச்சுக்கான பலகைகள் - 500அச்சுக்கள் - 04
தூண் அச்சுக்கள் - 04
உடன் விற்பனைக்குண்டு. 077 4366704

## விபத்தால் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகரிப்பு

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,நவ.1

நாட்டில் வாகன விபத்துக்களால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த ஆண்டின் இதுவரை நிகழ்ந்துள்ள 30 ஆயிரம் வரையிலான வாகன விபத்துக்களில் இரண்டாயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளனர், என்று அவர் கூறினார்.

நாளொன்றில் 15 வரையிலான வாகன விபத்துக்கள் நிகழ்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

விபத்துக்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் மாத்திரம் தனித்து நின்று செயற்பட முடியாது. வீதியைப் பயன்படுத்தும் அனைத்துத் தரப்புக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

தெற்கு அதிவேக மார்க்கத்தில் மாத்திரம் கடந்த சில மாதங் களில் 605 வாகன விபத்துக்கள் இடம்பெற்றன என்று அவர் கூறினார். (ச-22)

## தொழிற்சாலை நிறுவ நிறுவனங்கள் முதலீடு

கொழும்பு,நவ.1

அம்பாந்தோட்டை,மாகம்புர துறைமுகத்தில் தொழிற்சாலைகளை நிறுவ 1,750 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்வதற்கு 12 நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

இந்தத் திட்டத்தின் மூலம் நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்கள் ஏற்படும் என்று துறைமுகங்கள் மற்றும் பெருந் தெருக்கள் திட்ட அமைச்சர் ரோஹித அபே குணவர்த்தன தெரிவித்தார்.

புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க புரிந்துணர்வு ஒப் பந்தங்களை மேற்கொள்வதற்கு முன்வந்திருக்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு, துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் தொழிற்சாலைகள் அமைப்பதற்கான திட்டங்களை விரைவில் ஆரம்பிப்பதற்கு தடை யாகவுள்ள சிக்கல்கள் குறித்து ஆராயப்பட்டன. (ச-22)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி இராசையா



மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இராசையா நேற்று (31.10.2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி.சுப்பிரமணியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி. பரமு தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான தியாகராசா, குமார சாமி, அன்னலக்சுமி, இராஜலக்சுமி, பவளம்மா ஆகியோரின் பாச மிகு சகோதரியும், சற்குணதேவி, ரவீந்திரநாதன், கதிர்காமநாதன், மல்லிகா தேவி, நவமணிதேவி, நாகநாதன் ஆகியோரின் அன்புத் தாயும், செல்லக் கதிர்காமு, நந்தாயினி, புஸ்பகுமார், கணபதிப்பிள்ளை, நளாயினி ஆகியோரின் அன்பு மாமியும், சர்மிளா, கஜிதா, யசிதா, செந்தூரியா, அஜித்தியா, மேதினி, தாரணி, கோமேதகன், கோமேதா, பவனுவதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கனிஸ்யாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.10.2013) வியாழக்கிழமை பி.ப. 4.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் தெற்கு நேரியதூவு இந்து மயாத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

39684 (14.17)

தகவல்:
இ.இரவீந்திரநாதன் (மகன்)
இ. நாகநாதன் (மகன்)

## 2.5 மில்லியன் உல்லாசப் பயணிகள் இலங்கைக்குப் போதுமானதல்ல

கூறுகிறது சர்வதேச நாணய நிதியம்

கொழும்பு.நவ.1

2016 ஆம் ஆண்டில் இலங்கை உல்லாசப் பயணிகளுக்காக வரவழைத்துக் கொள்ளும் இலக்கு 2.5 மில்லியன்களாக இருப்பது போதுமானதல்ல என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கோஷிமாதாய் தெரி வித்துள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற உல்லாசப் பயணத்துறை தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.


மாலைதீவு 2016 ஆம் ஆண்டில் ஒரு மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துக் கொள்வதற்கு திட்ட மிட்டுள்ளது. தாய்லாந்து 15 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலக்கு வைத் துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

உல்லாசப் பயணத் துறையில் வளர்ச்சி அடைந்தால், நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-22)

## பதிவு செய்யப்படாத வாசனைப் பொருள்கள் சந்தையில் விற்பனை

கொழும்பு.நவ.1

வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படும் வாசனைப் பொருள்களில் 30 வீதமானவை பதிவு செய்யப் பட வில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



கொழும்பிலுள்ள வர்த்தக நிலையங்களை செவ்வாய்க் கிழமை சோதனையிட்ட வாசனைத் திரவியங்கள் மற்றும் ஒளடதங்கள் அதிகார சபையின் அதிகாரிகள், பதிவுசெய்யப்படாத ஒரு தொகை வாசனைத் திரவியங்களை கைப்பற்றியுள்ளனர் என்று அமைச்சுகூறியுள்ளது.

இந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கும் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

முகத்தை வெண்மையாக்குவதற்காக பயன்ப டுத்தும் பொருள்களில் உலோகப் பொருள்கள் காணப்படுகின்றனவா என்பதைக் கண்டறியவே விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மரண அறிவித்தல்

### கந்தையா சிவசாமி



கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்யைா சிவசாமி நேற்று முன்தினம் (30.10.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அன்னம்மாதம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சீனிக்குட்டி -தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் (கிளி) அன்புக் கணவரும் இராசசேகரம், சிவயோகமலர் (கனடா), காலஞ்சென்ற குலசேகரம் ஆகியோரின் அன்புத் தந்தையும், நிர்மலா, இராமச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிவேதா, கோகுலன் (பிரான்ஸ்), பிருந்தா, வினித்தா, பகீரதன், கங்காதரன், ராதா, பவாதரன், புவிதா, பிரவீனா (கனடா), கேதுஜா, கோபி, ஆகியோரின் பேரனும், தானியாவின் பூட்டனும், காலஞ் சென்றவர்களான இராசரத்தினம் பரமளம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகம்மா, புவனேஸ்வரி, காலஞ்சென்றவர் களான கந்தசாமி, பாக்கியம் ஆகியோர்களின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2013) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூவரசந்திட்டி இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29591 (14)

தகவல்
குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 20 ஆம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் சின்னையா பத்மராஜா

தோற்றம் 17 . 11 . 1947



மறைவு 12 . 11 . 1993

ஆண்டுகள் இருபது ஆனாலும்
ஆறுமோ எம் துயர் தான்
அப்பா உங்கள் நினைவுகள்
மனதில் சுமந்தபடி.......

S.P.T பத்மராஜா அன் சன்
நகைத் தொழிலகம், பிரதான வீதி, சங்கானை. (ப. தீலிபன்.-மகன்)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் க.தெய்வேந்திரம்
அவர்களின் தாயார்
திருமதி அன்னம்மா கணபதிப்பிள்ளை
அவர்கள் மரணமானதையிட்டு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

(39676)
(12.6.3)

மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.

# மாணவரின் ஆங்கில அறிவை மேம்படுத்த ஒருங்கிணைந்த விசேட திட்டம் அவசியம்

அச்சுவேலி, நவ.1

மாணவர்களின் ஆங்கில அறிவை மேல்நிலைப்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். பாடசாலைகளில் மூன்றாம் தரத்தில் இருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்ற போதிலும் மாணவர்களின் ஆங்கில அறிவு மட்டம் மிக மிகத்தாழ்வுநிலையிலேயே காணப்படுகின்றது. இவ்வாறு தெரிவித்தார் ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியரும் அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளருமான எஸ். ஜோகசிங்கம். ஆவரங்கால் லிட்டில் மாஸ்டர் பாலர் முன்பள்ளியின் கலை விழா ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் நடை பெற்றது. முன்பள்ளியால் உருவாக்கப்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான ஆங்கில செயல் நூல் வெளியீட்டின் வெளியீட்டுரையை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமதுரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆங்கிலத்துக்கு உண்மை, யதார்த்தம் என்ற கருத்துக்கள் உள்ளன. ஆங்கில அறிவு இல்லாமல் எதிர்காலத்தில் இயல்பு நிலையில் வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. கணினி அறிவு மிக அவசியம். கணினியை உரிய முறையில் பயன்படுத்த ஆங்கில அறிவு மிக அவசியம். இரண்டும் வாழ்க்கையின் கண்கள் என்ற நிலைக்கு உயர்ந்துள்ளன. பாடசாலைக் கல்வியில் மூன்றாம் தரத்திலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப் படுகின்றது.

**மாணவர்களின் ஆங்கில அறிவு மட்டத்தை மேன்நிலைப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த வேலைத் திட்டம் அர்த்தமுள்ள முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.**

இந்த வகையில் ஒரு வருடத்தில் 180 பாடவேளை 120 மணித்தியாலங்கள் என்ற விகிதத்தில் ஜி.சி.ஈ. சாதாரண தரம் வரை 1300 மணித்தியாலங்கள் வரையில் ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்ற போதிலும் ஆங்கில அறிவு மட்டம் மிக மிகத் தாழ் நிலையிலேயே உள்ளது.

இதனைக்கருத்தில்கொண்டு மாணவர்களின் ஆங்கில அறிவு மட்டத்தை மேன்நிலைப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த வேலைத் திட்டம் அர்த்தமுள்ள முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும். பாடசாலைகளில் தரம் மூன் றிலிருந்து ஆங்கில பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கற்பிக்கப்படும் அதேவேளையில் தற்பொழுது பாலர் முன்பள்ளிகளிலும் கற்பிக்கப்படுகின்றது. அதற்கு ஏற்ற முறையில் இந்த ஆங்கில செயல் நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க முயற்சி - என்றார். (வ-11)

# கச்சாய் பொது நூலகத்தில் வாசிப்பு மாத நிகழ்வுகள்

தென்மராட்சி, நவ.1

கச்சாய் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு நூலக முன்றலில்நடைபெறவுள்ளன. சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா தலைமையில் நடை பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூவும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி , பிரதேச சபை செயலாளர் செல்வி இ.தர்சினி, கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பீ.எதிரிசிங்க ஆகியோரும் கலந்து கொள்வர். இதன்போது கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சின்னையா என்பவர் நூலகத்துக்கு கணினியொன்றை அன்பளிப்பாக வழங்குவார், கச்சாய் பிரிவு மக்களால் நூலகத்துக்கு நூல்களை அன்பளிப்புச் செய்யப்படவுள்ளன.

நிகழ்வில்கொடிகாமத்தைச் சேர்ந்த கவிஞர் சு.க.நவரத்தினத்தை கௌரவித்தல், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற பிரதேசத்தைச் சேர்ந்த 5 மாணவர்களைக் கௌரவித்தல், நூலக சேவைகளை அதிகளவு நேரம்பயன்படுத் தியோருக்கு பரிசில் வழங்கல், வாசிப்பு மாதத்தில் நடத்தப் பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் முன்பள்ளிச் சிறார்கள் ஆகியோருக்கு பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெறும். (வ-9)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வாருங்கள்

சர்கள், சபை உறுப்பினர்களின் பங்கு பற்றலுடன் நடைபெற்றுள்ளது. இது மகிழ்ச்சியளிக்கின்றது.

இந்நிலைமையை ஏற்படுத்தித் தந்ததில் இந்தியாவிற்கு பெரும் பங்குண்டு என்பதை நாம் மறக்கமாட்டோம். வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு இலங்கை அரசுக்கு இந்திய அரசு தொடர்ந்து அழுத்தங்களை வழங்கியிருந்தது. தங்கள் அழுத்தங்களின் பின்னணியில் தான் வடக்கு மாகாணசபைத் தேர்தலை இலங்கை அரசு நடத்தியது.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும், வடக்கு மாகாண மக்கள் சார்பிலும் தங்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து என்னைச் சந்தித்த தங்கள் நாட்டு வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், புதுடில்லிக்கு என்னை வருமாறு அழைப்புத் தந்தார். மிக்க நன்றி. தங்கள் நேர கால வசதிக்கேற்ப நான் விரைவில் புதுடில்லி வந்து தங்களைச் சந்திப்பேன்.

அதேவேளை, இந்தியப் பிரதமர் என்றரீதியில் தாங்களும் வடக்கு மாகாணத்துக்கு வந்து இங்குள்ள நிலைமைகளைப் பார்வையிடுமாறு வேண்டிக் கொள்கின்றேன். இதை எமது வடக்கு மக்களும் விரும்புகின்றார்கள்" என்று அந்தக் கடிதத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார் என கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்தார்.

"இந்தியப் பிரதமருக்கு வடக்கு முதலமைச்சர் அனுப்பிய கடிதத்துக்கும் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. அந்தக் கடிதத்தில் பொது நலவாய மாநாடு தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறிப்பிடவில்லை " - என்றும் சம்பந்தன் கூறினார்.

இந்தக் கடிதம் இந்தியப் பிரதமரின் அலுவலகத்துக்கு கடந்த 28ஆம் திகதி கிடைக்கப் பெற்றதாக பிரதமரின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (த-5)

### வடக்கு

தில் நடைபெற்றது. ஊடகத்துறைஅமைச்சின்மேற்பார்வை நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர், ஊடகத்துறை அமைச்சின் செயலாளர், தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

அமைச்சரவை முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் கேள்வி நேரத்தின்போது,

"வடமாகாண ஆளுநராகப் பதவி வகிக்கும் முன்னாள் இராணுவ அதிகாரியை நீக்கி விட்டு அப்பதவிக்கு சிவில் அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு வடமாகாணசபை கன்னியமர்வில் உரையாற்றிய முதல்வர் விக்னேஸ்வரன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார். இந்தக் கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளாரா?" என்று ஊடகவியலாளரொருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியதாவது:

வடக்கு ஆளுநர் இன்னமும் அப்பதவியில் இருக்கின்றார் தானே...? அப்படியானால் கூட்டமைப்பின் மேற்படி கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி பிரதிபலிப்பை வெளியிடவில்லை என்றுதானே அர்த்தம்...

கூட்டமைப்பால் கோரிக்கைகளை மாத்திரமே முன்வைக்க முடியும். அது தொடர்பில் செவிசாய்த்து தீர்மானம் எடுக்கும் சக்தி அரசுக்கே இருக்கின்றது. தம்மிடம் முன்வைக்கப்படும் கோரிக்கைகளுள் நாட்டுக்கு முக்கியமானவை சம்பந்தமாக அரசு கவனம் செலுத்தும். அரசுக்கு முக்கியமில்லாத கோரிக்கைகளும் இருக்கின்றன. அந்த அடிப்படையில்கூட்டமைப்பின் கோரிக்கை தற்போதைய சூழ்நிலையில் முக்கியவிடயமல்ல.

குறிப்பாக வடமாகாணத்தில் இருந்து இராணுவத்தை அகற்றுமாறு பலதரப்பும் கோரிக்கை விடுத்தன. இருப்பினும், அங்கிருந்து இராணுவத்தை ஒரு போதும் அகற்ற முடியாதென ஜனாதிபதி திட்டவட்டமாக கூறியுள்ளார். நாட்டிற்கு என்ன தேவையோ அதன்படிதான் அரசு முடி வெடுக்கும்" என்று கூறினார். (த-சி)

### பஸ் கட்டணம்

ளது.

தனியார் பஸ் கட்டணம் இன்று முதல் ஏழு வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இணையத்தின் தலைவர் எஸ். கெங்காதரன் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் தனியார் பஸ்களின் பயணக் கட்டணம் இன்று முதல் ஏழு வீதத்தால் அதிகரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-400)

### எமது

நேரம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன் போது வலி.வடக்குப் பிரதேச சபையின் உபதவிசாளர் எஸ். சஜீவனும் உடனிருந்தார்.

வலி.வடக்கிலிருந்து 1990 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்த தாம் இன்னமும் சொந்த மண்ணுக்குச் செல்ல முடியாமல் இருப்பதாகவும், இதனால் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் மக்கள் தூதுவரிடம் தெரிவித்தனர்.

தமது நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளமையால் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து கொடுக்க முடியாத நிலை இருப்பதாக குறிப்பிட்ட அவர்கள், தமது நிலங்களை இராணுவத்தினர் நிரந்தரமாக தமது பாவனைக்கு அபகரிப்பது தொடர்பிலும் எடுத்துக் கூறினர்.

தற்போது வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் கைப்பற்றப்பட்ட நிலப் பகுதியிலுள்ள வீடுகள் இராணுவத்தினரால் இடித் தழிக்கப்படுவது தொடர்பாகவும் மக்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

மேலும் நலன்புரி நிலையங்களில் தற்காலிக நோக்கோடு தங்கியிருந்த தாம் தற்போது நிரந்தரமாகவே அங்கு தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோ என்று அச்சம் கொள்வதாகவும் அந்த மக்கள் கொரியத் தூதுவரிடம் எடுத்துரைத்தனர்.

இவற்றைக் கேட்டு விட்டு மக்கள் தங்கியுள்ள இடங்களைப் பார்வையிட்ட பின்னர் அங்கிருந்து வெளியேறினார் கொரியத் தூதுவர். (த-5)

### மாநாட்டில்

தில் நடைபெற்றது.

இதன்போது, பொதுநலாய மாநாட்டில் இந்திய பிரத மரின் பங்குபற்றல் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு தமது கட்சிக்கு இன்னும் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்படவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது. அக்கட்சிக்கு அழைப்பு விடுக்கபடுமா என்ற கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு "அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும். இன்னும் நாட்கள் இருக்கின்றது தானே... " என்றார்.

அதேவேளை, மாநாட்டை புறக்கணிக்கப்போவதாக கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் அரசின் பதில் என்னவென்ற வினாவுக்கு "அதில் புதுமைப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆரம்பம் முதலே கூட்டமைப்பின் செயற்பாடுகள் அவ்வாறுதானே இருந்துள்ளன" என்று பதில் வழங்கினார் அமைச்சர் கெஹலிய.

"மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்பார் என செய்திகள் வெளியாகியுள்ளன. காங்கிரஸின் மத்திய குழு கூட்டத்திலும் இதுதொடர்பில் சாதக முடிவு எடுக்கப்பட்டுள்ளது" என்றும் கூறப்படுகின்றதே... என எழுப்பப்பட்ட மற்றுமொரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

"ஆஸ்திரேலியா பேர்த் நகரில் கடந்த ஆண்டு நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்ற அரச தலைவர்களின் எண்ணிக்கையை விட இம்முறை அந்தத் தொகை அதிகரித்துள்ளது. இதுவரையில் 37 நாடுகளின் தலைவர்கள் தமது பங்குப் பற்றலை உறுதிப்படுத்தியுள்ளனர். இதர நாட்டுத் தலைவர்கள் விரைவில் தமது நிலைப்பாட்டை அறிவிப்பார்கள் என நம்புகின்றோம்" என்றார்.

### இயன் பொத்தம்

வரும் இவர்கள் அங்கிருந்து மாங்குளம் வரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நடைபவனியில் கலந்து கொள்வர்.

இதேவேளை முரளி கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டி யாழ்.மாவட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும், கிளிநொச்சியில் கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும், முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலும், வவுனியா மாவட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலும் இன்று காலை 8.30 மணி முதல் ஆரம்பமாகின்றது.

இன்று ஆரம்பமாகும் இந்தப் போட்டிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை இடம்பெறும். இப் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் எதிர்வரும் 4 ஆம் திகதியும், இறுதியாட்டம் மறுநாள் 5 ஆம் திகதியும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள் ளன. (த-23-400)

### வடக்கில்

"வடக்கில் தற்போது இராணுவத் தினரால் தமிழர்களின் வீடுகள் உடைக்கப்படுகின்றமைக்கும், காணிகள் சுவீகரிக்கப்படுகின்றமைக்கும் கடும் எதிர்ப்புகள் வரு கின்றன. ஆனால், இராணுவம் செய்வதை ஒருபோதும் பிழையென்று கூறவே முடியாது. அவர்கள் நாட்டின் பாதுகாப்புக்காகவே இவ்வாறான செயல்களைச் செய்ய வேண்டியுள்ளது.

இவ்வாறு அவர்கள் தங்களுக்கான ஒரு இடத்தை தேடிக்கொள்ளாவிடின் அது நமது தேசிய பாதுகாப்புக்கே பங்கம் விளைவித்து விடும். இராணுவத்தினர் வடக்கில் இருப்பதாலேயே தமிழர்களுக்கு பாதுகாப்பும் தங்கியுள்ளது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. இராணுவம் தற்போது உடைத்துள்ள வீடுகளில் எவரும் வாழவில்லை என்பதே உண்மை. அப்படியிருக்கையில், பாழடைந்த வீடுகளை உடைத்து நாட்டின் பாதுகாப்புக்காக பயன்படுத்துவதில் என்ன தவறு உள்ளது.

அதுமட்டுமல்லாது, வடக்கு என்பது தமிழர்களுக்கு மாத்திரம் சொந்தமான பகுதியில்லை. அங்கு அனைவருக்கும் சம உரிமை காணப்படுகிறது. இதே செயலை இராணுவம் தெற்கில் செய்தி ருந்தாலும் நாம் அதற்கு ஆதரவு வழங் கியிருப்போம்.

இவர்கள் செய்வது ஒரு போதும் பிழையல்ல. இதைத் தமிழர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். இராணுவத்தின் இச்செயற்பாடானது ஏதோ ஒரு வகையில் தமிழர்களுக்கும் நன்மை விளைவிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. இதனால், தமிழர்களும் இந்த செயற்பாட்டுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி இராணுவத்தினருடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

### வெள்ளை

சார்பில் முன்னிலையாகிவரும், மனித உரிமைகள் சட்டத்தரணியான கே.ரட்ணவேலும் பயணம் மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்காவுக்குச் செல்லும் மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், வெள்ளை மாளிகை உயர் அதிகாரிகள், அமெரிக்க வெளியுறவு அமைச்சக மூத்த அதிகாரிகள், செனட் சபை உறுப்பினர்கள், மற்றும் காங்கிர சின் முக்கிய உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை இந்தச் சந்திப்புக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் அமெரிக்கா பயணமாகியுள்ளனர். (த-5)

### வட பகுதிக்கு

மக்கலி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் வருகை தரவுள்ள நிலையிலேயே, ஏனைய வெளிநாட்டுத் தலைவர்களும் வடக்குக்கு வரத் திட்டமிட்டுள்ளனர்.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பதற்காக வருகை தரும், நியுஸிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் மக்கலி வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் செல்லவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

வடக்கில் நல்லிணக்கம், அதிகாரப்பகிர்வில் முன்னேற்றங்கள் ஏற்படுவதில் நியூ சிலாந்து அதிக ஆர்வம் கொண்டுள்ளதாகவும், தாம் அங்கு சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக தமது நாட்டுப் பிரதமருக்கு அறிக்கை அளிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (த-5)



# விளையாட்டுத் திணைக்களத்தின் வர்ண இரவு விழா 30 ஆம் திகதி

யாழ்ப்பாணம், நவ.1
வடக்குமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற விளையாட்டுத் துறையில் சிறப்பாகச் செயற்பட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைத் தெரிவு செய்து கௌரவிக்கும் வர்ண இரவு விழா நவம்பர் 30 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் விருதுகளை பெறுவதற்கு தகுதிவாய்ந்த பின்வரும் விளையாட்டு வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை தேசிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கையில் நடைபெறும் அல்லது இலங்கைக்கு வெளியே நடைபெறும் சர்வதேச போட்டியொன்றில் வட மாகாணம் சார்பாக வீரர் பங்குபற்றியிருத்தல்.

இலங்கைக்கு வெளியே நடைபெறும் சர்வதேசப் போட்டியொன்றில் அல்லது இலங்கையில் நடைபெறும் சர்வதேசப் போட்டியொன்றில் வட மாகாணம் சார்பாகவீரர்/வீராங்கனைகள் பங்குபற்றி பதக்கம் பெற்றிருத்தல்.

இலங்கையில் நடைபெறும் தேசிய சிரேஷ்ட/கனிஷ்ட போட்டியொன்றில் வட மாகாணம் சார்பாக வீரர் / வீராங்கனை பங்குபற்றி பதக்கம் பெற்றிருத்தல்.

வடக்கு மாகாண மட்ட மாவட்டங்களுக்கிடையிலான போட்டியொன்றில் மாகாண வீரர்/வீராங்கனைகள் பங்குபற்றி புதிய சாதனையொன்றினை நிலைநாட்டியிருத்தல்.

இந்த ஆண்டில் நடை பெற்ற போட்டியிலேயே மேற்படி சாதனைகளை நிலைநாட்டப்பட்டிருத்தல் வேண்டும். இதற்குத் தகுதியானவர்கள் (பாடசாலை மாணவர் அல்லாதவர்கள்) மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஊடாக பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம், வடமாகாணம், 16, செம்மணி வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு இம் மாதம்7 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.1
மாலுசந்தி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பி.ப 3.30 மணி
பொலிகண்டி வீண்மீன் விளையாட்டுக்கழகம் எதிர் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம்.

மாலை 4.30 மணி
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம். (த-23)

## நவஜீவன்ஸ், விண்மீன் ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம், நவ.1
மாலுசந்தி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் நவஜீவன்ஸ் வி.க., பொலிகண்டி விண்மீன் வி.க. ஆகியன வெற்றி பெற்றுள்ளன.



முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற பொலிகண்டி விண் மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பொலிகண்டி விண்மீன் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## கராத்தேயில் வெற்றி பெற்றோர்



யாழ்ப்பாணம், நவ.1
இலங்கைக் கராத்தே சம்மேளனம் நடத்திய வடக்கு மாகாண கராத்தே சுற்றுப் போட்டியில் சுண்டுக்குளி கிறீன் பீல்ட் கராத்தே கழகத்தின் சார்பில் பங்கு கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களின் விவரம் வருமாறு:-

14 வயது- 15 வயதுப் பிரிவு

பிரிவு-2
ரா.றொசான்- குமித்தே- தங்கப் பதக்கம், காட்டா வெள்ளிப்பதக்கம், சு.ஷீண் - குமித்தே- தங் கப்பதக்கம், காட்டா வெண்கலப் பதக்கம், வே.ஷிடான்- குமித்தே - வெண்கலப் பதக்கம், மோ.வி.பவித்திரன் - குமித்தே - தங்கப் பதக்கம்,

பிரிவு-3
அ.தனுசன்- குமித்தே, காட்டா தங்கப் பதக்கம், ரா.பிறா கான்-குமித்தே- தங்கப்பதக்கம், காட்டா வெண்கலப்பதக்கம்.

16 வயதுப் பிரிவு - 17 வயதுப் பிரிவு

பிரிவு 3
அ.இளங்கீரன் காட்டா குமித்தே வெள்ளிப் பதக்கம்.

21 வயதுக்கு உட்பட்டோர்

பிரிவு- 3
மே.வி.யனுஷன்- காட்டா குமித்தே- தங்கப் பதக்கம்.

21 வயதுக்கு மேற்பட்டோர்
ஜோ.பிரியனந்தன் - குமித்தே- தங்கப் பதக்கம், நி.தேவராஜா மனோகர்- குமித்தே - வெண்கலப் பதக்கம்.

6 வயது- 13 வயதுக்கு உட்பட்டோர்

காட்டாபோட்டி
வி.நிலவன்-தங்கப் பதக்கம், சு.சாள்ஸ்-தங்கப் பதக்கம், வி.நிவேதன்-தங்கப் பதக்கம், சி.சிந்துஜன்- தங்கப் பதக்கம், ஜொ.பிரவீண் - தங்கப் பதக்கம். (த-23)

## மன்னார் பிரதேச சபை வெற்றி



யாழ்ப்பாணம், நவ.1
உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மன்னார் மாவட்ட உள்ளூராட்சி திணைக்களங்களுக்கு இடையிலான மென்பந்து சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச சபை அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச சபை அணியை எதிர்த்து உள்ளூராட்சி திணைக்கள அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உள்ளூராட்சி திணைக்கள அணியினர் 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 23 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் விஸ்ணு 5 ஓட்டங்களைத் தனது அணி சார்பாகக் பெற்றார். பந்து வீச்சில் மன்னார் பிரதேச சபை அணி சார்பில் நிஷாமுதின் ஆர்கம், அன்ரனி, நிர்மலன் ஆகியோர் தலா 2 இலகுகளை வீழ்த்தினர்.

24 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் பிரதேச சபை அணி எதுவித இலக்குகளையும் இழக்காமல் வெற்றி இலக்கை அடைந்தது. இதில் மன்னார் பிரதேச சபை அணி வீரர்களான நிஷாமுதின் 11 ஓட்டங்களையும் கண்ணன் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். (த-23)

# கிண்ணத்தைத் தனதாக்கியது யாழ். இந்து மகளிர் கல்லூரி





வலி.வடக்கு, நவ.1
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சிரேஷ்ட மாணவ முதல்வர் அமரர் பொன் விபுலானந்தனின் 27 ஆவது ஆண்டு நிறைவு தினத்தையொட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபையினால் நடத்தப்பட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் பலம் வாய்ந்த அணிகளாக காணப்பட்ட போதிலும் இராமநாதன் கல்லூரி அணியினர் கூடைகளில் பந்தைப் போட எடுத்த முயற்சிகள் முதல் கால்பாதி ஆட்டத்தில் கைகூடவில்லை.

இதனால் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி 14:6 புள்ளிகள் என முன்னிலை வகித்தது. இரண்டாம் கால் பாதி ஆட்டத்திலும் இராமநாதன் கல்லூரி அணி முயற்சிகள் எடுத்த போதும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி 7:4 என முன்னிலையில் இருந்தது.


மூன்றாம் கால் பாதி ஆட்டம் மிகவும் இறுக்கமானதாகக் காணப்பட்டது. யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 12:10 புள்ளிகள் என இதில் வெற்றி பெற்றது.

இறுதி கால் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பெரும் முயற்சி எடுத்த போதிலும் இராமநாதன் கல்லூரி அணி 11:9 என முன்னிலை பெற்றது. ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி 42:31 புள்ளி கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சானுஜா 15 புள்ளிகளையும், திவ்வியா 11 புள்ளிகளையும் சுவர்ணமாலி 10 புள்ளிகளையும், அமிர்தாம்பிகை 6 புள்ளிகளையும் பெற்றனர்.

இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த சுபீசனா 10 புள்ளிகளையும், குணா 7 புள்ளிகளையும், கீர்த்தனா 5 புள்ளிகளையும், லதீனா 5 புள்ளிகளையும் ஜெனிபா 4 புள்ளிகளையும் பெற்றனர்.

போட்டியின் தொடர் ஆட்ட நாயகியாக இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த சுபீசனாவும், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சனுஸா ஆட்ட நாயகியாகவும் பந்தை மீளப் பெற்று கூடையில் போடும் சிறந்த வீராங்கனையாக, திவ்வியாவும் தெரிவு செய்யப்பட்டார்கள். மூன்றாம் இடத்தை கொக்குவில் இந்துக்கல்லூரி பெற்றுக்கொண்டது. (த-86)



# புதிய விதிகளால் டோனி அதிருப்தி

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் நடைமுறைக்கு வந்துள்ள புதிய விதிகள் தொடர்பாக இந்திய அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். இவ் விதி காரணமாக பந்துவீச்சாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



மூன்றரை மணித்தியாலத் துடுப்பாட்டத்தில் எதிரணி நான்கு, ஆறு ஓட்டங்களை எடுக்க முயன்று கொண்டிருக்கும் நிலையில், பந்துவீச்சாளர்கள் தடுமாறுகின்றனர்

கடந்த ஆண்டு ஒப்ரோபர் 30ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி விதிகளின் அடிப்படையில், ஒவ்வோர் இனிங்ஸிலும் 2 புதிய பந்துகள் பயன்படுத்தப்படுவதோடு, களத்தடுப்பில் சாதாரண ஓவர்களில் 30 யார் கோட்டுக்கு வெளியே 4 களத்தடுப்பாளர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுகின்றனர். முன்பிருந்த 5 களத்தடுப்பாளர்களுக்குப் பதிலாக, தற்போது ஒருவர் குறைந்து 4 களத்தடுப்பாளர்களே எல்லைக் கோட்டில் காணப்படும் நிலையில், பந்துவீச்சாளர் சற்று எல்லை மாறினாலேயே பந்து நான்கு ஓட்டங்களுக்குச் செல்வதாக மகேந்திர சிங் டோனி குறிப்பிட்டார்.

இதனால் சில பந்துவீச்சாளர்கள் ஏமாற்றமடைந்துள்ளதாகத் தெரிவித்த மகேந்திரசிங் டோனி, பந்துவீச்சாளர்களுக்குப் பதிலாக பந்துவீச்சுச் சாதனங்களைப் பயன்படுத்த முடியும் என ஏமாற்றத்துடன் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

புதிய விதி மாற்றங்கள் பந்துவீச்சாளர்களுக்கு புதிய சவாலை வழங்குவதாகக் குறிப்பிட்ட மகேந்திரசிங் டோனி, எப்போதுமே விதி மாற்றங்களின் பின்னர் பந்துவீச்சாளர்களே அதிகம் தங்களை மாற்றிக் கொண்டு சிறப்பாகச் செய்திருக்கிறார்கள் எனக் குறிப்பிட்டார். மூன்றரை மணித்தியாலத் துடுப்பாட்டத்தில் எதிரணி நான்கு, ஆறு ஓட்டங்களை எடுக்க முயன்றுகொண்டிருக்கும் நிலையில், பந்துவீச்சாளர்கள் தடுமாறுவதாகவும் டோனி குறிப்பிட்டார்.

பந்துவீச்சாளர்களுக்கும் உதவிகளை வழங்கும் ஆடுகளங்கள் தேவைப்படுகின்றன எனக் குறிப்பிட்ட மகேந்திர சிங் டோனி, ஓர் ஆடுகளமானது வேகப்பந்து வீச்சாளர்களுக்கும், சுழற்பந்து வீச்சாளர்களுக்கும், துடுப்பாட்ட வீரர்களுக்கும் உதவிகளை வழங்குகின்றதாக அமைய வேண்டும் எனக் குறிப்பிட்டார். (த)

# மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இந்தியக் குழாம்



இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ள மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இந்திய டெஸ்ட் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2 போட்டிகளுக்குமான குழாமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.

சச்சின் டெண்டுல்கரின் இறுதி டெஸ்ட் தொடராக அமையவுள்ள இந்தத் தொடரில் பங்குபற்றுவதற்கு மகேந்திரசிங் டோனி தலைமையில் 15 பேர் கொண்ட குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு இந்தியாவில் இடம்பெற்ற ஆஸ்திரேலியாவுக்கெதிரான டெஸ்ட் தொடரில் 4-0 என்ற கணக்கில் தொடர் வெற்றியைப் பெற்றுக் கொண்ட இந்தியக் குழாமில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.


அந்தக் குழாமில் இடம்பெற்றிருந்த ஹர்பஜன் சிங், அஷோக் டின்டா ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். அதில் இடம்பெற்று சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தியிருந்த ரவீந்திர ஜடேஜா காயம் காரணமாக இக்குழாமில் சேர்க்கப்படவில்லை. அவருக்கு தோட்பட்டை உபாதை ஏற்பட்டுள்ளது.

குழாமில், துடுப்பாட்ட வீரரான றோகித் சர்மா, உமேஷ் யாதவ், ஷமி அஹமட், அமித் மிஷ்ரா ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தொடர் நவம்பர் 6ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதுடன், முதலாவது போட்டி கொல்கத்தாவிலும், இரண்டாவது போட்டி 14ஆம் திகதி மும்பாயிலும் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்: ஷீகர் தவான், முரளி விஜய், செற்றேஸ்வர் புஜாரா, சச்சின் டெண்டுல்கர், விராத் கோலி, ரவிச்சந்திரன் அஷ்வின், புவனேஷ்வர் குமார், பிரக்ஜான் ஓஜா, அமித் மிஷ்ரா, அஜின்கியா ரஹானே, உமேஷ் யாதவ், றோகித் சர்மா, இஷாந்த் சர்மா. (த)

# இலங்கைக்கெதிரான தொடரில் கேன் வில்லியம்சன் இல்லை



இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட தொடரில் நியூசிலாந்து அணியின் கேன் வில்லியம்சன் பங்குபெற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்டுள்ள உபாதை காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷ், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் நியூசிலாந்து அணி பங்குபற்றிவரும் நிலையில், நேற்று முன் தினம் இடம்பெற்ற முதலாவது போட்டியில் கேன் வில்லியம்சன் உபாதைக்குள்ளாகியிருந்தார்.

களத்தடுப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது உபாதை ஏற்பட்டதோடு, அவர் உடனடியாகவே மைதானத்தை விட்டு வெளியேறியதோடு, எக்ஸ் கதிர்ப் பரிசோதனைக்கும் உள்ளாகியிருந்தார். எக்ஸ் கதிர்ப் பரிசோதனையின் போது அவரது பெரு விரலில் முறிவு ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவர் தற்போது நியூசிலாந்துக்குத் திரும்பியுள்ளார்.

அவருக்கு ஏற்பட்ட உபாதை காரணமாக அவரால் 6 வாரங்களுக்குக் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற முடியாது எனவும், அவர் நியூசிலாந்தில் வைத்து சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வார் எனவும் நியூசிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இலங்கையில் இடம்பெறவுள்ள தொடரில் நியூசிலாந்தின் சிரேஷ்ட வீரர்களான பிரென்டன் மக்கலம், றொஸ் ரெய்லர் இருவரும் பங்குபற்றாத நிலையில், அத்தொடருக்கான தலைவராக கேன் வில்லியம்சனே செயற்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# கிறிஸ் புரூமிக்கு தங்க சைக்கிள் விருது

சிறந்த சைக்கிள் ஓட்டப் பந்தய வீரருக்கு அளிக்கப்படும் 2013ஆம் ஆண்டுக்கான தங்க சைக்கிள் விருதை பிரிட்டனைச் சேர்ந்த கிறிஸ் புரூமி வென்றார்.

இவர், டூர் டீ பிரான்ஸ் சம்பியன் பட்டத்தை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தங்க சைக்கிள் விருதைப் பெறும் 2ஆவது பிரிட்டன் பிரஜை சேர்ந்தவர் என்ற பெருமையை புரூமி பெற்றார்.

கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட தங்க சைக்கிள் விருதை பிரிட்டன் வீரர் சர் பிராட்லி விஜ்ஜின்ஸ் வென்றமை குறிப் பிடத்தக்கது. இந்த விருது 1992ஆம் ஆண்டு முதல் அளிக்கப்பட்டு வருகிறது. பிரான்ஸின் வெலோ மகஸின்' தங்க சைக்கிள் விருது வழங்கும் நிகழ்ச்சியை ஏற்படுத்தியது. விருது பெறுவோரை பத்திரிகையாளர்கள் வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்வர்.


ஸ்பெயினைச் சேர்ந்த அல்பெர்டோ கன்டடர், இந்த விருதை அதிகபட்சமாக 3 முறை தொடர்ச்சியாக வென்றுள்ளார். (த)

# தடைக்குப் பின்னர் கிடைத்த முதல் வெற்றி

ஊக்க மருந்து பயன்படுத்திய குற்றத்துக்காக 4 மாதங்கள் தடை விதிக்கப்பட்டிருந்த குரோஷியாவின் ரென்னிஸ் வீரர் மரின் சிலிக் முதல் வெற்றி பெற்றுள்ளார்.

குரோஷியாவின் மரின் சிலிக், பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் வெற்றி பெற்றுள்ளார்.

ஊக்க மருந்து தடைக்குப்பின் களமிறங்கிய முதல் தொடரின் முதல் ஆட்டத்திலேயே வெற்றி பெற்றுள்ளதால் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளார் சிலிக்.




அவர் கூறுகையில், கடந்த விம்பிள்டன் போட்டிக்குப் பிறகு இந்தப் போட்டியில் விளையாடி வெற்றி பெற்றமை மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும், முதன்முறையாக ரென்னிஸ் விளையாடுவது போல உணர்வை நான் பெற்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

இவர் பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸின் முதல் சுற்றில் 5-7, 6-1, 6-4 என்ற செற் கணக்கில் நெதர்லாந்தின் சிஜிலிங்கை வீழ்த்தினார்.

இவர் தனது அடுத்த சுற்றில் பலம் வாய்ந்த ஆர்ஜென்ரீனாவின் மாட்டின் டெல் பொட்ரோவுடன் மோதவுள்ளார். (த)

# தென்னாபிரிக்க அணி 1 ஓட்டத்தால் வெற்றி




ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில்தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றுள்ளது.

ஷார்ஜாவில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 49.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியின் இரண்டாவது பந்திலேயே இலக்கை இழந்த அவ்வணி, 8 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது. இறுதி நேரத்தில் வெய்ன் பார்னெலின் அதிரடி மூலம் அவ்வணி 183 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணிசார்பாக வெய்ன் பார்னெல் 70 பந்துகளில் 56 ஓட்டங்களையும், டேவிட் மில்லர் 51 பந்துகளில் 37 ஓட்டங்களையும், கிறேம் ஸ்மித், ஜே.பி.டுமினி இருவரும் தலா 20 ஓட்டங்களையும்பெற்றனர். பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சயீட் அஜ்மல் 30 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், சயிட் அப்ரிடி 37 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சொஹைல் தன்வீர் 33 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், மொஹமட் இர்பான் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

184 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 46.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 182 ஓட்டங்களை மாத்திரம் பெற்று ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந்தது.

4 ஓட்டங்களுக்கே முதலாவது இலக்கை இழந்த போதிலும், இரண்டாவது இலக்குக்காக 71 ஓட்டங்கள் பகிரப்பட்டன. அதன் பின்னர் 4 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களுடன் பலமான நிலையிலும் காணப்பட்ட வேளையில் இறுதி 6 இலக்குகளையும் 17 ஓட்டங்களுக்கே இழந்து அவ்வணி தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக அஹமட் ஷெஷாத் 92 பந்துகளில் 58 ஓட்டங்களையும், மிஸ்பா உல் ஹக் 49 பந்துகளில் 31 ஓட்டங்களையும், மொஹமட் ஹபீஸ் 39 பந்துகளில் 28 ஓட்டங்களையும், உமர் அமின் 38 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக இம்ரான் தாஹிர், வெய்ன் பார்னெல் இருவரும் தலா 3 இலக்குகளையும், மோர்னி மோர்க்கல், லொன்வபோ சொற்சொபி இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக வெய்ன் பார்னெல் தெரிவானார்.

(த)

## தென்னாபிரிக்க– இந்தியா அட்டவணை அறிவிப்பு

தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. இத்தொடர் விபரங்கள் அண்மையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது போட்டி அட்டவணை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய அணி தென்னாபிரிக்காவில் 3 டெஸ்ட் போட்டிகளிலும், 7 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், இரண்டு 20/20 சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபற்றவிருந்த போதிலும், அத்தொடருக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எதிர்ப்பு வெளியிட்டிருந்தது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியம், சர்வதேச கிரிக்கெட் சபையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஹரூன் லோகார்ட் நியமிக்கப்பட்டதையடுத்தே இரு நாட்டுக் கிரிக்கெட் சபைகளுக்கு மிடையில் பிணக்கு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் இரு நாட்டுக் கிரிக்கெட் சபைகளும் இது தொடர்பாகப் பேச்சு வார்த்தை நடாத்தியிருந்ததோடு, இப்பேச்சுவார்த்தைகளின் இறுதியாக இந்திய அணி 2 டெஸ்ட் போட்டிகளிலும், 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் தென்னாபிரிக்காவில் பங்குபற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இத்தொடர் டிசெம்பர் 5ஆம் திகதி ஒருநாள் சர்வதேசப் போட்டியுடன் ஆரம்பித்து டிசெம்பர் 30ஆம் திகதி முடிவடையவுள்ளது.

போட்டி அட்டவணை:

டிசெம்பர் 5 - முதலாவது ஒ.நா.ச.போட்டி - ஜொஹன்னர்ஸ் பார்க்

டிசெம்பர் 8 - இரண்டாவது ஒ.நா.ச.போட்டி - டேர்பன்

டிசெம்பர் 11 - மூன்றாவது ஒ.நா.ச.போட்டி - செஞ்சூரியன்

டிசெம்பர் 14 - 15 - பயிற்சிப் போட்டி - பெனோனி

டிசெம்பர் 18 - 22 - முதலாவது டெஸ்ட் - ஜொஹன்னர்ஸ் பார்க்

டிசெம்பர் 26 - 30 - இரண்டாவது டெஸ்ட் - டேர்பன்

(த-400)

"Green Grass அமர்க்கள தீபாவளி 2013"
இன்னிசை இரவு விருந்து
இடம் : சங்கிலியன் மண்டபம், கிறீன் கிறாஸ்
33, ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Dj Music
Buffet Dinner
Audience Talents
Dance (cultural & western)
காலம் : 02.11.2013 மாலை 7.00
590/- மட்டுமே...
நுழைவுச்சீட்டுக்களை முற்பதிவு செய்துகொள்ள இன்றே அழையுங்கள் 0777803210
021 222 1686 | 021 222 4385 | 021 7201194 | www.jaffnagreengrass.com | greengrassjaffna@gmail.com

அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2013
சித்தியடைந்த மாணவர்களுக்கான
பரிசளிப்பு நிகழ்வு
எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 03.11.2013 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நாச்சிமார் கோவிலடி (ராஜா கிறீம் ஹவுஸ்) சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இயக்குநர்

நாளைய தீபாவளி தினத்தில் இரட்டிப்பு வெகுமதி
விசா ஆலோசனையில் இணைந்தால்
Laptop (மடிக்கணினி) இலவசம்
20 % கட்டணச் சலுகையும்
(நிபந்தனைகளுடன்)
02/11/2013 காலை 8.30 - மாலை 5.30 வரை
உங்களின் வரவுக்காக திறந்திருக்கும்
கனடா, போலந்து, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, இத்தாலி படிக்க உழைக்க சட்ட ஆலோசனைகளும் Visit visa, Skill misnation ஆலோசனைகளும்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

கொங்கிறீட் கற்கள் விற்பனைக்கு
¾", ½" சல்லியினால் உருவாக்கப்பட்ட கொங்கிறீட் கற்கள், கருங்கல் சல்லிகள் என்பன விற்பனைக்குண்டு
தொடர்பு:077 340 0351

NALIN IT தீபாவளியை முன்னிட்டு
10ற்கும் மேற்பட்ட வகை LAPTOPS 46,500/= தொடக்கம்
HP Touch laptop i3,4Gb,500Gb,14' orignal windows8 71,000/=
Assembled,Branded Systems 42,500/= தொடக்கம்
என்றும் இல்லாத விலைக்கழிவுகளுடனும்....... வெகுமதிகளுடனும்... இன்று மட்டும்.......
வடக்கின் முன்னணி கணனி வலையமைப்பு
195/4 Parameswara Junction, Palaly Road,Jaffna. TP-0212221121 0777667975
116G,K.K.s Road, Chunnakam. TP-0212242222 0777140431

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.